பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 24 வெள்ளிக்கிழமை (07.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 162

# நாடு கடந்த தமிழீழ அரசை முறியடிக்க அரசு மும்முரம்

## வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதர்கள் ஊடாக நடவடிக்கை



கொழும்பு, மே 07

நாடு கடந்த தமிழீழ அரசொன்றை அமைப்பதற்குப் புலிகள் வெளிநாடுகளில் மேற்கொண்டு வரும் முயற்சிகளை முறியடிப்பதில் அரசு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது என்றும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு இலங்கை அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது என்றும் வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றில் கூறினார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சட்ட விரோதமாக மணல் ஏற்ற முயன்றோர் படையினரால் கைது!

யாழ்ப்பாணம், மே 7

அரியாலை முள்ளிப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச்செல்ல முயன்றவர்களைப் படையினர் கைது செய்தனர்.

நேற்று மாலை அரியாலை படைமுகமைச் சேர்ந்த படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது டிராக்டர்,ரெயிலர் ஆகியவற்றில் சட்டவிரோதமாக மணல் கடத்த சென்ற போது இருவரை படையினர் பிடித்தனர். அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### கல்விச்சுடர்

உள்ளே

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாக்கள்.

## வெள்ளைக்கொடியுடன் வந்த புலிகள் சுட்டுக்கொல்லப்படவில்லை

# யுத்தக் குற்றம் குறித்து விசாரணை நடத்தப்பட்டால் உண்மைகளைச் சொல்வேன் என்கிறார் பொன்சேகா



கொழும்பு, மே 7

''யுத்தக் குற் றங்கள் இடம்பெற்றன என்று ஏதேனும் தரப்புக்கு முறைப்பாடுகள் ஏதும் செய்யப்பட்டால், அந்த முறைப்பாட்டில் குறிப்பீடப்பட்டிருக்கும் யுத்தக் குற்றம் தொடர்பில் எனக்கு ஏதேனும் உண்மை தெரிந்திருந்தால் அது தொடர்பில் விசாரணை செய்யும் தரப்புக்கு நான் மறைக்காமல் அந்த உண்மைகளைத் தெரிவிப்பேன்.''

இவ்வாறு ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

''இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடி ஏந்தி படையினரிடம் சரணடைய வந்த புலித்தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று கூறப்படுவதில் உண்மையில்லை. அப்படியானதொரு சம்பவம் இடம்பெறவில்லை'' என்றும் பொன்சேகா கூறினார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் மாணவி ஒருவரைக் காணவில்லை படையினர் இரவிரவாக தேடுதல் நடத்தினர்

சண்டிலிப்பாய், மே 7

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள விவேகானந்தா வித்தியாசாலை மாணவியான பதினொரு வயதுச் சிறுமியை நேற்று நண்பகலுக்குப் பின்னர் காணவில்லை என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த நகுலேஸ்வரம் ரேணுகா (வயது 11) என்ற மாணவியையே காணவில்லை.

இதுபற்றி கூறப்படுவதாவது:-

நேற்றுக்காலை பாடசாலைக்குச் சென்ற

(24ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் இறுதிக்கட்ட சம்பவங்களை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, மே 7

இலங்கையின் உள்நாட்டு மோதலின் இறுதிக்கட்டத்தில் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகள் மீறப்பட்டன என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கான ஆணைக் குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

சர்வதேச மரபுகளை மீறும் நடவடிக்கைகள் இடம்பெற்றனவா, அப்படி இடம்பெற்றால் அதற்கான சூழல் மற்றும் அதற்கான பொறுப்பாளர்கள் யார் என்பவை குறித்தும் ஆணைக்குழு கவனம் செலுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கம் மற்றும் கற்றுக் கொள்ளப்பட்ட பாடங்கள் தொடர்பான இந்த ஆணைக்குழுவில் இலங்கையையும், வெளிநாட்டையும் சேர்ந்த ஏழுபேர் அடங்கியிருப்பர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சமீபகால மோதலின் போது அனுபவித்த விடயங்கள் மூலமாக கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் மற்றும் தேசியநல்லிணக்கம் தொடர்பாக ஆராய்வதற்கான இந்தக் குழுவை ஜனாதிபதி விரைவில் நியமிப்பார்.

கடந்தகால மோதல் மற்றும் அதனால் ஏற்பட்ட துயரங்கள் குறித்து மீட்டுப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் தற்போது இருப்ப

(24ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை

## கவலை தெரிவிக்கிறார் இங்குள்ள ஐ.நா. பிரதிநிதி

கொழும்பு, மே 7

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் வாழ்வாதாரத்துக்கான எதுவித வாய்ப்பும் அற்ற நிலையிலேயே வன்னியிலுள்ள தமது பகுதிகளில் மீளக் குடியேற்றப்படுகின்றனர் என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நெய்ல் புஹ்னே தெரிவித்துள்ளார். அரசு மீளக்குடியேறுபவர்களுக்கு வழங்கும் நிதியுதவி மிகத் தாமதமாகவே அவர்களைச் சென்றடைவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இடம் பெயர்ந்த மக்கள் தமது பகுதிக

(24ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் சட்ட விரோதச் செயல்கள் யாவும் களையப்படும் என்று உறுதியளிப்பு

## பாதுகாப்பு செயலர் வழங்கியதாக மேல்நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு, இதுவரையும் நிகழ்ந்த சட்டவிரோதச் செயல்கள் யாவும் களையப்படும் என்று பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதன்மூலம் சகல சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கும் முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம். இதை உணர்ந்து சகல தரப்பினரும் செயற்பட வேண்டும்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மேல்நீதிமன்றத்தில் நேற்று இடம்

(21ஆம் பக்கம் பார்க்க)

E.SABALINGAM TROPHY
LIMITED 50 OVER
CRICKET MATCH

JAFFNA HINDU COLLEGE
VS
KOKUVIL HINDU COLLEGE

DATE-
08.05.2010
8.30 a.m.

ஊடக அனுசரணை உதயன்

VENUE - JAFFNA HINDU COLLEGE GROUND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - கொக்குவில் இந்துக்கல்லூரிகள் மோதும் 'சபாலிங்கம்' வெற்றிக் கிண்ண ஒருநாள் போட்டி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் மோதும் சபாலிங்கம் வெற்றிக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்றாவது தடவையாக இப் போட்டியில் இரு கல்லூரிகளும் மோதவுள்ளன. இந்தப் போட்டிக்கு யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு ஆர்.நிறோஜனும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு கே.நிறோஜனும் தலைமை தாங்குகின்றனர்.

முன்னர் நடந்த இரு போட்டிகளிலும் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது என்பதுடன் இரு கல்லூரிக்கும் இடையிலான 'இந்துக்களின் போர்' இருநாள் பெரும் துடுப்பாட்டப் போட்டியை அடுத்து இப் போட்டி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 15 ★ 03 ★ 1929



விண்ணில் 08 ★ 04 ★ 2010

### சி.பெனடிக்ற் மகாலிங்கம்

கடந்த 08.04.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு அனுதாபம் கூறி துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (08.05.2010) சனிக்கிழமை காலை 6 மணிக்கு புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குருசுமதவடி,
ஆனைக்கோட்டை. (97914) பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி மகாலிங்கம்



மந்துவில் மேற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாலிங்கம் நேற்று (06.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், மகாராணி, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் கோகேஸ்வரி, தவமலர், பராசா, இரஞ்சிதமலர், யோகமலர் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சின்னத்தம்பி, சேனாதிராஜா (ஓய்வூதியர் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), கணேசன், கனகசபை (சாரதி இ.போ.ச.), ராஜேஸ்வரி, காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (ஜெயம்) ஆகியோரின் மாமனாரும், கலைச்செல்வி (மருந்தாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), கயல்விழி (சுவிஸ்), இளங்கோ (பிரான்ஸ்), இளந்திரையன் (ஜேர்மனி), சிவாஜினி (ஆசிரியர், குடமியன் அ.த.க. பாடசாலை) பிரகாஸ், சிவலோசினி (கால்நடை கூட்டுறவுச் சங்கம்), கஜதீபன், கஜனி, கௌசிகா, இளவேணி, இளங்கோவன் (ஆசிரியர், வவுனியா), இளமாறன், நிரேஸ், நிரோஜன், நிர்மலன், நவயுகன், நர்தனா, தர்சிகா, டயானா, சுரேகா, அஜந்தன் (சுவிஸ்), நிவேதா, வர்ணலா, தர்சிகா, கௌந்தினி, மதுஜா, (வேல்முருகன் அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை), சிறீஸ் கந்தராஜா (சுவிஸ்), சிவகுமார் ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வினி (சுவிஸ்), வர்சினி (சுவிஸ்), கீர்விதன், நிமல் ராஜா, பிரதீபன், ராஜ்குமார் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இலுவன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் மேற்கு, தகவல்:
கொடிகாமம். குடும்பத்தினர்.

### இரத்தினம் தனபாலசிங்கம்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தனபாலசிங்கம் நேற்று (06.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, பாக்கியலட்சுமி, மனோன்மணி, பஞ்சலிங்கம், பேரின்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தம்பிள்ளை மற்றும் செல்வராஜா, மகேந்திரன், பரமநாதன், நாகேஸ்வரி, பார்வதிப்பிள்ளை, சிற்றம்பலம், புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் [illegible]க்கிரியைகளுக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் மேற்கு, தகவல்:
ஊர்காவற்றுறை. (97919) குடும்பத்தினர்.


## அமைச்சர் டக்ளஸுக்கு குடாநாட்டில் இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், மே 7

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்ற பின் இன்று யாழ்ப்பாணம் வரும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று பி.ப. 2 மணிக்கு யாழ். செயலகத்தில் யாழ்.மாநகர சபை வழங்கும் வரவேற்புடன் குடாநாட்டில் பல பகுதிகளிலும் இன்று தொடர்ந்து வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1)

## மீன்பிடி வலையில் சிக்கிய முதலைக் குட்டி கரைக்கு

கொழும்புத்துறை கடற்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு மீனவரின் வலையில் முதலைக் குட்டியொன்று அகப்பட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுமார் ஐந்து அடி நீளமான இந்த முதலைக் குட்டி மீனுக்காகப் பாய்ச்சப்பட்டிருந்த வலையில் அகப்பட்டதாகவும் பெரும் சிரமப்பட்டு அதை மடக்கிக் கட்டி கரை சேர்த்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்த முதலைக்குட்டியை பெருமளவான மக்கள் பார்த்துச் செல்கின்றனர். அதனை மீண்டும் கடலுக்குள் விடப் போவதாக மீனவர் தெரிவித்தனர். (1-135)

## முதியோர் இல்லத்தில் நாவுக்கரசர் குருபூசை

வழக்கம்பரை, சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும். இந்த நிகழ்வில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (1)


**முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை**
விசேட கருத்தரங்கு இன்று (வெள்ளி)
நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை
கட்டணம் 200/=
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்ப்பாணம்.

**யாழ் - கொழும்பு வான் சேவை**
ஆசனப் பதிவுகளிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.
T.P. :- 0777199319, 0777199352, 0779770027 (97832)

**தேவை**
Granton விளம்பர நிறுவனத்திற்கு முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேவை.
தகைமை: O/L and A/L
தொடர்புக்கு: 077-3466511

**வேலையாள்கள் தேவை**
* தங்கநகை ஆய்விற்கான பெண்கள் (கணனி முன்னறிவுடையோர்)
* Bill Clerk (ஆண்கள், பெண்கள்)
14, சிறி வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.
0212225495

**விற்பனைக்கு**
தெல்லிப்பளை, துர்க்காபுரம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அருகில் 2பரப்புக் காணி, வீடு, கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விலை-13 லட்சம்.
இதே இடத்தில் 3பரப்புக் காணி, 20 தென்னை, கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. விலை-6 லட்சம்.
தொ.பே: 0717524218

**கார் விற்பனைக்கு**
MITSUBISHI GALLANT 13 சீரீ XXXX இலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. 0718797606

## வாழ்த்துகின்றோம்

யாழ்.குடாநாட்டு மக்களின் கூடிய விருப்பு வாக்குளைப் பெற்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சு பதவியைப் பொறுப்பேற்று யாழ்ப்பாணம் வருகைதரும் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களை வருக வருக வென வரவேற்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## மக்கள் சேவையாளனுக்கு மகத்தான வரவேற்பு...!



மூன்று தசாப்தங்களாக இடர்பட்ட மக்களின் துயர் போக்க, விருப்பு வாக்கில் முன்னிலை பெற்று மக்களுக்கு சேவை செய்ய யாழ்.குடாநாட்டிற்கு வருகைதரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் 'மக்கள் தொண்டன்'

**டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை வருக வருக என அன்புடன் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்,
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், மருதங்கேணி

## பாராட்டும் நன்றி அறிதலும்





கௌரவ அமைச்சர் திரு.கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீண்டும் பாரம்பரிய கைத்தொழில், சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றதை மகிழ்வுடன் பாராட்டும் இவ்வேளை

எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் எமது கல்வி நிறுவனத்தினை ஆரம்பித்து வைத்து அதற்கான நிதி உதவியினை மகேஸ்வரி நிதியத்தினூடாக தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற கௌரவ அமைச்சர், மகேஸ்வரி நிதிய முகாமையாளர் த.ரஜீவ், வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோருக்கு நன்றி அறிதலை தெரிவிப்பதுடன் எமது பகுதி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றும் இந் நிதியம் மேலும் மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
நியூநிட்டன் அக்கடமி, குடத்தனை.

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
(Centre for International Language Studies) No.3, 2nd Lane Palaly Road, Jaffna. (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம் எமது நிறுவனம் மட்டுமே.
குறிப்பு: July மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மொழியின் புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV.Reg.No W/A 76795
Tel-0774842464/ 0213216928/ 0779927117 (சி/567466)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மகேஸ்வரன்

(ஓய்வூதியர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி மகேஸ்வரன் (ஓய்வூதியர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) நேற்று (06.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், பாலநாகேஸ்வரி, தேமலா (அரசினர் வைத்தியசாலை, புத்தூர்), உஷாநந்தினி (கனடா), ஜெயநந்தினி, ஜீவநந்தினி ஆகியோரின் தகப்பனாரும், சுவேந்திரன், இராதாகிருஸ்ணன் (பிரதேசசபை நூலகம், நீர்வேலி), நந்தகுமார் (கனடா), மணிவண்ணன், ராஜ்குமார் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05.2010) வியாழக்கிழமை புத்தூர் அந்திரானை இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குமாரசாமி வீதி, தகவல் :
புத்தூர் கிழக்கு, புத்தூர். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# 12 ஆயிரம் தமிழ், இளைஞர் யுவதிகள்; பதில் கூறாமல் அரசு ஒளித்தது ஏன்?

போர் முடிவுற்ற வேளையிலும், அதன் பின்னரும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட மற்றும் தாமாகச் சரணடைந்த தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கையை அரசு உடனடியாக நாடாளுமன்றத்தில் வெளியிடவேண்டும் - சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றிய ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்கா வலியுறுத்தினார்.

கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமை ஆகிய இரண்டு நாள்களிலும் அவசரகால்ச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின் போது, அனுரகுமார திஸநாயக்கா மட்டுமன்றி, ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவும், விவாதத்தில் பங்குபற்றிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிடப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகளின் நிலை பற்றி எடுத்துச்சொன்னார்கள். அவர்களை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

போரைத் தொடர்ந்தும் அதன் பின்னரும் மட்டுமன்றி போருக்கு முன்னரும் ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் என்ற போர்வையுடன் கைதுசெய்யப்பட்டு, மனிதச் சித்திரவதைக் கூடங்களென சர்வதேச ரீதியில் முத்திரையிடப்பட்ட இராணுவ வதை முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களை நீதிமன்றங்களில் நிறுத்தி உண்மை, பொய், சந்தேகங்களை வெளிக்கொணரும் எண்ணம் தானும் அரசுத் தரப்புக்கு இல்லை. உத்தேசமாக 12 ஆயிரம் இளைஞர், யுவதிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்குப் பதிலாக அவர்கள் நரகத்தில் உழலும் ஜந்துக்களாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சர்வதேச மனிதஉரிமை அமைப்புகள் கவலை வெளியிட்டிருக்கின்றன.

ஆனால், அந்த இளைஞர், யுவதிகள் எத்தகைய நிலையில் உள்ளார்கள் என்பதனை வெளிச்சப்படுத்தும் எண்ணந்தானும் அரசுக்குக் கிஞ்சித்தும் இல்லை. அவர்களும் மனிதர்களே என்று கருதிச் செயற்படும் நோக்கும் போக்கும் தென்படவே இல்லை.

அதன் பிரதிபலிப்பே, முழுக்க முழுக்க மனிதாபிமான உணர்வுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சரி சிங்கள எம்.பிக்களும் சரி சரணடைந்த மற்றும் படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளை விடுவிக்குமாறு நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தமையாகும்.

தடுப்புக் காவலில், சிறைச்சாலைகளில், புனர்வாழ்வு நிலையங்கள் என்ற பெயரில் இயங்கும் சித்திரவதைக் கூடங்களிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளை அரசு தனது நல்லெண்ணத்தைக் காட்டி விடுவிக்குமாறு கேட்டிருந்தனர். அவர்களின் உண்மையான எண்ணிக்கையை வெளியிடுமாறு வலியுறுத்தினார்கள்.

ஆனால், அரசாங்கத் தரப்பினர், மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, கோரிக்கைகளுக்கு பதில் சொல்லத் திராணியற்றவர்களாக, விரும்பாதவர்களாக வாய்மூடி மௌனிகளாக இருந்துவிட்டு, அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணையைத் தங்களது எண்ணிக்கைப் பலத்தை கையில் எடுத்து தமிழ் இளைஞர்களின் நிலை குறித்து எதுவுமே தெரிவிக்காமல், கடையை மூடிவிட்டார்கள். மக்களின் ஜன நாயக உரிமைகளையும் அவற்றோடு ஒன்றிய மனித உரிமைகளையும் துச்சமென மதித்துச் துவம்சம் செய்யும் அவசரகாலச் சட்டத்தின் கீழான ஆட்சி முறைக்கு பழக்கப்பட்டவர்கள், அதில் ருசி கண்ட பூனையாக மாறிவிட்டவர்கள், இனிமேல் ஜனநாயக விழுமியங்களையும் கோட்பாடுகளையும் பேணுவார்கள், ஏன் மதிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது என்பதற்கான முதலாவது சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது!

இலங்கையில் ஜனநாயக ஆட்சிமுறை என்ற பதம் துட்டுக்கு எந்தளவு என்ற நிலை மிகவிரைவில் ஏற்படும் என்பதற்கான குறியீடு ஒன்றை ஏழாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் அரச தரப்புச் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வளவுதான்! இதற்கு மேல் இந்த நாட்டின் பிரஜைகள், அவர்கள் சிறுபான்மையினராக இருப்பினும் சரி, பெரும்பான்மையினராக இருப்பினும் சரி ஜனநாயக மாண்புகள், மனித விழுமியங்கள் என்று எதனையும் உச்சரிக்க முடியாது போகினும் ஆச்சரியம் இல்லை.

# யாழ். மீன்பிடித்துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவுஸ்திரேலிய அரசு பெரும் பங்களிப்பை வழங்கும்

## வலைத்தொழிற்சாலைத் திறப்பு விழாவில் உயர் ஸ்தானிகர்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணத்தின் வளமான கலாசாரத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் மீன்பிடித்துறை பெரும் பங்களித்து வருகிறது. யாழ். மீன்பிடித்துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவுஸ்திரேலியா பெரும் பங்களிப்பை வழங்கும். அதன் முதற்கட்டமாக மீன்பிடி வலைத்தொழிற்சாலை நிறுவுவதற்கு நாம் உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

இவ்வாறு, அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் காதி குலுக்மன் அம்மையார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் குருநகரில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி வலைத் தொழிற்சாலையை வைபவரீதியாகத் திறந்து வைக்கும் நிகழ்வு கியூடெக் - கரித்தாஸ் யாழ். மாவட்ட இயக்குநர் அருட்திரு. சி.ஜி. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தொழிற்சாலையை நாடாவை வெட்டி வைபவரீதியாகத் திறந்துவைத்தார். அதன் பின்னர் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தத் திட்டத்துக்கு அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநில அரசு நிதி வழங்கியுள்ளது.

2004இல் சுனாமியால் பாதிப்படைந்த இலங்கை மக்களுக்கு உதவவேண்டும் என்ற விக்டோறியா மக்களின் கோரிக்கைக்கு ஏற்பவும், ஏனையோரின் வேண்டுகோளுக்கு ஏற்பவுமே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைத் திட்டமானது இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பிரதேசங்களுக்கு விக்டோறிய மாநில அரசினால் ஆதரவளிக்கப்பட்ட பல திட்டங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்குப் பிரதேசங்களின் மீள் கட்டமைப்பு ஏற்படும் காலத்தில் இந்த உதவித் திட்டம் கிடைத்திருப்பது முக்கிய அம்சமாகும்.

இந்த உதவித்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்தின் மீன்பிடித்துறையினை மீளக்கட்டமைக்க அவுஸ்திரேலியா பெரும் பங்களிப்பை வழங்கும் என நம்புகிறேன்.

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் மக்களுக்கு வீட்டுத் திட்டத்தை அவுஸ்திரேலியா அரசாங்கம் வழங்கி வருகிறது. கடந்த யுத்தத்தின்போது இந்தப் பகுதி மிகக்கடுமையான பாதிப்பை எதிர்கொண்டவை. இப்பகுதி மக்கள் தங்களது வீட்டைத் தாமே நிர்மாணித்து வருகின்றனர். அங்குள்ள மக்கள், விவசாயிகள் சொந்தக் காலில் நிற்கவென இரண்டு தினங்களுக்கு முன்னர் விதைநெல் வழங்கி யிருந்தோம் - என்றார்.

இந்த நிகழ்வில் பிரான்ஸ் தூதுவர் அலோசியஸ் ஜோன், விக்டோறியா மாநிலத்தைச் சேர்ந்த திருமதி சூயி வில்லியம்ஸ், வடமாகாண ஆளுநர் மேஜர். ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ பற்குணராஜா உள்ளிட்டோர் விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். (50-14)

## குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான

# "கெயர்" நிறுவனத்தின் குடிதண்ணீர் விநியோக சேவை ஏப்ரல் 30ஆம் திகதியுடன் முடிவடைந்தது

யாழ்ப்பாணம், மே 7

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு "கெயர்" நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வந்த குடிதண்ணீர் விநியோகப் பணிகள் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளன.

மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதித் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வழிகாட்டலில் கெயர் நிறுவனம் இந்தக் குடிதண்ணீர் விநியோகப் பணியை மேற்கொண்டு வந்தது.

தீவுப்பகுதி மற்றும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றில் இந்தப் பணிகள் இடம்பெற்று வந்தன.

"கெயர்" நிறுவனத்தின் மூன்று பெரிய பவுசர் வாகனங்கள் மூலம் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கெயர் நிறுவனத்தின் இந்தப் பணிகளுக்கான ஒப்பந்தக் காலம் கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இதனையடுத்து "கெயர்" நிறுவனத்தினால் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்ட இடங்களுக்கான சேவையைத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை உடனடியாக ஆரம்பித்துள்ளது.

(50-224)

# சீருடை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 7

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி மற்றும் கொத்தணியினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை வரணி, வடிசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் இ.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள முன்னாள் உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் 400 முன்பள்ளி மாணவர்களுக்கும் 27 ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கப்படவுள்ளன.

(50-16-122)

# விளையாட்டு நிகழ்வில் எறியப்பட்ட குண்டு ஆசிரியரின் தலையில் வீழ்ந்து படுகாயம்

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றுவரும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் குண்டு போடுதல் நிகழ்வின் போது நடுவராகப் பணியாற்றிய ஆசிரியரின் தலையில் குண்டு வீழ்ந்ததில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இளவலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியரான கே. செல்வரட்ணம் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றுவரும் பெரு விளையாட்டுப் போட்டிகளுக்கு நடுவராக கடமையாற்றச் சென்ற இவ்வாசிரியர் குண்டு போடுதலுக்கான ஒழுங்குகளை செய்துகொண்டிருந்தார். அப்போது குண்டு போடுதலுக்கான கட்டளை தவறுதலாக முன்னரே அறிவிக்கப்பட்டதால் வீரர் வீசிய குண்டு அவரின் தலையில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஆசிரியர் படுகாயமுற்றதாகவும் விளையாட்டு மைதானத்தில் முதலுதவி வசதிகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் காயமடைந்த ஆசிரியர் தரப்பில் இருந்து விசனம் தெரிவிக்கப்பட்டது.

(50-6)

# 'உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவம்' கருத்தரங்கு இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், மே 07

யாழ். முகாமையாளர் கழகமும் யாழ். மாநகர சபையும் இணைந்து நடத்தும் ' உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு பருத்தித்துறை வீதியில் கமநல சேவைகள் திணைக்கள ஒழுங்கையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டு தினங்களும் பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை கருத்தரங்கு நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்களில் உலகத்தர நிர்ணய நிறுவனத்தின் நிபுணர்களான ராமகிருஷ்ணன் சங்கர நாராயணன், சியாமா விஜயதுங்க ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (க)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 25 | 08.05.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : தசமி |
| | பி.இ. 03.42 வரை |
| நட்சத்திரம் | : சதயம் |
| | மு.இ. 07.23 வரை |
| சுபநேரம் | : 02.55 - 04.25 |
| ராகுகாலம் | : 08.55 - 10.25 |

# கிளிநொச்சி நீதிமன்றம் மீண்டும் 10ஆம் திகதி முதல் செயற்படும்

யாழ்ப்பாணம், மே 7

இருதாசாப்தங்களின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றம் எதிர்வரும் பத்தாம் திகதி திங்கட்கிழமை முதல் செயற்படவுள்ளது.

முன்னர் நீதிமன்றம் இயங்கிய கட்டடம் சேதமடைந்துள்ளதால் அதற்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றிலேயே நீதிமன்றம் செயற்பட உள்ளது.

நீதிமன்றக் கட்டடத்தினை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் வைபவ ரீதியாக எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9 மணிக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

கிளிநொச்சி நீதிமன்றுக்கு சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய நீதிமன்றங்களில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் கடந்த முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நீதிமன்ற நீதிவானாக பெருமாள் சிவகுமார் ஏற்கனவே நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(50-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எழுதுமட்டுவாழ் தெற்கில் மீள்குடியமரப் பதிவுகள்

யாழ்ப்பாணம், மே 7

தென்மராட்சி கிழக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள எழுதுமட்டுவாழ் உபஅஞ்சல் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரிவுக் கிராம அலுவலர் பொ. நவரத்தினராசா அறிவித்துள்ளார். (1-207)



## மக்கள் சேவையாளனுக்கு மகத்தான வரவேற்பு...!



வடபுல மண்ணில் இடர்பட்ட எம்மக்களின் துயர் துடைக்க பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பேற்று யாழ் குடாநாட்டிற்கு வருகை தரும் "மக்கள் சேவையாளன்"

**டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை இருகரம் பற்றி வருக வருக என வரவேற்பதில் ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பெருமிதம் அடைகிறது.

ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
வல்வெட்டித்துறை.

(97909)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி நா.ஆனந்தி அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா நாகராஜா**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், GRINDLYS Bank)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
உடுவில் மான்ஸ் த.க. பாடசாலை.

(97911)

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பு திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு திருநாவுக்கரசு நேற்று (06.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு-சிவக்கொழுந்து தம்பதியரின் அருமை மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவசண்முகநாதன் (ஆசிரியர், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), சிவசண்முகானந்தன் (பிரான்ஸ்), சிவயோகலிங்கம் (ஆசிரியர், விக்ரோரியாக் கல்லூரி) சிவகுமாரி (வவுனியா), சிவறஞ்சினி (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மீனலோஜினி, அம்பிகை, கிரிஜா, பொன்னம்பலம், சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துசிதா, சீராளன், மதுசன், தினேஸ், தீபன், துசானி, சாரணியா, ஆரணியா, சாருஜா ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொத்தத்துறை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

(97912)

தகவல்:
குடும்பத்தினர்.

### மருதப்பு தயாளன் (நயினாதீவு)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு (ஆசிரியர்)-அன்னலட்சுமி (ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் தயாளன் கனடாவில் 05.05.2010 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் தயாநிதி (புகையிரதத் திணைக்களம், கொழும்பு), தயாகரன் (அப்பு- கனடா), தயாகுணன் (கிளி-கனடா), தயாபரன் (பழம்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் புஸ்பகுமார் மற்றும் நிரஞ்சனா, சிறிஜினி, றஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (11.05.2010) மாலை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

திருமதி பு.தயாநிதி,
1032/4, RANGE RD,
HUNUPITIYA, WATTALA.
T.P: 0112949291,
கனடா; 001-4169214231
001-4168243620

திருமதி வை.செல்லம்மா -மாமி,
திரு.திருமதி பரமேஸ்வரி மாமி,
திருமதி ஸ்ரீ ஜெகதாம்பாள்-மாமி,
திரு.திருமதி க.திருச்செல்வம் -சித்தப்பா,
(அதிபர், பணி ஓய்வு)
திரு.திருமதி இ.சிவபாதசேகரம்.

(97901)

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே 7

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 817 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் Z என்ற ஆங்கில எழுத்தும் 02/05/28/69 ஆகிய வெற்றி இலக்கங்களும் போனஸ் இலக்கம் 04 உடன் அதிஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன்பிரகாரம் சுப்பர்பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக் களை வைத்திருக்கும் 4 பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒருலட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 291 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கும்.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,680 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கும்.

ஒரு இலக்கம் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 192,878 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (10)

## முஸ்லிம் வியாபாரிகள் மேயருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 7

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். முஸ்லிம் நடைபாதை வியாபாரிகள் சங்கத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாநகர முதல்வரைச் சந்தித்து தமது வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

இதன்போது நடைபாதை வியாபாரிகள் எவரும் பாதிக்கப்படாத வகையில் இட ஒதுக்கீடு கிடைக்க வேண்டுமென முதல்வரிடம் சங்கத்தினர் கோரிக் கையை முன்வைத் தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட மாநகர முதல்வர் நடைபாதை வியாபாரிகளுக்கு இட ஒதுக் கீடு வழங்கியுள்ளார்.

வியாபாரிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டால் தாம் முதல்வருடன் தொடர்பு கொண்டு இடஒதுக்கீட்டை வழங்க முடியுமென சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (1-10)

## மனவள கலைப்பயிற்சி நாளை முதல் மூன்று தினங்கள்

யாழ்ப்பாணம், மே 7

முழுமை நல வாழ்விற்கான மனவளக் கலை காயகல்பப் பயிற்சிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மனவளக் கலைப் பேராசிரியர் அருள்நிதி வேதசுப்பையாவினால் நாளை தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடத்தப்படவுள்ளன.

நாளை மாலை 4.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்திலும், 10 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய சேவை வளாகத்திலும் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

உடல்,உயிர், மனம், அறிவு மற்றும் சமுதாய வாழ்க்கை நலக்கல்வி இலவச அறிமுக உரையும் தொடர்ந்து பயிற்சியும் நடைபெறும். (1-10)

## கிளிநொச்சியில் இன்று சுகாதார சேவைக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்கள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று பி.ப.2 மணிக்கு கிளிநொச்சி சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

(திருநெல்வேலி)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (06.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பரமநாதன் (இ.மி.ச), பரமேஸ்வரன் (இ.போ.சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகௌரி, சந்திரவதனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கோமதி-சிவதாசன், கீர்த்தனா, தாரணி, அமரர் கருணாகரன், பவித்திரா, பவானி ஆகியோரின் பேரனும் அக்ஷயனின் பாசமிகு பூட்டனும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, முத்துப்பிள்ளை, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-மாணிக்கவல்லி, கணேசப்பிள்ளை-பாக்கியம், மங்களேஸ்வரன்-புவனேஸ்வரி மற்றும் கனகசபாபதி-கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2010) பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.
0770833435

(சி/567463)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சரலோகநாதன் செல்வராணி



இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரலோகநாதன் செல்வராணி நேற்று (06.05.2010) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் நேசமணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சரலோகநாதனின் அன்பு மனைவியும் நிஷாந்தன் (மன்னார் தபால் அலுவலகம்),தர்சன் (கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), சயந்தன் ஆகியோரின் அன்புத்தாயும் வினோஜாவின் அன்பு மாமியும் நவிஷாந்தின் அன்புப் பேர்த்தியும் மகேந்திரன், வரதராஜன், காலஞ்சென்ற லக்சுமிகாந்தன் மற்றும் சந்திரகாந்தன், செல்வராஜேஸ், சோதிமலர், யசோதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோஜினிதேவி, விமலாதேவி, சிவலோகநாதன், சொர்க்கலோகநாதன், சகிதேவி, ஜெயாதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2010) வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திரோட்டர் லேன்,
இணுவில் கிழக்கு, இணுவில்.
தொ.பே.இல.0214921310

(97902)

தகவல்:
கணவன்,
பிள்ளைகள்.

### திருமதி ஜெயகலா சிவராசா (மிதிலா)



நல்லூர் வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயகலா (மிதிலா) சிவராசா 06.05.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாணி தட்டச்சுக் களஞ்சியம்,
74, வைமன் வீதி, நல்லூர்.

(97910)

தகவல்:
கணவன்.
தொ.பே: 0778893485

## தசாக திருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விகிர்தி வருஷம் சித்திரைத் திங்கள்16ஆம் நாள் வியாழக்கிழமை (29.04.2010) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ கலாபூஷணம் பாஸ்கரகுருக்கள் பஞ்சநத சர்மா** (பகவான்)

*அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.*

*தசாகம்: சித்திரை 25ஆம் நாள் [08.05.2010] சனிக்கிழமை மு.ப. 10மணி*

*ஏகோதிட்டம், மாசிகம்: சித்திரை 26ஆம் நாள் [09.05.2010] ஞாயிற்றுக்கிழமை*

*சபிண்டீகரணம்: சித்திரை 27ஆம் நாள் [10.05.2010 திங்கட்கிழமை*

மேற்படி கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், சித்திரை 28ஆம்நாள் (11.05.2010) செவ்வாய்க்கிழமை நிகழும் சமாராதனை நிகழ்விலும் (மதியபோசனம்) கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

'கணேச வாசம்'
அம்பலவாணர் வீதி, கற்பொக்கணை,
[illegible], [illegible]கம்.

(சி/567447)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தூதுவரை, சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கைலாகு கொடுத்து வரவேற்பதை முதலாவது படத்திலும்,

தூதுவர் உரையாற்றுவதையும் சுவாமி சித்திரூபானந்தா, இந்திய கலாசார நிலைய இயக்குநர் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும்,

அங்கு வந்திருந்த பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளுடன் குடாநாட்டு நிலைமை குறித்து தூதுவர் கலந்துரையாடுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.


*(படங்கள்: கர்ணன்)*

# துர்நாற்றம் வீசும் கழிவுநீர் வாய்க்கால்கள்! மாநகரசபையின் கவனம் எப்போது திரும்பும்?

நல்லூர், மே 7

பஸ்நிலையம், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள மின்சார நிலைய வீதியில் உள்ள கழிவுநீர் வாய்க்காலின் ஒரு பகுதி உடைந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த வாய்க்காலில் தேங்கியுள்ள கழிவு நீரிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதால் அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோரும், இந்த வீதியால் செல்லும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கழிவுநீர் வாய்க்கால் மட்டுமன்றி மேற்குப் பகுதியில் உள்ள பெரிய வடிகாலிலும் கழிவுநீர் தேங்கியுள்ளமையால் மிகவும் மோசமான சுகாதாரப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.



இவற்றில் உற்பத்தியாகும் ஈக்கள் அருகிலுள்ள உணவுச்சாலைகளிலுள்ள உணவுப் பண்டங்களிலும், பாத்திரங்களிலும் மொய்க்குமானால் நோய்கள் பரவும் அபாயமும் அதிகமாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

உடைந்து காணப்படும் இந்தக் கழிவுநீர் வாய்க்காலை யாழ்.மாநகர முதல்வர் தமது அதிகாரிகள் சகிதம் பார்வையிட்டதுடன் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறிச் சென்று ஒரு மாதம் கடந்த நிலையிலும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என வர்த்தக நிலையங்களில் உள்ளவர்கள் தெரிவித்தனர். (க-111)

## இரண்டு புதிய ரோலர்கள் விரைவில் வந்து சேரும்

யாழ்ப்பாணம்,மே 7

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேலும் இரண்டு புதிய ரோலர்கள் எடுத்து வரப்படவுள்ளன. இந்த ரோலர்களின் மூலம் வீதிப் புனரமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் புதிய ரோலர்கள் இரண்டையும் கனரக வாகனங்களின் உதவியுடன் இங்கே எடுத்துவருவதற்கான நடவடிக்கையை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டுள்ளது. (50-224)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# மாவட்ட இசை நாடகப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி முதலிடம்

யாழ்ப்பாணம், மே 7

இந்த வருடம் இடம்பெற்ற மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்கள் முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப்பெற்றுள்ளனர்.

இசை நாடகப் போட்டியில் முதலாம் இடத்தையும் வில்லுப்பாட்டுப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று இக் கல்லூரி மாணவர்கள் பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்துள்ளனர்.

அத்துடன் கோட்ட மட்டத்தில் 18 முதலிரு இடங்களையும், வலய மட்டத்தில் 11 முதலிரு இடங்களையும் ஐந்து இரண்டாம் இடங்களையும் இப்பாடசாலை பெற்றுள்ளது.

இதில் வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் வாசிப்புப்போட்டி பிரிவு இரண்டில் தே.அன்ரனி அன்றூ இரண்டாம் இடத்தையும், பேச்சுப்போட்டி பிரிவு இரண்டில் ஸ்ரீ.டினோசன் முதலாம் இடத்தையும், பிரிவு மூன்றில் அ. சாள்ஸ் டிலுக்ஷன் இரண்டாம் இடத்தையும், பிரிவு நான்கில் செ. அருள்ராஜ் முதலாம் இடத்தையும், பிரிவு ஐந்தில் அ.தயாறூட்ஸ் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

பாவோதல் போட்டியில் பிரிவு மூன்றில் இ.றெக்ஸ்குயின்ரன் முதலாம் இடத்தையும், பிரிவு ஐந்தில் ஜே.வெரோனிக்கா இரண்டாம் இடத்தையும், தனி இசைப் போட்டியில் பிரிவு ஐந்தில் ம.டிசானி இரண்டாம் இடத்தையும், சிறுகதைப் போட்டியில் பிரிவு ஐந்தில் எ.ஞா.லக்ஸ்மன், செ.நிவேதினி ஆகியோர் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி, இலக்கிய நாடகம், இசைநாடகம், விவாதம், வில்லிசை ஆகிய போட்டிகளில் முதலாம் இடங்களையும், நாட்டார் பாடலில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (50)

# ‘அபிக்ஞான சகுந்தலம்’ நாட்டிய நாடகத்தைக் கண்டுகளிக்க திரண்டு வந்திருந்தது ரசிகர் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே7

இந்தியக் கலாசார பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மஹாகவி காளிதாசனின் சிறப்புக் காவியமான ''அபிக்ஞான சகுந்தலம்'' நாட்டிய நாடகம் நேற்றுமுன்தினம் ரசிகர்கள் வெள்ளத்தின் மத்தியில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக அரங்கேறியது.

கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் தயாரிப்பு, நெறியாள்கையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இந்தியத் தூதுவர் அசோக். கே.காந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ்பிறேமச்சந்திரன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் அரச உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

உதயன் மற்றும் சக்தி எப்.எம்,சக்தி ரி.வி ஆகியவற்றின் ஊடக அனுசரணையுடன் மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தை பெருந்திரளான ரசிகர்கள் வெகுவாக ரசித்துக் கண்டுகளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

# வன்னியில் இதுவரை 500 இற்கும் மேற்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,மே 7

வன்னிப் பிரதேசத்தில் இதுவரை 500க்கும் மேற்பட்ட சி.டி.எம்.ஏ. தொலை பேசிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வன்னியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் தமது உறவுகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்காக சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். இதனால் ரெலிக்கொம் நிறுவனத்தின் பணியாளர்கள் வன்னிக்கு நேரடியாகத் தொலைபேசிகளை எடுத்துச் சென்று மக்களுக்கு விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வன்னியில் மக்களின் தொலைபேசிப் பாவனை அதிகரித்துள்ளமையால் அங்கு தொலைபேசிச் சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் ரெலிக்கொம் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-224)

## பாராட்டு விழாவும் இறுவட்டு வெளியீடும்

யாழ்ப்பாணம், மே 7

உருத்திராபதி இராதாகிருஷ்ணன், கலாபூசணம், ஆளுநர் விருதினைப் பெற்றமையை முன்னிட்டு இணுவில் மக்களின் ஏற்பாட்டில் பாராட்டு விழா வும் ‘கானாமிர்தம்’ இறுவட்டு வெளியீடும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் நிகழ்த்துவார். பாராட்டுக்களை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், எழுத்தாளர் கே.எஸ் ஆனந்தன், ஓய்வுபெற்ற மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி ஆகியோர் வழங்குவர்.

வெளியீட்டுரையை இசை ஆசிரியர் சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரம் நிகழ்த்துவார். இறுவட்டுப் பிரதியை த.கந்தசுவாமி, து.சிவகுமார் ஆகியோர் பெற்றுக் கொள்வர்.

மதிப்பீட்டுரையை சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, யாழ்.பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ந.வி.மு.நவரத்தினம் ஆகியோர் நிகழ்த்துவர். (50-201)

## சந்நிதியில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மே 7

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலவச மருத்துவ முகாமொன்று நடத்தப்படவுள்ளது.

ஆலய நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பொது வைத்திய நிபுணர் டாக்டர் ரி.பேரானந்தராஜா மற்றும் சிரேஷ்ட வைத்தியர்களும் தமது சேவையை வழங்கவுள்ளனர்.

செல்வச்சந்தி ஆலய நல்நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ள இச் சேவையில் அனைத்து மக்களும் பங்குபற்றிப் பயனடையுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (16)

## மோசமான வீதியால் பலரும் அவதி

நல்லூர், மே 7

திருநெல்வேலி சிவன் வீதியை அண்டியுள்ள பரவைக்குளம் வீதி மழை காரணமாக சேறும், சகதியுமாகக் காணப்படுவதால் பாதசாரிகளும், வாகனங்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கூறப்படுகின்றது.

இந்த வீதி திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் ஆலய வீதியுடன் இணைந்துள்ளதால் அதிகளவு மக்கள் இதனை உபயோகப்படுத்தி வருகின்றனர். இந்த வீதிக்குத்தார் இடப்பட்டு செப்பனிட உரியவர்கள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க -111)

## திறந்த பல்கலையின் கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் விஞ்ஞான மற்றும் மென்பொருள் எந்திரவியல் இளமாணிப்பட்டக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் இக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதிகள் முறையே நாளையும், நாளை மறுதினமும் என அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை 2010/2011 ஆம் கல்வியாண்டுகளுக்கான எந்திரவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பதிவுகள் நாளை முதல் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும், மாமாமாரும் தந்த நிழலிலேதான் விடாதுமுயன்று சாதனைபடைக்கமுடிந்தது

## முதனிலைப் பெறுபேறுபெற்ற சுஜேந்திரலிங்கம் துவாரகனின் அனுபவப்பகிர்வு

**கல்விச் சாதனைகளுக்கு புகழ்பூத்த இடமாக யாழ்ப்பாணம் இன்று வரை மிளிர்ந்து கொண்டிருக்கிறது. வட புலத்தில் வாழுகின்ற எம்மவர்கள் கல்வியே கருத்தாக - கண்ணாகப் பேணிப் பாதுகாத்தவர்கள். இதனால் கல்வித்துறையில் பல சாதனைகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.**

**வடபுலத்தில் வாழுகின்ற போது மட்டுமல்ல, புலம் பெயர்ந்து தாம் வாழுகின்ற எப்பகுதியிலும் சாதனைகளைப் படைப்பதில் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் பல்வேறு தளங்களில் - சந்தர்ப்பங்களில் நிரூபித்துக்காட்டியுள்ளார்கள் யாழ். மாணவர்கள்.**

**அந்த வரிசையில் அண்மையில் வெளியாகியுள்ள சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் அகில இலங்கை ரீதியில் (தமிழ்மொழி மூலம்) முதலிடத்தைப்பெற்றுள்ளார் யாழ்.வண்ணார்பண்ணை வட மேற்கினைச்சொந்த இடமாகக் கொண்டு தற்போது கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் சுஜேந்திரலிங்கம் துவாரகன் தனது சாதனை தொடர்பான அனுபவங்களை வடபுலத்தில் வாழுகின்ற தனது உறவுகளுடன் 'உதயன்' ஊடாகப்பகிர்ந்து கொள்கிறார்.**



நான் யாழ்.வண்ணார்பண்ணை வட மேற்கைச் சொந்த இடமாகக்கொண்ட 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி தற்போது கொழும்பில் வசித்து வருகின்றேன்.

எனது அப்பா நில அளவையாளராகப் பணிபுரிந்தவர். அம்மா வீட்டுப்பணி செய்பவர்.

எனக்கு 10 வயதாக இருக்கும்போது எனது தந்தையார் குவைத் நாட்டில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் இறந்து விட்டார். அதற்குப் பின்னர் எனது தாயாரதும், மாமாக்களினதும் அரவணைப்பிலே எனது கல்வினை இடைவிடா முயற்சியுடன் தொடர்ந்தேன்.

நான் ஆரம்பம் முதல் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலே கல்வியைக்கற்று வருகிறேன்.

சாதாரணதரப் பரீட்சைக்குப் படிக்கும் போது இரவு 11.30 மணிவரை கண் விழித்துப்படிப்பேன்.

அதிகாலையில் 4 மணிக்கெல்லாம் எழுந்து படிக்கத் தொடங்கி விடுவேன். என்னுடைய கல்விக்கு எனது அம்மா பக்கபலமாக இருந்து சகல வழிகளிலும் துணை புரிந்தார்.

பாடசாலைகளிலும், பிரத்தியேக வகுப்புக்களிலும் கற்பிக்கின்ற பாடங்களை மீளவும் நாளாந்தம் பயிற்சி செய்து பார்ப்பேன். அத்தகைய பயிற்சிதான் எனது சாதனைக்குப் பெரியளவில் கைகொடுத்தது.

பரீட்சை எழுதி முடித்ததும் 9 பாடங்களிலும் 'ஏ' சித்திபெறுவேன் என்ற நம்பிக்கை என் மனதில் ஏற்பட்டது. ஆனால் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெறுவேன் என்று நினைக்கவில்லை. எனினும் அவ்வாறான உயர் நிலையினை

**நேர்காணல்: கவிநேசன்**

எட்டியுள்ளேன் என்று நினைக்கும்போது இப்போது பெருமகிழ்ச்சி எனக்குள்ளே ஏற்படுகின்றது.

இந்தப் பெருமைகள் யாவும் என்னைப் பெற்றெடுத்த பெற்றோருக்கும், கல்வியூட்டிய ஆசான்களுக்கும் உரித்தாகும். அவர்களை என்றுமே மறக்கமுடியாது.

நான் இப்போது கணிதத்துறையில் கல்வி கற்கிறேன். எதிர்காலத்தில் பொறியியலாளராகவர வேண்டுமென்பதே எனது இலட்சியம். அந்த இலக்கினை அடைவதற்கு கடுமையாகவும் தொடர்ந்தும் முயற்சிப்பேன்.

இத்தகைய கல்விச் சாதனை எனது சொந்த மண்ணில் - யாழ்ப்பாணத்தில் - உள்ள உறவினர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கிய 'உதயன்' பத்திரிகைக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வாழ்வில் ஏற்பட்ட மகிழ்ச்சியான தருணத்தை சொந்த மண்ணில் இருந்து கொண்டாட முடியவில்லையென்ற கவலையிலிருந்தபோதும் விரைவில் யாழ்ப்பாணம் சென்று என் உறவுகளோடு இந்த மகிழ்ச்சியைப் பகிரவுள்ளேன்.

## இன்றைய இளைய சமுதாயம்

இன்றைய சிறுவர்கள் முன்னோரிலும் பார்க்க அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்குபவர்கள்; இவர்களே நாளைய சமுதாயத்தின் தலைவர்கள்; இவர்கள் நடைமுறை வாழ்க்கையோடு அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள்; எந்த விதமான கல்வியைக் கற்றாலும், சமய, சமுதாய,விழுமியப் பண்புகளைப் பேணிக் பாதுகாக்க வேண்டியவர்கள்; பெற்றோர்,பெரியோர்,முதியோர் போன்றவரை மதித்து நடக்க வேண்டியவர்கள்; சிறுவர் உரிமை பேணப்பட வேண்டும் என்ற காரணம் காட்டி பெற்றோருக்கு கீழ்ப் படியாமலும் அவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாதும் விட்டு விடக்கூடாது.

ஈன்ற பொழுதில் பெரிதுவந்த பெற்றோருக்குச் செய்ய வேண்டிய பணி விடைகளைச் செய்து, சமுதாயத்தில் நற் பெயரைப் பெற்றால் பெற்றோர் என்ன தவம் செய்தனர் என்று போற்றப்படுவார்கள்.

இதனை வள்ளுவப் பெருந்தகை,

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்

என்ற குறளின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.




பெற்றோரும் தம்பிள்ளைகளை நல்ல முறையில் வழிகாட்டி சமய விழுமியங்களில் இருந்து தாங்களும் பிறழாது அவர்களுக்கும் எடுத்துரைத்து வளர்க்க வேண்டும். புகழை வேண்டியபொழுது புகழ்ந்தும், கண்டிக்க வேண்டிய பொழுது கண்டித்தும் வளர்த்தால் அவர்களும் சமுதாயத்தில் நற் பெயரைப் பெறுவார்கள்.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்

என்னும் குறளினால் மேற்படிக் கருத்தை வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார்.

சமுதாயமும் இளைய சமுதாயத்தினரைக் கண்காணித்து, புத்திமதி கூறி, அன்பான முறையில் வழிகாட்டுவார்களாக.

நன்றி: உள்ளம் பெருங்கோயில்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்




சில வேலைகளை நீண்ட நேரம் காத்திருந்து முடிக்கலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது காரியங்களை செய்து கொண்டிருப்பீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். போட்டி பந்தயங்களில் வெற்றி பெறலாம்.

### இடபம்



பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ள நேரிடலாம். விவசாயிகள் புதிய சொத்துக்கள் வாங்க போட்ட திட்டம் நிறைவேறலாம். பிள்ளைகள் உங்களின் சொல்வார்த்தை கேட்காமல் நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். தந்தை வகையிலோ, மருத்துவ வகையிலோ செலவுகளை சந்திக்கலாம்.

### மிதுனம்



குடும்ப உறுப்பினர்களுடன் சிறு மனக்கசப்புகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் அமையலாம். விரும்பிய ஒரு பொருளை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். வாகனங்கள் திடீரென பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். முன்யோசனை அவசியம்.

### கடகம்



மனைவி, பெண்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். பிரியமான உறவினர்களின் வீடுகளுக்கு செல்லலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வை எதிர்பார்ப்போர் சாதகமான செய்திகளைக் கேட்கலாம். புதிய தொழில் ஒப்பந்தங்கள் எளிதில் கைகூடி வரும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

### சிங்கம்



நீண்ட நாள்களாக சாதிக்க நினைத்த ஒன்றை இன்று சாதித்துக் காட்டுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களை செய்வீர்கள். வெளியூர்களிலிருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். அனுகூலமான நாள்.

### கன்னி



விஷமத்தனமாக சில வேலைகளை செய்து, சிலரின் அதிருப்திக்கு ஆள்படலாம். தொழில் கூட்டாளிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். நண்பர்கள் சிலரிடம் உதவி கேட்க நேரிடலாம். உத்தியோகஸ்தர்கள் பணியில் அக்கறையில்லாமல் ஏனோதானோவென்று செய்வீர்கள். பயணங்களின் போது சிரமம் நேரிடலாம்.

### துலாம்



கடின முயற்சிக்கு பின்னர் காரியங்களில் வெற்றி பெறும் நாள். சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில் நிமித்தம் பரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேருவர். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். புதியவர்கள் சந்திப்பு நிகழும்.

### விருச்சிகம்



முயற்சிகளில் முத்தான வெற்றி பெறும் நாள். அரசு தொடர்பான காரியங்களில் எதிர்பார்த்தது நடக்கலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்கி சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். அடுக்கடுக்காக பல வேலைகள் குவிந்தாலும், அசராமல் செய்து முடிப்பீர்கள். சுபநிகழ்ச்சிகளுக்காக சிலருக்கு உதவி செய்வீர்கள்.

### தனுசு



வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். காலை நேரத்தில் கசப்பான அனுபவங்களையும், மாலை நேரத்தில் மனதிற்கு இனிய அனுபவங்களையும் எதிர் கொள்ளலாம். சகோதரிகள் வழியில் தொல்லைகள் உண்டு. பணப்பற்றாக்குறையால் சில பொருள்களை கடனுக்கு வாங்க நேரிடலாம்.

### மகரம்



தடை, தாமதங்கள் விலகி எதிலும் இனிப்பான வெற்றி காணும் நாள். விருந்தினர்கள் வருகையால் செலவுகளை சந்திக் கலாம். பணவிடயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும்.

### கும்பம்



திட்டமிட்டு செலவுகளை செய்ய வேண்டிய நாள். உறவினர் கேட்ட உதவிகளை செய்ய முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழிலில் ஏற்படும் மந்த நிலையை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்கலாம். தூக்கமின்மையால் அவதிப்படலாம்.

### மீனம்



வேலைப்பளு இருந்தாலும், எந்த வேலையையும் நிறுத்தி வைக்காமல் அனைத்தையும் செய்வீர்கள். பெண்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக்கலாம். எதிர்பாராத நல்ல சம்பவம் ஒன்று நடக்கலாம். உங்களுக்காக நண்பர்கள் சிலர், சில விஷயங்களில் விட்டுக் கொடுக்கலாம். ஆதாயகரமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176 வது மைல்கல்

# மன்னார்

இந்து சமுத்திரத்தின் கிழத்தேய, மேலத்தேய நாடுகளுக்கிடையிலான செழிப்புமிக்க வர்த்தக கேந்திர நிலையத்தினையும், மிகவும் பிரசித்தி பெற்ற துறைமுகத்தினையும் கொண்ட தம்பபண்ணி எனும் இடத்திலேயே விஜயனும் அவனது தோழர்களும் முதன்முதல் வந்து இறங்கினார்கள் என்பதினை வரலாற்றின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

13ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரசித்தி பெற்றதும், சுறுசுறுப்பு மிக்கதுமான துறைமுகம் இருந்ததாகவும், அதனை தமிழில் "மாந்தோட்டம்" , "மாந்தை" (மாந்தோப்பு) என்றும் சிங்களத்தில் "மாதொட்ட", "மாந்தெட்ட" என அழைக்கப்பட்டதோடு, சமஸ்கிருதத்தில் "மஹாதீர்த்தம்" என்றும் அழைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. செம்மண் நிலத்தின் ஊடாக ஓடும் அறுவி ஆற்றில் (மல்வத்து ஓயா) செம்மண் கலப்பதினால், மண் கலந்து சேற்று நீராக காணப்படுவதினால் "மன்னார்" என்ற பெயர் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. வாய்மொழியாக வழக்கில் இருந்த பெயர்கள் மறுவி காலப்போக்கில் மன்னார் என்ற பெயர் புழக்கத்திற்கு வந்தது.

எங்களது மனப்பூர்வமான எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் மீண்டும் இப்பிரதேசத்துக்கு புத்துயிர் அளித்து சுறுசுறுப்புடன் இயங்கும் முக்கியமான வர்த்தக மையமாக்குவதேயாகும்.

பழம்பெரும் வரலாற்றைக் கொண்ட மன்னார் நகரத்தினை மீண்டும் கட்டியெழுப்பி விவசாயம், மீன்பிடி துறைகளை ஊக்கப்படுத்தி, நிதியியல் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை இன்று மன்னாரில் திறந்த வைக்கப்படுகிறது.

கொமர்ஷல் வங்கியின் மன்னார் கிளை, இல.45, பிரதான வீதி, மன்னார் என்ற முகவரியில் 2010 மே 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.07 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 023-2251500, (பொது) 023-2251502, 023-2251503, (ஃபக்ஸ்) 023-2251501



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## Niveshna

புலோலி கிழக்கு சவனாய் பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட திரு திருமதி கோகிலரமணன் சண்டிகாஜினி தம்பதியினரின் செல்வப்புதல்வி நிவேஷ்னாவின் முதலாவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் விகிர்த்திவருடம் (07.05.2010) வெள்ளிக்கிழமை இன்று வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றனர். நிவேஷ்னாக்குட்டியினை அன்பு அப்பா, அம்மா,அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார் அத்தைமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், சித்தி, அண்ணன்மார்கள், அக்காமார்கள், அத்தான்மார், மச்சாள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் நாகதம்பிரான் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.





அ.கோகிலரமணன்
சவனாய்
பருத்தித்துறை
0774737960

தகவல்
அப்பா அம்மா
குடும்பத்தினர்


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.



பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்க ஒரு தங்கமெடல் வழங்குங்கள்.
ரூபா 350 இல் இருந்து



S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)


## காணி விற்பனைக்குண்டு

சண்டிலிப்பாய் கிழக்கு இராஜ இராஜேஸ்வரி அம்பாள் (பேச்சி அம்மன்) ஆலயத்திற்கு வடமேற்கில் உள்ள பழைய கிணற்றடிக்கு அருகிலுள்ள 3 ¼ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: - திரு. V.S.இராசதுரை
உடுவில் தெற்கு, சுன்னாகம் அல்லது
திரு.அ.அருள்ராசா (அப்பன்)
சண்டிலிப்பாய் கிழக்கு. தொ.பே.077 8694058
காலை / மாலை – 6 – 8 மணிவரை தொடர்புகொள்ளவும்.

# அரச தகவல் திணைக்கள புதிய பணிப்பாளர்

கொழும்பு,மே 7

அரச தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக பேராசியர் ஆரியரத்ன அத்துகல நியமிக்கப்பட்டுள்ளார். இன்று வெள்ளிக்கிழமை தமது புதிய பதவிக்கான கடமைகளை அவர் பொறுப்பேற்கவுள்ளார்.

இது தொடர்பான விசேட நிகழ்வொன்று இன்று காலை 9:30 மணிக்கு அரச தக வல் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இவர் இதற்கு முன்னர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பணியாற்றினார். களனிப் பல்கலைக் கழகத்தில் ஊடகத் துறையில் பட்டம் பெற்ற இவர், அப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதுவரை அரச தகவல் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய அநுஷ பல்பிட்ட தொலைத் தொடர்புகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி மாற்றம் பெற்றுள்ளார். (அ-சி)

# பாலியல் வல்லுறவு; குடும்பஸ்தர் கைது

வலி.வடக்கு,மே 7

பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக குடும்பஸ்தர் ஒருவரும் அவருக்கு ஒத்தாசையாக இருந்ததாக மூவரும் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மனைவியின் பராயம் அடையாத சகோதரியையே குறிப்பிட்ட நபர் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் குறிப்பிட்ட நபரையும் அவருக்கு பாதுகாப்புக் கொடுத்து வீட்டில் வைத்திருந்த மூவரையும் பொலிஸார் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர்.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. (ஒ-86)

## நாவற்குழியிலும் படையினர் சோதனை

யாழ்ப்பாணம், மே7

நாவற்குழிப் பாலம் அருகே மீண்டும் சோதனைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாகனங்களில் வருவோர் இறக்கப்பட்டு சோதனை இடம்பெறுவதாக பயணிகள் தெரிவித்தனர். (ஒ-20)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 07 |
| 12 | 04 |
| 1932 | 2010 |



## தலையசிங்கம் நவரத்தினராசா

(ஓய்வுபெற்ற செயலாளர், நகரசபை, சாவகச்சேரி)

எங்கள் அன்பான ஐயாவே எம்மைத் தவிக்க விட்டுச் சென்று
ஒரு திங்கள் ஆகிவிட்டதய்யா உங்கள் பிரிவு தந்த ஆறாதகாயங்கள்
எம்மனதில் ஓயாத அலைகளாக ஆர்பரிக்கின்றன
ஈரவிழிகளோடு என்றும் உங்கள் நினைவுகளை ஏந்தி நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி, தந்தி, கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாற்றியோர்க்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், இரங்கல் உரைகள் ஆற்றியோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.05.2010) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெருங்குளம், மட்டுவில் வீதி,
சாவகச்சேரி. (சி/567422) குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 19 |
| 03 | 04 |
| 1982 | 2009 |



## அமரர் தருமராசா கோபிதாஸ்

எங்கள் அன்பின் உருவே - கோபிதாஸா
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டதடா
எங்கள் கண்ணில் - நெஞ்சில்
உம் நினைவு மறையாததால்
அனலில் இடப்பட்ட மெழுகது போல்
உருகித் துடிக்கின்றோம்
அப்பாவும் அம்மாவும் கதறியழ
சகோதரர்கள் - சகோதரிகள்
அடியற்ற மரம்போல் சாய்ந்துவிட
உன் மனைவியும் ஆசை மகனும்
பதறித் துடிதுடிக்க
நீ அகாலமாய் மறைந்த போதும் - நின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

6ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு. (97814) குடும்பத்தினர்,
மருமகன் - பிரதாப்

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



## திருமதி நிர்மலா ஸ்ரீகரன்

(முன்னாள் எழுதுவினைஞர், தென்னை பயிர்ச் செய்கைச் சபை)

கடந்த 04.04.2010அன்று காலமான எனது மனைவி நிர்மலா அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (08.05.2010) சனிக்கிழமை விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனதறியாது தனிப்பட்ட அழைப்பிதழ் வழங்கத்தவறியவர்கள் இந்த அழைப்பை தயவுகூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு. (97516) க.ஸ்ரீகரன் (பரன்)
கிராம அலுவலர்,
பிரதேச செயலகம், பளை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 18 |
| 08 | 04 |
| 1925 | 2009 |



நீர்வேலி ஸ்ரீமான் அத்தியார் அருணாசலம்
அவர்களின் மருமகள்

## அமரர் சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம் (பாலாரீச்சர்)

ஆகிவிட்டது ஓராண்டு ஆறவில்லையே எம்துயரம்
உங்கள் பிரிவுத் துயரை எவ்வாறு தாங்குவது
வந்தொரு தடவை பார்க்க மாட்டீர்களா?

நீர்வேலி. (97687) மக்கள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியத் திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

சுதேச பிரசங்கிமாரும் கிராமப் பாடசாலை ஆசிரியர்களும் சபை அங்கத்தவர்களும் இப் பணிகளுக்கு உதவி செய்தனர்.

1834 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் ஆங்கிலப் பாடசாலையையும் சரசாலை, மந்துவில், மீசாலை, கொடிகாமம், உசன், வரணி, கெற்பேலி, ஒட்டுவெளி, கச்சாய், பெரியமாவடி, தனங்கிளப்பு, கைதடி, நுணாவில், மட்டுவில் ஆகிய இடங்களில் தமிழ்ப் பாடசாலைகளையும் வரணியில் விடுதியுடன் கூடிய பெண்கள் பாடசாலையையும் அமைத்தனர்.

அவ்வேளையில் சாவகச்சேரியில் திருச்சபைக்கான தேவாலயம் ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்ட போதிலும் ஆதி காலத்தில் ஒல்லாந்தரினால் கட்டப்பட்டு சேதமடைந்திருந்த ஆலயக் கட்டடம் 1891இல் புனரமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. 1927 ஆம் ஆண்டு ஆலயக் கட்டடம் புனரமைக்க வேண்டிய நிலையேற்பட்டது. 1932 ஆம் ஆண்டு பழைய ஆலயமும் மிஷன் வீடும் ஆசிரிய கலாசாலைக்கு சில நிபந்தனைகளுடன் கையளிக்கப்பட்டது.

1933 ஆம் ஆண்டு தற்போது இயங்கும் தேவாலயத்திற்கான அத்திபாரம் போதகர் வீ.எம்.யோன் கால்த்தில் போதகர் எஸ்.ஆர்.கிக்கொக் அவர்களால அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. 1936 ஆம் ஆண்டு போதகராகவிருந்த எஸ்.குலேந்திரன் காலத்தில் கட்டடத்தின் முற்பாக வேலைகள் முடிக்கப்பட்டது. 1937 ஏப்ரல் மாதம் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட கட்டடம் பிரதிஸ்டை செய்யப்பட்டு வணக்கஸ்தலமாக செயற்பட்டது.

போதகர் ஏ.சி.தம்பிராசா முழு வேலைகளும் பூர்[illegible] காலத்தில் 1951 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி பிரதிஸ்டை செய்யப்பட்டது.

சாவகச்சேரி திருச்சபையுடன் இணைந்திருந்த வரணி திருச்சபை 1895 இலும், நுணாவில் திருச்சபை 1896 இலும் பிரிந்து தனித்து இயங்கத் தொடங்கின.

சாவகச்சேரி திருச்சபை 1938இல் டாக்டர் ரி.செல்வராசாவினால் அவரது பேரன் கே.ஏ.வேலுப்பிள்ளை நினைவாக மணிக்கோபுரம் அமைக்கப்பட்டது. அதேவருடம் போதகர் ரி.பீ.ஹன்ட் நினைவாக அவரது பேரன் ஜே.பேடன் ஹன்ட் என்பவரால் பிரசங்க பீடம் அமைக்கப்பட்டது.

திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சு.பே.மு.என்பவரால் எழுதப்பட்ட பாமாலை வருமாறு:

"மேவு மிஷனரிமார் வேதனையோடே விதைத்த
சீவ விதைகள் செழித்திடவே - சாவைநகர்
மண்மேலே அன்பின் மழை பொழிந்த விண்ணவதைக்
கண்மே யமைப்போம் கருத்து"

சாவகச்சேரி திருச்சபையின் வளர்ச்சிக்கு 1834 தொடக்கம் 1950 வரை போதகர்களாக பின்வருவோர் பணியாற்றியுள்ளனர்.

யோன் ஸ்கட்டர், சாமுவேல் கட்சிங்ஸ், சாமுவேல் ஜீ. வைற்லெசி, பென்சமின் சி.மெக்ஸ், அடின் எச்.பிளெட்சர், டபிள்யூ.எஸ்.ஸ்கட்டர், ஜோசப் ரி.நொய்ஸ், மார்ஷல் டி சாண்டர்ஸ், சி.ரி.பி.ஹன்ட், ஜே.எஸ்.கிறிஸ்மஸ், ஜீ.ஜீ.பிரவுண், சி.எம். சாண்டஸ், ஆர்.பி. பிறையன்ற், கே.கே.சின்னத்தம்பி, டபிள்யூ.எச்.யோசப், ஆர்.சி.பி.வெல்ஸ்,எஸ்.ஆர்.கிட்ஸ் கொக், வீ.எம்.ஜோன், எஸ்.குலேந்திரன், ஈ.கே.யேசுதாஸன், பி.சி.டி.மதர், ஜே.வி.கே.ஆர்னோல்ட் ஆகியோரும் உபதேசிமாராக சீஸ்மன் அன்ட் ஜோன்.ஆர்.கோய்ட், ஏ.எலியோட், சி.டபிள்யூ.டான்பேர்த், எஸ்.ரி.தம்பித்துரை, எல்.வி.கிளேரன்ஸ் ஆகியோரும் பணியாற்றியுள்ளனர்.

1951 மே21 ஆம் திகதி சாவகச்சேரி திருச்சபையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய திருநாள் அப்போதே தென்னிந்திய திருச்சபையின் யாழ்.ஆதீனப் பேராயராக்விருந்த சபாபதி புலேந்திரன் புதிய ஆலயத்தை பிரதிஷ்டை செய்துவைத்தார். 18 வருடங்களாக கட்டப்பட்ட இவ்வாலயத்தின் திறவுகோளை திருமதி கே.எஸ்.சரவணமுத்து அத்தியட்சகரிடம் கொடுத்து ஆலயவாசலைத் திறந்து வைக்குமாறு கூறினார். அத்தியட்சகரால் ஆலய வாசல் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் 14 இளைஞர், யுவதிகளும் திடப்படுத்தல் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வரணி திருச்சபையைச் சேர்ந்த பேராசிரியர் சி.ஜே.எலியேசர் திருமதி ராணி எலியேசர் ஆகியோர் கலந்துகொண்டனர். (தொடரும்)

# மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையென்ற பெருமையுடன் 150 வருடங்களுக்கு மேலாக பெயர்பெற்ற கல்விமான்களை உருவாக்கிய மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் பற்றி நோக்குவோம்.

மட்டுவில் கிராமமானது உரையாசிரியர் ம.க.வேலுப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கவிஞர் மகாலிங்கசிவம், யோச் செல்லப்பா, ஆசிரியமணி வே.சுப்பையா வைத்தியர், புராணபடன மேதை சங்கரப்பிள்ளை போன்றோர் வாழ்ந்த பூமியாகும்.

தென்மராட்சி பிரதேசத்தில் பாடசாலைகள் உருவாக்கப்படாததால் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் கூட்டாக நடந்து சென்று ஏனைய பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்று வந்தனர்.

திண்ணைக்கல்வி இருந்த காலத்தில் பிரதேசத்தில் பாடசாலை அமைக்கவேண்டுமென்ற ஒரே நோக்குடன் கதிரேசன் காசிநாதர் என்பவர் 1974 இல் பங்குக் காணியில் தனக்குரிய ஒன்றேகால் (1¼) பரப்புக் காணியில் ஓலைக்கொட்டிலை அமைத்து சைவப்பிரகாச வித்தியாசாலையென பெயரிட்டு பிரதேசத்தில் முதன் முறையாக பாடசாலைக் கல்வியினை ஆரம்பித்து வைத்தார். அக்காலக் கல்விமான்களில் ஒருவரான ம.க.வேற்பிள்ளையை தலைமையாசிரியராகக் கொண்டு இயங்கியது.

தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை தென்னிந்தியா சிதம்பரத்திலுள்ள நாவலர் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராகச் சென்றுவிட்டதாலும் ஸ்தாபகர் க.காசிநாதர் காலமாகிவிட்டதாலும் தொடர்ந்து பாடசாலையை இயக்க முடியாமல் ஸ்தாபகரின் பின் உரித்தாளர்கள் திணறினர்.

அவ்வேளையில் மிஷனரியினர் கிராமங்கள் தோறும் மதப்பிரசாரம் மேற்கொண்டிருந்த வேளையில் இப்பாடசாலையின் நிலை யறிந்து ஸ்தாபகரின் பின்னுரித்தாளர்களுடன் தொடர்பு கொண்டு மிஷனரியினரால் பொறுப்பேற்கப்பட்டு அமெரிக்கன் மிஷன் பாடசாலையாக மாற்றப்பட்டு இயங்கத் தொடங்கியது. தொடர்ந்து 35 வருடங்கள் மிஷனரியினரின் வசம் இருந்த இப்பாடசாலையினை ஜோச் செல்லப்பா எனப்படும் நா.செல்லப்பா கடும் முயற்சியின் பயனாக பாடசாலை மீளப்பெறப்பட்டு 1924 ஆம் ஆண்டு தற்போதைய பெயரான சந்திர மௌலீச வித்தியாசாலை என்னும் பெயருடன் இயங்க ஆரம்பித்தது.

மட்டுவில் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆரம்பகாலம் தொடக்கம் 1906 ஆம் ஆண்டு வரை உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை தலைமையாசிரியராக கடமையாற்றினார். பின்னர் அமெரிக்கன்மிசன் பாடசாலையாக மாறிய பின்னர் தம்பையா உபாத்தியாயர், பூதத்தம்பி உபாத்தியாயர், வேலுப்பிள்ளை உபாத்தியாயர், சின்னத்தம்பி உபாத்தியாயர், கந்தையா உபாத்தியாயர் ஆகியோர் தலைமை ஆசிரியர்களாக கடமையாற்றினர். பின்னர் சந்திரமௌலீச வித்தியாலயம் என்ற பெயருடன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் பொறுப்பேற்ற பின்னர் ந.கந்தசாமி ஐயா உபாத்தியாயர், முருகேசு உபாத்தியாயர் , ஆ.கி.இளையதம்பி, க.நமசிவாயம், சு.விஸ்வலிங்கம், சுப்பிரமணியம், தம்பாப்பிள்ளை, சிவக்கொழுந்து, சு.விஸ்வலிங்கம் பொன்னையா, க.சுப்பிரமணியம் ஆகியோர் தலைமை ஆசிரியர்களாக பணியாற்றினர்.

1962 ஆம் ஆண்டு இவ் வித்தியாலயம் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக மூ.சுப்பிரமணியம் பொறுப்பேற்றார்.

இவரின் பின்னர் சிதம்பரப்பிள்ளை, எஸ்.பொன்னையா, எஸ்.படைவீரசிங்கம், அ.குமாரவேலு, ஆ.நடராசா, சு.இராசசேகரம், வே.சண்முகராசா செ.சிவசோதி, செ.சிவஞானம், க.ஜெயக்குமார் ஆகியோர் அதிபர்களாக அணி சேர்த்தனர்.

ஆரம்பத்தில் சுண்ணாம்புக்கற் கட்டடத் தில் இயங்கிய பாடசாலை மாணவர் தொகைக் கேற்ப கட்டட வளங்களைப் பெற்றன.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களால் பாடசாலையில் இடம்பெற்ற பரிசில் நாள் நிகழ்வில் சேர் பொன். இராமநாதன் அவர்களை பிரதம[illegible] அழைத்திருந்தார்.

ஸ்தாபகர் க.காசிநாதர் என்பவர் 1874 ஆம் ஆண்டு 1 ¼ பரப்புக் காணியையும் அவரது பேரனார் கந்தர் காசிநாதர் என்பவர் 1963 ஆம் ஆண்டு 4 ½ பரப்புக் காணியையும் வித்தி யாலயத்திற்கு தர்மசாசனமாக வழங்கினர். கந்தர் காசிநாதர் மேலும் 4 பரப்புக் காணியை குறைந்த விலையில் வித்தியாலயத்திற்கு வழங்கினார். இப் பகுதியில் மிகுதியாக இ ருந்த 3¾ பரப்புக் காணியை இவரது மகனான காசிநாதர் சிவஞானசுந்தரம் என்பவர் கடந்த 18.02.2010 இல் வழங்கினார்.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் பாடசாலை பௌதீகவழங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டது. 2002 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக கொட்டகையில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. வலயத்தின் உதவியுடன் சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டது.

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினர் வித்தியாலய வளாகத்தில் 110'×25' விஸ்தீரணம் கொண்ட இரு மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டது. இக்கட்டடத்தில் அதிபர் அலுவலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், ஆங்கில செயற்பாட்டறை, பொதுஅறை என்பவையும் மாடிக் கட்டடம் பிரார்த்தனை மண்டப மாகவும் செயற்படுகிறது. பின்னர் உலக வங்கியின் நிதி உதவியுடன் பொது நூலகம், கணனி செயற்பாடு மையம், வகுப்பறைத் தொகுதிகளை உள்ளடக்கும் மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நூலகத்திற்கான நூல்களை உலகவங்கி யாழ்.பல்கலைக்கழகச் சங்கம், நிக்கொட் நிறுவனம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அராலியூர் நா.சுந்தரம்பிள்ளை ஆகியோரின் நிதி உதவியுடன் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலையில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆற்றிய சேவையில் நிமித்தம் அன்னாரின் நினைவாக சிலை அமைக்கப்பட்டு கடந்த வருடம் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வித்தியாலயத்தில் தற்போது 17 ஆசிரியர்களும் 300 மாணவர்களும் உள்ளனர். தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சகல பௌதீக வளங்களுடன் எதுவித தேவைகளுமின்றி இயங்கும் வித்தியாலயம் என்பது குறிப்பிடத் தக்கது.

* * *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 07

### வினாத்தாள் – I


நேரம் : 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

* 

01. 
கீழேயுள்ள ஒவ்வொரு படத்தையும் நன்கு விவரிக்கும் சொற்கூட்டம்,
1) பிராணி, மகிழ்ச்சி, பறவை.
2) நோய், நீர், இரவு.
3) மனிதன், உதவி, இரத்தம்.
4) மனிதன், பறவை, நோய்.

02. 1) துளைக்கருவி, துக்கம், வீதி.
2) தோல், துவாரம், நரம்பு.
3) மகுடி, தோல், கருவி.
4) ஆலயம், தோல், இசைக்கருவி.



03.


| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 3 | 2 | | | |
| 8 | 5 | 3 | | |
| 12 | A | 7 | 4 | |
| 20 | 16 | 14 | 9 | 5 |

இவ்வுருவில் A இற்குப் பொருத்தமான இலக்கம்,
1) 10
2) 16
3) 11
4) 1[illegible]

04. பாடசாலை செல்லும்போது வீதியில் அடையாள அட்டை ஒன்றை கண்டு எடுத்தால் உடனடியாகச் செய்யவேண்டியது,
1) அதனை வீசிவிடல்.
2) தனது தேவைக்கு பயன்படுத்தல்.
3) தபாலகத்தில் ஒப்படைத்தல்.
4) அதனை வேறொருவரிடம் கையளித்தல்.

* தரப்பட்ட இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவத்தைத் தெரிவுசெய்க.

05.




06.




07. மாணவன் ஒருவன் புத்தகம் ஒன்றில் 77 ஆம் பக்கம் தொடக்கம் 126 ஆம் பக்கம் வரை வாசித்தான் எனின், அவன் வாசித்த பக்கங்கள்,
1) 48 2) 49 3) 50 4) 51

08. 90-100 வரை எண்களை எண்ணும்போது இலக்கம் 9 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை,
1) 8 2) 11 3) 10 4) 9

09. கடன், கடல், கரன், மடல் என்பன AGM, BGN, AHM, AGN என எழுதப்பட்டால் (இதே ஒழுங்கிலின்றி) கடல் என்பதைக் குறிக்கும் குறியீடு,
1) AHM 2) AGN 3) AGM 4) BGN

10. BAD எனும் சொல் 214 எனின், BED என்பது,
1) 224 2) 244 3) 254 4) 264

11. தாவரம் ஒன்றில் பொதுவாக அதிகமாகக் காணப்படுவது,
1) கிளைகள். 2) இலைகள். 3) பூக்கள். 4) காய்கள்.

12. A - பழம், B - மொட்டு, C - பூ, D - காய், E - பிஞ்சு
இவற்றை உரிய முறையில் ஒழுங்குபடுத்தினால்,
1) CBADE 2) BCEDA 3) AECBD 4) ABCDE

13. இடைவெளிக்கு பொருத்தமான இலக்கம்,
1) 5
2) 8
3) 20
4) 9

| | | |
|---|---|---|
| 15 | 20 | 8 |
| 5 | 2 | 1 |
| 3 | 10 | ..... |

14. கதிரைகள் மரத்தால் செய்யப்பட்டவை எனும் கூற்று,
1) எப்போதும் உண்மை.
2) எப்போதும் பொய்.
3) சிலவேளைகளில் உண்மை.
4) உண்மை என்பது அறிதியான முடிவு.

15. E = 15 எனின், B இன் பெறுமதி,
1) 6
2) 3
3) 9
4) 12

A + 3 = B
B + 3 = C
C + 3 = D
D + 3 = E

16. இடைவெளிக்கு பொருத்தமான எழுத்து,

த
க ____ ம்
ம்

1) ப
2) ம
3) ர
4) வ

17. ஒரு புத்தகத்தில் எப்போதும் இருப்பது,
1) படம். 2) கதை. 3) பக்கம். 4) உறை.

18. 9A3 = 5B1 இதன்படி B இற்கு பொருத்தமான குறியீடு,
1) + 2) - 3) × 4) ÷

19. மேலுள்ள தரவின்படி 5A1B4 இன் பெறுமானம்,
1) 7 2) 10 3) 6 4) 8

20. மலர் எனும் சொல்லுடன் இணைந்து வரமுடியாத சொல்,
1) சிறிய. 2) திறமையான.
3) வெள்ளையான. 4) அழகான.

21. மைதானம் ஒன்றில் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் 55 கொடிகள் நடப்பட்டிருந்தன. எனின், அந்த வரிசையில் 15ஆவதாக உள்ள கொடி எது?
1) நீலம். 2) மஞ்சள். 3) பச்சை. 4) சிவப்பு.

22. அந்த வரிசையில் மொத்தம் எத்தனை சிவப்புக் கொடிகள் காணப்படும்?
1) 14 2) 13 3) 15 4) 12

23. கமல் ஒரு மாம்பழம் 4 ரூபாப்படி 12 மாம்பழங்கள் வாங்கினான். அதில் இரு மாம்பழங்கள் பழுதடைந்திருந்தன. மிகுதி மாம்பழங்களை ஒன்று 5 ரூபாப் படி விற்றால் அவனுக்கு எவ்வளவு இலாபம் கிடைத்திருக்கும்?
1) 10 ரூபா 2) 21 ரூபா 3) 11 ரூபா 4) 5 ரூபா

24. தந்தை ஒருவர் தனது காணியின் 4/10 பங்கை இரு புதல்வர்களுக்கும் 2/10 பங்கை புதல்விக்கும் பரிசாகக் கொடுத்தார். அவர் பரிசாகக் கொடுத்தது மொத்தக் காணியின் என்ன பங்கு?
1) 3/5 2) 1/2 3) 3/4 4) 1/4

25. நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட 7 பெரியார்கள் தமக்கிடையே கை குலுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?
1) 49 2) 42 3) 56 4) 60

26. ஒரு பஸ்ஸில் 60 பேர் பயணம் செய்ய முடியும். 185 பேர் பயணிக்க எத்தனை பஸ்கள் தேவை?
1) 3 2) 5 3) 4 4) 6

27. வரிசை ஒன்றில் நான் 13 ஆவது நபராக நடுவில் நிற்கிறேன். அந்த வரிசையில் உள்ள மாணவர் எண்ணிக்கை,
1) 27 2) 25 3) 26 4) 30

△ × △ × △ = 27
○ × ○ × ○ = 8
□ × □ × □ = 1 எனின்,

28. △ + ○ + □ இன் பெறுமதி யாது?
1) 6 2) 36 3) 5 4) 30

29. சரியான தொடர்பின் கீழ்க்கோடிடுக.
1) ○ = □ + □ + △
2) ○ = △ + △
3) ○ = □ + □
4) △ = ○ + ○

* கரனினதும் ரூபனினதும் நிறை 50kg ஆகும்.
ரூபனினதும் நிமலனினதும் நிறை 49kg ஆகும்.
கரன் , ரூபன், நிமலனினதும் நிறை 75kg எனின்,

30. இவர்களில் நிறை கூடியவர் யார்?
1) நிமல். 2) ரூபன். 3) கரன்.

31. கரனினதும் நிமலனதும் நிறை,
1) 50kg 2) 51kg 3) 49kg 4) 52kg

* 3 பேனாக்களும் 2 பென்சில்களும் விலை ரூபா 40.00.
1 பேனாவினதும் 2 பென்சில்களதும் விலை ரூபா 20.00. எனின்,

மறுபக்கம் பார்க்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் தொடர்ந்து அடை மழை! மண்சரிவு; போக்குவரத்துப் பாதிப்பு!!

கண்டி,மே7

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழைக் காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள போக்குவரத்து பல நேரம் ஸ்தம்பிதநிலையிலுள்ளது.

குறிப்பாக பதுளை, பண்டாரவளை, ஹப்புத்தளை, வெலிமடை, பொறலாந்தை, தியத்தலாவை, கொஸ்லாந்தை, பூனாகலை போன்ற பிரதேசங்களில் பாரிய மண்சரிவு ஏற்பட்டு ஆங்காங்கு வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட வீதிகளை உடனடியாக சீர்செய்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் வீதி அதிகாரசபை, பிரதேசசெயலாளர் காரியாலயம், பிரதேச சபைகள் தோட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் இணைந்து முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இதுதவிர மாகாண சபையின் வீதி அதிகாரசபை பிரிவு கனரக வாகனங்கள் மூலம் வீதிகளின் இரு மருங்கிலும் நிறைந்துள்ள மண் மேடுகளை அகற்றி வருகின்றனர்.

தொடர்ந்தும் அடைமழை பெய்து வருவதால் பல சிரமங்களுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட வீதிகளை செப்பனிட்டு வருவதாக வீதி அதிகார சபையினர் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை செல்லும் மாணவர்களது நலன் கருதி இலங்கை போக்குவரத்துச் சபையினரும் தனியார் பஸ் சேவையினரும் இணைந்து போக்குவரத்துச் சேவைகளை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.(ளி)

## கேகாலையில் ஏலக்காய்க்கு கிராக்கி

கேகாலை,மே7

கேகாலை மாவட்டத்தில் வாசனைத்திரவியமான ஏலக்காய் உற்பத்தி மேற்கொள்வோர் கூடிய வருமானம் பெற்றுள்ளனர்.

கிலோ 800 ரூபா முதல் 1000 ரூபாவாக இருந்த ஏலம் ஒரு கிலோ இம்முறை கிலோ 2,000 ரூபா வரை உயர்ந்துள்ளது. அத்துடன், கராம்பு சாதிக் காய் என்பனவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இதனால் இவ்வாசனைத் திரவிய உற்பத்தியாளர்கள் இம்முறை அதிக வருமானம் பெற்று மகிழ்ச்சியடைந்துள்ளனர்.(ளி)

## சீத்தகங்குல நதியில் அள்ளுண்டு தாய், குழந்தை உட்பட மூவர் பலி!

கொழும்பு,மே7

சிவனொளிபாதமலையைத் தரிசித்த பின்னர் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தவர்களில் மூன்றுபேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏரத்தன - சிவனொளிபாத மலை வீதியில் சீத்த கங்குல என்ற நதியின் நீரில் அள்ளுண்டு சென்று உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் தாய், குழந்தை மற்றும் தாயாரின் சகோதரி எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கிரராவித்த, அவுங்கள்ளி என்ற இடத்தைச் சேர்ந்த இனோக்கா தர்சினி சொய்சாவும், அவரின் குழந்தையும், சகோதரியான நானி சுதர்சினி சொய்சாவும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் சகோதரிகள் இருவரின் சடலங்கள் மட்டும் நேற்றுமுன்தினம் மீட்கப்பட் டன எனவும், குழந்தையின் சடலம் இதுவரை மீட்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த சகோதரிகள் இருவரும் இராணுவத்தைச் சேர்ந்தவர்களின் மனைவிமார்கள் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த தாயும், சகோதரியும் குழந்தையுடன் இராணுவ சேவையில் உள்ள தமது கணவர்மாருடன் சிவனொளிபாத மலைக்குச் சென்று தரிசித்த பின்னர் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். இதன்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சீத்த கங்குல், குருகங்கையைத் தாண்டி மக்கள் செல்வதற்காக கற்கள் போடப்பட்டு கங்கையை மறித்து நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாதையால் சென்றபோதே எதிர்பாராத வகையில் காட்டுப் பகுதியிலிருந்து அதிக அளவில் வெள்ளம் வந்தமையால் அதில் அகப்பட்டு சகோதரிகள் இருவரும், குழந்தையும் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

## வங்கித் தேவைகளுக்காக அறிமுகமில்லாதவரிடம் உதவியை நாடும்போது அவதானமாக இருங்கள்

### பண்டாரவளைப் பொலிஸார் எச்சரிக்கை

கண்டி,மே7

''வங்கி தேவைகளுக்காக வருகின்ற பொதுமக்கள், வங்கி ஊழியரல்லாத அறிமுகமற்றவர்களிடம் உதவியை நாடும் போது மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும்'' - இவ்வாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டாரவளை நகரத்தில் அமைந்துள்ள தனியார் வங்கியில் வைத்து நமுனுகுல பள்ளக்கொட்டுவ பிரதேச தொழிலாளியின் ஐந்து இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டு மீட்கப்பட்ட சம்பவத்தையடுத்தே இவ்வெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினமான கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நமுனுகுல பள்ளக்கொட்டுவ பகுதி பெருந்தோட்டமொன்றைச் சேர்ந்த தொழிலாளியொருவர் தனது ஊழியர் சேமலாப நிதி மற்றும் சேமிப்பு பணமான ரூபா ஐந்து இலட்சத்தை தனது மகனது பெயரில் வைப்பிலிட எட்டு வயது நிரம்பிய மகனோடு சென்றுள்ளார். அவ்வாறு வருகைத்தந்தவர் வங்கி கணக்கு படிவமொன்றை நிரப்பித்தருமாறு குறித்த வங்கிக்கு வருகைத்தந்திருந்த நபரொருவரின் தயவை நாடியுள்ளார். குறித்த நபரோ இவருக்கு உதவி செய்வதாகப் பாசாங்கு காட்டிவிட்டு, ரூபா ஐந்து இலட்சம் பணத்தையும் சூட்சுமாகத் திருடிக்கொண்டு அங்கிருந்து நழுவியுள்ளார்.

செய்வதறியாதத் தொழிலாளி திகைத்துப் போய் வங்கி பாதுகாப்பு ஊழியர்களிடம் முறையிட துரிதமாக செயற்பட்டு பண்டாரவளை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். சம்பவம் அறிந்து விரைந்த பொலிஸார் பதுளை பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர்.

இந்த பின்னணியில் ஹாலி-எல பஸ் நிலையத்துக்கருகில் இருந்த சோதனை சாவடிக்கு அருகில் நடத்தப்பட்ட சோதனையின்போது மோட்டார் சைக்கிளில் வந்த திருட்டு நபர் மடக்கிபிடிக்கப்பட்டார். அத்தோடு பணமும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர் பதுளை பிட்டியவைச் சேர்ந்தவரென தெரியவருகிறது. அத்துடன், பண்டாரவளை பதுளை பொலிஸார் சந்தேகநபரை பற்றிய தகவல்களை திரட்டி வருகின்றனர். (ளி)

## நவீன சந்தை கட்டடம் அமைக்க பூஜாபிட்டிய பிரதேசபை திட்டம்

கண்டி,மே7

பூஜாபிட்டிய பிரதேசசபை அதன் பிரதேச பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பூஜாபிட்டிய நகரமத்தியில் நவீன வசதிகளுடன் கூடிய சந்தைக் கட்டட தொகுதியொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் பூஜாபிட்டிய பிரதேசத்தின் பிரதேச உற்பத்திப் பொருள்களுக்கான சிறந்தொரு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க முடியுமென வும், பிரதேச ரீதியான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பூஜாபிட்டிய பிரதேச வியாபாரிகள் உட்பட சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் பல நன்மைகளை பெறவுள்ளதுடன், பிரதேசத்தில் பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன - எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

## ஹரிஸ்பத்துவ பிரதேசத்தில் குழாய்க் கிணறுகள் பழுது

கண்டி,மே7

ஹரிஸ்பத்துவ பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த குழாய்க் கிணறுகள் அனைத்தும் பழுதடைந்துள்ளன. இதனால் வரட்சி காலங்களில் மக்கள் மிகவும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

குழாய் மூலமாக நீர் விநியோகம் மேற்கொள்ள முடியாத பிரதேசங்களுக்கு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்படி குழாய்க்கிணறுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. கடந்த காலங்களில் கிராம வாழ் மக்கள் இதன் மூலம் சிறந்த பயன்களை அடைந்து வந்தனர். எனினும், பராமரிப்புக் குறைபாடுகள் காரணமாகவும், பழுதடைந்தவை உரிய காலத்தில் திருத்தி அமைக்கப்படாமை காரணமாகவும் இவை பயன்பெற முடியாத நிலைக்குட்பட்டுள்ளன.

எனவே, உரிய நிர்வாகங்கள் முன்வந்து இவற்றைத் திருத்தி அமைத்து மக்களுக்குப் பயன்பட வழிசெய்யுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ளி)




## ஊவாவில் விளையாட்டுத்துறையை மேம்படுத்த 82 லட்சம் ரூபா நிதி

பதுளை,மே7

ஊவா மாகாணத்தில் விளையாட்டுத்துறைகளை மேம்படுத்த சுமார் 82 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.டி.சிறிசேன தெரிவித்தார்.

ஊவா ஜிம்னாஸ்டிக் நிலையத்திற்குத் தேவைப்படும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கென 40 இலட்சம் ரூபா கிராந்துருகோட்டை விளையாட்டுத்துறை பாடசாலைக்கு உபகரணங்களைப் பெறவும், விளையாட்டு வீரர்களுக்கு பூரண பயிற்சியையளிக்கும் முகமாகவும் 20 லட்சம் ரூபா மொனராகலைப் பகுதியில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க இரண்டு லட்சம் ரூபா தேசிய ரீதியில் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் அவர்களுக்கானப் பயிற்சிகளை வழங்கவும், இது தொடர்பான செயலமர்வுகளை மேற்கொள்ளுவதற்குமென 20 லட்சம் ரூபா என்றடிப்படையில் 82 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய செயற்பாடுகள் மூலம் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கொண்டு செல்வதே எமது அமைச்சின் இலக்காகுமென்றும் அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். (ளி)

## டயகம பிரதேசத்தில் மண்சரிவு அபாயம்; மக்களை வெளியேறுமாறு அறிவுறுத்து!

நுவரெலியா,மே7

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட டயகம பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டதையடுத்து அப்பிரதேசத்தின் நகர வர்த்தகர்களையும், குடியிருப்பாளர்களையும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு நுவரெலிய மாவட்ட அரச அதிபர் குமாரசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மண்சரிவு அபாயத்தையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் படி இப்பிரதேசத்தில் குடியேற தடை செய்யப்பட்டுள்ளது.

9 கடைகளும், ஒரு குடியிருப்பும் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் பாரிய மண்சரிவு ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பதாகவும், இவ்விடத்தில் உள்ள கட்டடங்கள் எவ்வேளையிலும் இடிந்துவிழும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேசத்திற்கு வருகை தந்த நுவரெலிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினர் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)

## வலப்பனையில் குரங்குகள் அட்டகாசம்

நுவரெலியா,மே7

கண்டி நகரில் இருந்து ரந்தென்கல காட்டுப் பகுதிக்கு கொண்டு சென்று கைவிடப்பட்ட உட வத்தகல காட்டுக் குரங்குகள் அப்பகுதியில் பாரிய சேதம் விளைவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கண்டி நகரில் குரங்குத் தொல்லை அதிகரித்ததை அடுத்து இவ ரன்தென்கல காட்டுப் பகுதியில் விடப்பட்டன. அவை தற்போது வலப்பனைப் பகுதிக்கு வந்து அங்குள்ள விவசாயப் பயிர்களை அழித்து வருகின்றன எனவும் கூறப்படுகிறது. (ளி)

## மாத்தளை மாவட்டத்தில் இதுவரை 3,500 வீட்டுத் தோட்டங்கள்

மாத்தளை,மே7

மாத்தளை மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரை 3,500 வீட்டுத்தோட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாத்தளை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மாதவ வர்ணகுல சூரிய தெரிவிக்கின்றார்.

பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என்ற அடிப்படையில் வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அதற்கு முன்னோடியாகவே இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும், இதற்கென ஒருவருக்கு 500 ரூபாவுக்கான விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (ளி)

## மாணவன் மீது தாக்குதல்; சந்தேகத்தில் ஆசிரியர் கைது!

தம்புள்ள,மே7

ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்ட 10 வயது மாணவன் தம்புள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒரு ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ள நிக்கவட்டவள முஸ்லிம் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பில் கல்வி பயிலும் மொகமட் அஸ்கர் என்பவரே ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என மாணவனின் தந்தை எஸ். அலால்தீன் என்பவர் தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதற்கமையவே குறித்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டார்.(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11.02.1966
மறைவு: 28.04.2008

## திருமதி சசிகலா (மீனா) விஸ்வலிங்கம்

அஞ்சலிக்கின்றோம் சசியே
அஞ்சலிக்கின்றோம்


ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
அன்பின் சசியே!
நீண்டதோர் நீங்கா நினைவுகளுடன்
நிலையற்ற இவ்வுலகில் வாழ்கின்றோம்
ஆண்டவன் அழைப்பேற்று சென்றாயோ!
அன்புக்கணவனை ஆருயிர் சோதரரை பிரிந்ததேன்
வேண்டாம் இவ்வுலகென்று நீ
விரைந்து எங்கு சென்றாயம்மா!
மாண்டு போனாயென்று நாம் எண்ணவில்லை
மனையிலும் மனங்களிலும் குடியிருக்கின்றாய்
ஆண்டு கொண்டிருக்கும் மருதடி விநாயகன்,
காளியம்பாள் தாளில் வாழ
அஞ்சலிக்கின்றோம் சசியே அஞ்சலிக்கின்றோம்.

என்றும் உந்தன்
நினைவுகளுடன் வாழும்:
**கணவர்,**
**உடன் பிறந்தவர்கள்.**

நுணாவில் மேற்கு,
மடத்தடி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## சசிகலாவின் நினைவுக் காணிக்கையான சரஸ்வதி திருக்கோயில்

*சந்திரபுர ஸ்கந்தவரோதய மத்திய வித்தியாசாலையில்*
*சசிகலா ஞாபகார்த்தமான சரஸ்வதி திருக்கோவிலிது*
*எந்தையும் தாயும் எமக்கு கல்விதந்த பள்ளியும்*
*எழிலுடனெழுந்த எம் மூரில் கலைத்தாயின் திருக்கோவிலது*
*வந்தனைக்குரிய நாமகளை வலம்வந்தே நாளும்தொழ*
*வாஞ்சனையுடன் சசிகலாவின் கணவர் வண்ணமுற அமைத்தார்*
*சிந்தனை சொல் செயல் கலைகளாயிரம் சிறந்திடவே*
*செய்வோம் வாணித் தாயவளுக்கு வந்தனைகளாயிரம்*

கவியாக்கம்: மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன்

## யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்
சாவகச்சேரி

# 75 ஆவது ஆண்டு பவள விழாவும்

## அமரர் சசிகலா (மீனா) விஸ்வலிங்கம் அவர்களின் 2 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளும்

### நிகழ்வுகள் 2010.05.07 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

★ 75 ஆவது ஆண்டையொட்டிய பவளவிழா மலர்வெளியீடு
★ அமரர் சசிகலா (மீனா) விஸ்வலிங்கம் பழைய மாணவி அவர்களின் ஞாபகார்த்தமாக பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடை வழங்கல்
★ புலமைப்பரிசில் பெற்ற மாணவனுக்குரிய துவிச்சக்கரவண்டி வழங்கல்

**வித்தியாலயத்தில் கொண்டாடப்படும் பவளவிழாவிலும் அமரர் சசிகலா (மீனா) விஸ்வலிங்கம் அவர்களின் 2 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்**
**கல்விச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயது வித்தியாசமின்றி அனைவரையும் அதிகளவில் தாக்கும் நீரிழிவு நோய்

**யாழ்.போதனா வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமையுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ்.போதனா வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது.

நீரிழிவு நோயானது வயது வித்தியாசமின்றி, அதிகளவு காணப்படுகின்ற ஒரு நோயாக உள்ளது. எனவே இந்நோய் பற்றி பூரணமாக முன்கூட்டியே அறிந்துகொள்வதன் மூலம் நீரிழிவுநோய் ஏற்படுகின்ற வீதத்தினைக் குறைத்துக்கொள்ள வழிவகுக்கும்.

நீரிழிவு சிகிச்சை நிலையமானது நீரிழிவு நோயாளிகளுக்கும் ஏனையோருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

பல்வேறுபட்ட தரப்பினது உதவிகளும், ஆதரவும் கிடைப்பதன் மூலம் இந் நிலையம் தொடர்ந்து சிறப்பாக இயங்கி வருகிறது.

நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் மூலம் ஒவ்வொரு நீரிழிவு நோயாளியும் பூரணமாக மதிப்பீடு செய்யப்படுகின்றார்கள்.

அத்துடன் நீரிழிவு நோயாளிகளுக்கான

* உணவு சம்பந்தமான ஆலோசனைகள்
* உடற்பயிற்சி தொடர்பான ஆலோசனைகள்
* நீரிழிவினால் நீண்டகாலத்தில் ஏற்படும் பாதகமான விளைவுகள்
* நீரிழிவு நோயாளிகள் குருதியில் குளுக்கோசின் அளவை எவ்வாறு கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
* நீரிழிவு நோயாளிகள் பாவிக்கின்ற மருந்து வகைகள்
* நீரிழிவு நோயாளிகள் மன அழுத்தத்தைக்குறைப்பதற்காக செய்யவேண்டிய பரிசோதனை வகைகள் போன்ற விடயங்கள்.

குழுநிலை கலந்துரையாடல்கள், தனிப்பட்ட கலந்துரையாடல்கள், இறுவட்டு படங்கள் மூலம், பதாகைகள் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

நீரிழிவு நோயாளிகளுக்கு கண்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் கண்




டறிவதற்கு கண்களில் நுணுக்கமான கமராமூலம் (Rehnal Camera)படம் எடுக்கப்பட்டு பொது வைத்திய நிபுணராலும், தேவையேற்படின் கண் சத்திர சிகிச்சை நிபுணரினாலும் பார்வையிடப்படுகிறது.

நீரிழிவு சிகிச்சை நிலையமும், யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும், யாழ்.மருத்துவ பீடமும் இணைந்து நடத்திய ''நீரிழிவை வெற்றி கொள்வோம்'' என்ற தொனிப்பொருளுடனான மாபெரும் விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும் இவ்வருடம் பெப்ரவரி மாத்தில் நடைபெற்றது யாவருக்கும் தெரிந்ததே.

இக்கண்காட்சி மூலம் பல்லாயிரக்கணக்கானோர் பயனடைந்ததுடன் மக்களிடையே பெருவரவேற்பையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தது.

கண்காட்சியினூடாக நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுக் கழகங்களைப் பிரதேசங்கள் தோறும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பலனாக, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் விழிப்புணர்வுக்கழகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன. அதேபோல் ஏனைய பிரதேசங்களிலும் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

மேலும் புதிதாக இணைந்துகொள்ள விரும்பிவோர் 0213207020 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு விவரங்களை வழங்கலாம்.

இந் நிலையமானது தொடர்ந்து சிறப்பாக நடைபெற அனைவரினதும் பூரண ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

**இ.பரமேஸ்வரன்**
வைத்திய அதிகாரி,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

********

# மன்னாரில் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது 2ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன

## பிரதிப்பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தகவல்



யாழ்ப்பாணம், மே7

விவாக,பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் மன்னார் மாவட்டத்தில் அண்மையில் நடந்த மீளக் குடியமர்ந்தோருக்கான நடமாடும் சேவையின்போது பெறப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

விவாக,பிறப்பு,இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், இடம்பெயர்ந்தபோது பிறந்த பிள்ளைகளின் பிறப்பை பதிவு செய்வதற்காகவும் கடந்த 23ஆம்,24ஆம், 25 ஆம் திகதிகளில் மன்னார் நகரம், மாந்தை, முசலி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடமாடும் சேவை இடம்பெற்றது.

இது தொடர்பாக பிரதிப்பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்தவை வருமாறு ;-

கடந்த 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும், பிறந்த பிள்ளைகளின் பிறப்புக்கள் பதிய புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மாந்தைப் பிரிவில் பிறந்தவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் மேற்படி நடைபெற்ற இடம்பெயர் சேவையில் அன்றைய தினமே வழங்கப்பட்டன.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பின் சுனாமி மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான திட்டத்தின் அனுசரணையில் மேற்படி இடம்பெயர்சேவை இடம்பெற்றது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இரவு 7 மணிவரை இறுதி விண்ணப்பதாரியின் விண்ணப்பம் ஏற்றுக் கொண்ட பின்பே இடம் பெயர்சேவை நிறைவு செய்யப்பட்டது.

எனினும் இந்நடமாடும் சேவையில் பல சிரமங்களை அதிகாரிகள் எதிர்நோக்க வேண்டியேற்பட்டது.ஆண்களை விட அதிகமான பெண்களே கைக்குழந்தையுடன் இந்தச் சேவைக்கு வருகை தந்திருந்தனர். பெண்கள் தமது பிள்ளைகளின் பிறப்பைப் பதிய வேண்டும் எனும் அக்கறையுடன் நடமாடும் சேவைக்கு வந்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக பெண்களிடம் கேட்டபோது, ஆண்களுக்கு இவ் விடயத்தில் அக்கறை இல்லையெனக் குறைபட்டனர். திருமணச்சான்று இல்லாமல், தந்தையின் சமுகமளிப்பின்றியும் பிள்ளையின் பிறப்பைப் பதிவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

இருப்பினும் மனிதாபிமான ரீதியில் எவரையும் திருப்பி அனுப்பாமல் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்தி போலிச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளவந்தோர் இனங்காணப்பட்டு உரிய முறையில் நடவடிக்கை எடுத்து சான்றிதழ்களைப் பெறவேண்டும் எனக் கூறிய வேளை, அதிகாரிகளுடன் முரண்பட்டுச் சென்றதுடன் இடம்பெயர் சேவையில் மக்களுக்கு சரியான முறையில் சேவை செய்யவில்லையென குறைபட்டும் சென்றுள்ளனர்.

மாந்தைப் பிரிவில் வசிக்கும் அனைத்து மக்களினதும் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் நோக்கில் மீண்டும் ஒரு விசாலமான இடம்பெயர்சேவையை ஏற்பாடு செய்ய நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பின் திட்டம் நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன் அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோரின் ஏற்பாட்டில் கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் பதிவாளர் நாயகம் திணைக்கள சேவைகள் தொடர்பான நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன என்றார். (50 - 201)


## மக்களின் சேவகனுக்கு மகத்தான வரவேற்பு



பாரம்பரிய கைத்தொழில் மற்றும் நல்லிணக்க சிறு கைத்தொழில் அமைச்சராக பதவியேற்று இன்று எமது மண்ணிற்கு வருகைதரும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் கௌரவ அமைச்சர் திரு .கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை
வருக, வருக என வரவேற்கின்றோம்.
ஜே/80, பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்கம்.

## வேலையாள்கள் தேவை

வெகு விரைவில் சுன்னாகத்தில் ஆரம்பிக்க இருக்கும் பிரபல்யமான நிதி நிறுவனத்தின் கிளை ஒன்றுக்கு விற்பனை உதவியாளர்கள் (Marketing Assistants) தேவைப் படுகின்றனர். தகுதி உடையவர்கள் தமது தொலைபேசி இலக்கமும் உள்ளடங்கிய சுயவிவரக் கோவையை 09.05.2010 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.
C/0 உதயன் 4014
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அந்தோனிப்பிள்ளை
உதயராஜ் (ராஜன்)
(கரித்தாஸ் கியூடெக் பணியாளர், கிளிநொச்சி)
அன்னை மடியில் 14★ 09 ★1983
மண்ணின் மடியில் 07★ 05 ★2009
[97813]
உன் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
செம்பியன்பற்று தெற்கு, தாழையடி. தகவல்: இளமாறன்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 ★ 01 ★ 1920
மறைவு 07 ★ 04 ★ 2010



திருமதி நாகம்மா சுப்பையா

*அம்மா என செல்வங்கள் அழைத்தால் ஓடிவரும் தாயே!*
*அன்பையும் பண்பையும் ஊட்டி வளர்த்தவளே*
*முதுமை உன் அகவைக்கே மனதிற்கு இல்லையம்மா*
*உன் இறுதி மூச்சைக்கூட காலன் களவாடியது ஏனோ?*
*நீ எம்முடன் இல்லாவிடினும் என்றும் உன் நினைவுகள் எம்முடனே*
*உன் கனவுகள் யாவும் ஈடேற உறவுகள் கோர்வைகளாகி*
*இறை திருக்கமலத்தில் நீ சங்கமிக்க இறைஞ்சுகின்றோம்.*
(97830)

மங்குனியன் வளவு,
அளவெட்டி மத்தி.
தொ.பே: 0213006194

என்றும் உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

இலக்கம் 8/2, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சகுந்தலாதேவி என்பவருடைய இலக்கம் 505794214V கொண்ட தேசிய அடையாள அட்டை யாழ்.நகருக்கும் ஒட்டுமடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் 0775283087 கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

கொக்குவில் மேற்கு, சொர்ண வடலிப் பகுதியில் மணி பேர்சுடன் தேசிய அடையாள அட்டை [382721128V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
க.சோமசுந்தரம்
1229/6,பூநாறி லேன்,
கொக்குவில். தொ.பே: 2229890

## வேலையாள்கள் தேவை

தட்டு வடை, எள்ளுப்பொரி உற்பத்தி செய்யத் தெரிந்தவர்கள், பொதி செய்யத் தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு: அல்பா மிக்சர் கொம்பனி,
உடுவில் றோட், மானிப்பாய்.
தொ.பே: 0212228601

## கார் விற்பனைக்கு

முற்றிலும் குளிரூட்டப்பட்ட நல்ல நிலையிலுள்ள Toyota CORONA 18 கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774910336

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 509
சீட்டிழுப்பு திகதி: 05.05.2010

வெற்றி எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 19 29 59 69

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,649,484.80 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 197 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 402 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 9948 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5725 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 143115 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 22923 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 6,877,040.00

வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.13,860,973.60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. 4 பேனாக்களது விலை,
1) 30.00 2) 40.00 3) 35.00 4) 45.00

33. 1 பேனாவினதும் 1 பென்சிலினதும் விலை,
1) 20.00 2) 10.00 3) 25.00 4) 15.00

34. படம், பட்டம், பாடசாலை, பண்டகசாலை எனும் 4 சொற்களிலும் இடம் பெற்ற எழுத்து,
1) ம் 2) ப 3) ட 4) பா

* பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

இரவைப் பகலாய் ஆக்கி நீயும்
இன்பம் தருகிறாய் - உலகிலே
ஏற்றத் தாழ்வு பாராமலே
ஒளியைத் தருகிறாய்.

35. இப்பாடலின் மூலம் குறிப்பிடப்படுவது,
1) சந்திரன். 2) நட்சத்திரம். 3) சூரியன். 4) மின்விளக்கு.

36. இப்பாடலில் உள்ள எதிர்ச்சொல் சோடிகளின் எண்ணிக்கை,
1) 3 2) 2 3) 1 4) 4

* பின்வரும் கூற்றுகள் தவறானவை. அதற்கான காரணத்தைச் சுருக்கமாக எழுதுக.

37. பசியால் அலைந்து திரிந்த யானை ஒன்று முயல் ஒன்றைக் கண்டு, முயலை வேகமாகத் துரத்திச் சென்று தனது தும்பிக்கையால் முயலைப் பிடித்துக் கொன்று தின்று இரையாக்கியது.

........................................................................................................

38. வெளவால் தனது முட்டைகளை காகத்திடம் இருந்து பாதுகாப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டது.

........................................................................................................

* சரியான கருத்தை தரும் வாக்கியத்தின் கீழ்க்கோடிடுக.


39. 1) பட்டம் ஏற்றுவது காற்றுள்ளபோது சிறந்தது.
2) காற்றுள்ள பட்டம் ஏற்றுவது சிறந்தது.
3) காற்றுள்ளபோது பட்டம் ஏற்றுவது சிறந்தது.
4) ஏற்றுவது பட்டம் காற்றுள்ளபோது சிறந்தது.

40. 1) வானம் கறுத்தால் பெய்யும் மழை.
2) மழை கறுத்தால் வானம் பெய்யும்.
3) வானம் பெய்யும் மழை கறுத்தால்.
4) வானம் கறுத்தால் மழை பெய்யும்.


-நிறைவுற்றது-

**கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....**
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/021-2229944/071-4273035

# கல்விச்சாலைக்காட்சிகள்...




உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாணவிகளின் விநோத உடைப் போட்டியையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பழைய மாணவருடன் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் மற்றும் விருந்தினர்கள் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படம்: நேசன்)




வல்வை சிவகுரு வித்தியாலய கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய வணிக்கல்வி ஆசிரிய ஆலோசகர் வி.பரராஜசிங்கம் உரையாற்றுவதை முதற்படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள்,ஆசிரியர்கள்,மற்றும் விருந்தினர்களை இறுதிப் படத்திலும் காணலாம்.







அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றி வைப்பததையும் வித்தியாலய அதிபர் எஸ்.மாணிக்க வாசகர் உரையாற்றுவதையும், உலவிக்குளம் பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ வை.விருத்தகீரிஸ்வரக் குருக்கள் விளையாட்டு வீரர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: அச்சுவேலி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்ன நேரத்தில் சொல்லியடிக்கும் அதிவேகம் கொண்ட ஜப்பானிய ரயில்

**இலங்கை மற்றும் ஜப்பான் அரசுகளின் ஏற்பாட்டில் 'சமாதான முன்னெடுப்பு பயணம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் சமீபத்தில் ஜப்பானுக்கு ஒருவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவரான 'உதயனின்' சகோதரப்பத்திரிகையான 'சுடர்ஒளி' யின் உதவி ஆசிரியர் செ.அற்புதன் தமது அனுபவத்தை இங்கு தொடராகப் பகிர்ந்து கொள்கிறார்.**

அது பெரிய தவறுதானே....? அமைச்சராக இருந்தாலும் சரி, பிரதமராக இருந்தாலும் சரி, எந்தக் கொம்பனாக இருந்தாலும் நேரத்தை எல்லோரும் மதிக்கவேண்டும். இதுதான் ஜப்பானியர்களின் கொள்கை.''

அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள் முதற்கொண்டு சாதாரண பெட்டிக்கடைகள் வ[illegible] சரியான நேரத்துக்கு ஆரம்பமாகிவிடுகின்றன. போக்குவரத்தைப் பொறுத்தவரை பஸ்ஸோ, ரயிலோ குறித்த நேரத்துக்குப் புறப்பட வேண்டும். சரியான நேரத்துக்கு குறித்த இடத்தைச் சென்றடைய வேண்டும்.



அதிவேக ரயில் (Bullet Train)

ஓரிரு நிமிடங்கள் பிந்தினால் கூட பெரீ...ய பிரச்சினை ஆகிவிடும்.

### ரயில் புறப்படும் நேரம் 3.37

ஒரு தடவை நாங்கள் அதிவேக ரயிலில்(Bullet Train) பயணித்தோம். இலங்கையிலிருந்து நாங்கள் புறப்படுவதற்கு முன்னரே - சுமார் 10நாட்களுக்கு முன்பாகவே - எங்களுக்குத் தரப்பட்ட நிகழ்ச்சி நிரலில் எங்களுடைய அந்த அதிவேக ரயில், குறித்த ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 3.37 மணிக்குப் புறப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

3.15 மணிக்கே எங்களை ரயில் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார் ஒகா. நம்மூரில் ரயில்கள் புறப்படுவதற்கு 3மணி, 3.30,3.45 என்று மட்டந்தட்டிய நேரங்களீதானே குறிக்கப்பட்டிருக்கும். (அந்த நேரத்துக்கு இலங்கை யில் எந்த ரயிலும் புறப்படுவதில்லை என்பது வேறுகதை) ஆனால் ஜப்பானில் 3.37 என்று போட்டிருக்கிறார்கள். 3.30மணியாகிவிட்டது. எங்களுக்கான ரயில் வந்துசேரவில்லை. அது வேறு எங்கோ தூரத்திலிருந்து வந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். மொழிபெயர்ப்பாளரான ஜப்பானியப் பெண் ஒகாவைச் சீண்டினோம். ''உங்கள் நாட்டில் சரியான நேரம், சரியான நேரம் என்கிறீர்களே... இங்கிருந்து புறப்படுவதற்கு இன்னும் 7நிமிடங்கள்தான் இருக்கின்றன. ஆனால் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ரயிலை இன்னும் காணவில்லையே...'' அதற்கு அந்தப் பெண் என்ன சொன்னார் தெரியுமா....? ''சரியாக 3.37மணிக்கு இங்கிருந்து ரயில் புறப்படும். தவறினால் உங்கள் மணிக்கூட்டிலே நேரம் பிழையாக ஓடுகிறது என்றுதான் அர்த்தமே தவிர ரயில் ஒருபோதும் பிந்தாது.'' தங்கள் நாட்டுப் போக்குவரத்துத் துறையில் அவ்வளவு நம்பிக்கை அவர்களுக்கு....!

3.35 ஆகிவிட்டது. இன்னும் ரயில் வரவில்லை.ஒகாவை 'மட்டந்தட்டுவதற்கு'நாங்கள் தயாராகினோம். 3.36... திடீரென்று வேகமாக எங்கள் முன் வந்து நின்றது ரயில். எல்லாப் பெட்டிகளின் கதவுகளும் அகலத் திறந்தன. பயணிகள் வேகமாக இறங்கினார்கள். வெளியே காத்திருந்தவர்களும் சீக்கிரம் ஏறினார்கள். மீண்டும் கதவுகள் தாமாகவே மூடிக்கொண்டன. உடனே ரயில் புறப்பட்டது. உள்ளே இருந்து எங்கள் மணிக்கூடுகளைப் பார்த்தோம். 3.37.

**பகுதி 5**

ரயில் நிலையங்களில் பணியாளர்களை அதிகளவில் காணமுடியவில்லை. ஒவ்வொரு ரயில் நிலையங்களிலும் ஒருவர் அல்லது இருவர் மட்டுமே கடமையில் இருக்கிறார்கள். பயணிகள் ரிக்கெற் வாங்குவது இயந்திரங்களிடம் தான். அதாவது அங்கு நுழைவாயிலில் பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரத்துக்குள் பணத்தைப் போட்டுவிட்டு, போகவேண்டிய இடத்தைக் குறிப்பிட் டால் அதற்கான டிக்கெற்றையும் மிகுதிப் பணத்தையும் இயந்திரங்களே தருகின்றன. அதை எடுத்துக்கொண்டு உள்ளே போனால் அங்கும் இயந்திரம். ரிக்கெற்றை அதற்குள் போட்டால் அது எங்களை உள்ளே செல்ல விடுகிறது. இறங்கி வெளியே வரும்போதும் அதே முறை தான். சாதாரண உள்ளூர் ரயில் சேவை களைப் பொறுத்தவரையில் 5 நிமிடங்க ளுக்கு ஒருதடவை ரயில்கள் வந்து வந்து போகின்றன. எந்த இடத்துக்குப் போகவேண்டு மாக இருந்தாலும் ஆகக் கூடுதலாக 5 நிமிடங்களுக்கு மேல் ரயில் நிலையத்தில்தாமதிக்க வேண்டியதில்லை. ஆனால் நீண்ட தூர இடங்களுக்குச் செல்வதற்கு அதிவேக ரயில் (Bullet Train) பயன்படுத்தப்படுகிறது. 'புள்ளட்'(Bullet) என்ற ஆங்கில வார்த்தை துப்பாக்கியில் இருந்து புறப்படும் சன்னத்தைக் குறிக்கிறது. இந்த அதிவேக ரயிலின் முகப்பும் துப்பாக்கிக் குண்டு போன்ற தோற்றத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. துப்பாக்கியிலிருந்து புறப்படும் குண்டு எவ்வளவு வேகமாகச் செல்கிறதோ அதுபோலவே இந்த அதிவேக ரயிலும் பயணிக்கிறது. இதனால்தான் இந்த வகை ரயில்களை 'புள்ளட் ரயில்' (Bullet Train) என்று அழைக்கிறார்கள். மணிக்கு 225 கிலோமீற்றர் வேகத்தில் இவை செல்கின்றன. இதனைவிட மணிக்கு 545 கிலோமீற்றர் வேகத்தில் செல்க்கூடிய ரயிலை இப்போது ஜப்பானில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்களாம்.

### இலத்திரனியல் நகரம்

இலத்திரனியல் பொருட்களுக்குப் பெயர்போன நாடு ஜப்பான். டோக்கியோவில் அக்கிஹபாரா (Akihabara) என்றொரு இடம் இருக்கிறது. அதனை இலத்திரனியல் நகரம் (Electronic City) என்று அழைக்கிறார்கள். நாங்கள் தங்கியிருந்த ஹோட்ட லிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலை வில் அது இருக்கிறது. டோக்கியோவில் தங்கியிருந்த 4 நாட்களும் மாலை 6மணிக்குப் பிறகு அக்கிஹபாராவில்தான் எங்கள் பொழுதுபோக்கு. அதி நவீன டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் உருவான கமராக்கள், கணினிகள் உட்பட எல்லா வகையான இலத்திரனியல் பொருட்களும் அங்கு நிறைந்திருந்தன. இரவில் அந்த இடத்தின் அழகே தனி. பிரமாண்டமான கட்டடத் தொகுதிகள் ஒவ்வொன்றுமே இலத்திரனியல் பொருட்களின் விற்பனைகளும் காட்சியறைகளும். அங்கு சென்றால் திரும்பி வரவே மனம் வராது.

### 'மேட் இன் சீனா'!

அக்கிஹபாராவில் ஒரு விடயம் எங்களை ஆச்சரியப்பட வைத்தது. அதாவது அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நவீன இலத்திரனியல் பொருட்களில் பெரும்பாலானவை 'மேட் இன் சீனா' (Made in China) என்று பொறிக்கப்பட்ட பொருட்கள். அந்தப் பொருட்களும், மேட் இன் ஜப்பான் (Made in Japan) என்று பொறிக்கப்பட்டிருந்த பொருட்களும் கிட்டத்தட்ட ஒரேவிலைதான். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. நம்ம நாட்டில் ஜப்பான் நாட்டு உற்பத்தி என்பது பொறிக்கப்பட்டிருக்கிறதா என்றுதான் எல்லோரும் பார்ப்பார்கள். சீனத்தயாரிப்புப் பொருட்களை எவரும் கணக்கெடுப்பதேயில்லை. அப்படியிருக்கும்போது ஜப்பானில் சீனத்தயாரிப்புப் பொருட்களுக்கும் நல்ல 'கிராக்கி' இருக்கிறதே என்று நினைத்து ஆச்சரியப்பட்டோம். இதனை மொழிபெயர்ப்பாளர் ஒகா மூலமாகக் கடை உரிமையாளர் ஒரிவரிடம் கேட்டேன். அவர் சொன்ன பதிலில் விவரம் புரிந்தது.

''ஜப்பானுக்கு வருகின்ற 'மேட் இன் சீனா' பொருட்களுக்கும், ஸ்ரீலங்கா, இந்தியா போன்ற நாடுகளில் விற்பனையாகும் 'மேட் இன் சீனா' பொருட்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. சீனாவில் வேலையாட்களை ஜப்பானை விட மிகவும் குறைந்த சம்பளத்துடன் வேலைக்கு அமர்த்தலாம். அதனால் ஜப்பானிய நிறுவனங்கள் சீனாவுக்குச் சென்று ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் எமது நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு சீனாவில் வைத்து பொருட்களைத் தயாரித்து இங்கு கொண்டுவருகின்றன. அதனால் அவை 'மேட் இன் சீனா' என்று பொறிக்கப்பட்டிருந்தாலும் ஜப்பானிய உற்பத்திகள்தான். ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் விற்பனையாகும் 'மேட் இன் சீனா' என்று பொறிக்கப்பட்ட பொருட்கள் முழுக்க முழுக்க சீனாவின் தொழில்நுட்பத்தில் தயாரானவை. இதுதான் வித்தியாசம்.'' என்று கூறிமுடித்தார் அந்தக் கடைக்காரர்.



'அக்கிஹபாரா' நகரின் ஒரு காட்சி

அட...., இதுக்குள்ளயும் இப்படியொரு சமாச்சாரம் இருக்கா...!

சில இலத்திரனியல் பொருட்கள் எங்கள் நாட்டு விலையோடு ஒப்பிடுகையில் மலிவானவை. ஆனால் வேறு சில பொருட்கள் ஒப்பீட்டளவில் விலை கூடியவை. இருந்தாலும் எல்லாமே நல்ல தரமான பொருட்கள் என்பது மட்டும் தெரிந்தது.

### இலங்கைச் சாப்பாடு

அன்றிரவு ஜப்பானுக்கான இலங்கைத்தூதுவரின் இல்லத்தில் எங்களுக்கு விருந்து ஒன்று ஏற்பாடாகியிருந்தது. அங்கு சென்றபோது பதில்தூதர் எசல வீரக்கோனும் செயலாளர் சந்தன வீரசேனவும் எங்களை வரவேற்றனர். இருதரப்பினரும் நீண்ட நேரமாகப் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசினோம். ஜப்பானியர்களின் பணிவு, சிறுசிறு விடயங்களுக்கும் மற்றவர்களிடம் மன்னிப்புக் கோருகின்ற இயல்பு, நேரத்தை மதிக்கின்ற போக்கு ஆகிய குணங்களையெல்லாம் வியந்து பேசினார் பதில்தூதர் வீரக்கோன். அன்றிரவு அவரோடு உரையாடிய போதுதான் அவரைப்பற்றிய சில விடயங்கள் தெரியவந்தன.

இலங்கையின் ஐந்து ஜனாதிபதிகளுக்கும் ஒரு பிரதமருக்கும் தொடர்ச்சியாக செயலாளராகக் கடமையாற்றியவர் பிரட்மன் வீரக்கோன். அவரது மகன் தான் ஜப்பானிலுள்ள பதில் தூதர் எசல வீரக்கோன். அதுமட்டுமல்ல், கடந்த வருட முற்பகுதியில் வன்னியில் யுத்தம் அகோரமாக நடந்து கொண்டிருந்த போது வெளிநாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இருந்த இலங்கைத் தூதரகங்கள் மீது அந்தந்த நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் தாக்குதல் நடத்தினார்களல்லவா...! நோர்வேயில் இலங்கைத் தூதரகம் தாக்கப் பட்டபோது அங்கு நோர்வேக்கான இலங் கைத் தூதராகக் கடமையாற்றியவர் இந்த எசல வீரக்கோன். தனது கடந்த கால, நிகழ் கால இராஜதந்திர அனுபவங்கள் தொடர்பான பல விடயங்களை அவர் பேசினார்.

ஜப்பானில் நாங்கள் தங்கியிருந்த காலத்தில் அன்றிரவு மாத்திரம்தான் நம்ம நாட்டுச் சாப்பாடு கிடைத்தது. அதனால் அன்றிரவு எல்லோரும் நல்ல கட்டுக்கட்டினோம்.

### பாரம் பரிய உணவு

அடுத்த நாள் மதியம் ஜப்பானிய பாரம்பரிய ஹோட்டல் ஒன்றில் அந்த நாட்டின் பாரம்பரிய முறைப்படி எங்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. அன்றைய மதிய உணவை வழங்கி எங்களோடு உரையாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தவர் ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஷின்டோ (Shindo). அவரோடு அமைச்சு அதிகாரி மியாட்டா, மற்றும் சில அதிகாரிகளும் அங்கு வந்திருந்தனர்.

*(பயணம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.02.1991

✱ தமிழகத்தில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது என்பதுடன் அது இலங்கைக்குப் பெரிதும் உதவும் என அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின விமர்சிப்பு.

✱ இலங்கையில் தமிழருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை ஆட்சேபித்து ஐ.நா. சபையில் மனுச் செய்வதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சிறுபான்மையோர் உரிமை மற்றும் பாதுகாப்புக் குழு அமைப்பு உறுப்பினர் பேரசிரியர் பீற்றர் ஷோல்க் தெரிவிப்பு.

02.02.1991

✱ தமிழகத்தில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்ட விவகாரம் தமிழகம் தனிநாடாக மாறவேண்டும் என்ற உணர்வினை ஏற்படுத்தியிருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் எச்சரிக்கை.

✱ இலங்கை விமானப்படையினரின் கண்மூடித்தனமாக குண்டுவீச்சினால் பேரழிவுக்கு உள்ளாகியுள்ள வல்வெட்டித்துறைப் பகுதியின் சேதங்கள் குறித்து யாழ்.அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சுக்கு அறிக்கையொன்றினை அனுப்பவுள்ளதாகத் தெரிவிப்பு.

03.02.1991

✱தமிழ்ப் பிரதேசங்களில் பொது மக்கள் கூடும் இடங்களை இலக்குவைத்தே அநேகமாக குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டு

✱ மூன்று வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேட்டி கண்டதாகத் தெரிவிப்பு

04.02.1991

✱ கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்குச் சமீபமாக யாழ்ப்பாணம் வருவதற்காகத் தரித்து நின்ற பயணிகள் இனந்தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ கொழும்பிலுள்ள ஹோட்டல்கள், லொட்ஜ்ஜுகள் பலவற்றிலும் வடபகுதித் தமிழர்கள் நிரம்பி வழிவதாகவும் அவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் செல்லக் காத்திருப்பதாகவும் தெரிவிப்பு.

05.02.1991

✱ வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கண்காணிப்புக் குழு என்ற பெயரில் இயங்கும் இனந்தெரியாத குழுவொன்று பொதுமக்களைக் காரணமின்றிக் கைதுசெய்வதாக இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரிடம் வவுனியா பிரஜைகள் குழு முறையீடு.

✱ அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு போர் விமானங்கள் கட்டுநாயக்காவில் எரிபொருள் நிரப்பிச் செல்ல இலங்கை அரசு அனுமதி அளிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக இந்திய வானொலி தெரிவிப்பு.

06.02.1991

✱ தமிழர் பிரச்சினை தீரவேண்டுமானால் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசியல் ரீதியாகப் பேச இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

✱ யாழ்.போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு வலயத்திற்குள் நேற்று ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிப்பு.

07.02.1991

✱ மாவிட்டபுரம் தச்சன்காட்டு இராணுவ மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதல் சம்பவத்தில் இரு தரப்பிலும் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற் பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

08.02.1991

✱ வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

✱ தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் இந்தியத் தரப்பினர் விடாப்பிடியாக இருப்பதாகத் தெரிவிப்பு.

✱ தமிழகத்திலிருந்து 20 ஆயிரம் ஈழத் தமிழ் அகதி குடும்பங்கள் இலங்கைக்குத் திரும்பிவரவுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

09.02.1991

✱ இந்தியாவில் ஆட்சியிலிருந்து பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதாதள் கட்சி அரசைக் கவிழ்த்து விட்டுப் புதிய அரசொன்றை நிறுவ ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி தயாராகி வருவதாகத் தெரிவிப்பு.

✱ முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அகதிமுகாம் பகுதிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அரசினால் அனுமதிப்பு.

10.02.1991

✱ காணாமற்போன சுமார் 40ஆயிரம் பேரின் முழு விவரங்களும் தம்மிடமுள்ளதாக மனித உரிமைகளைப் பேணும் இயங்கங்கள் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

✱ வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் குறித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்கள் கண்டனம் தெரிவிப்பு.

11.02.1991

✱ இலங்கையில் இனப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது, எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து இந்தியா யோசனை எதனையும் தெரிவிக்காது என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவிப்பு.

✱ தமிழ் நாட்டில் சில நாள்களாகக் கைதுசெய்யப்பட்ட ஈழத் தமிழ்த் தீவிரவாதிகள் பற்றிய விவரங்களைத் தமிழக அரசு வெளியிடவேண்டும் என முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு.

12.02.1991

✱ மட்டக்களப்பு மாவட்டத்தில் பல தமிழ்க் கிராமங்கள் முற்றாக அழிந்துள்ளன. தமிழர்களது நடமாட்டமே இல்லாது பெரும்பாலான கிராமங்கள் வெறிச்சோடிக் காணப்படுவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பு.

✱ இப்போதைக்குத் தமிழர் தாயகத்தில் அமைதி ஏற்படக்கூடிய வாய்ப்பில்லை என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

13.02.1991

✱ வடபகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்க இலங்கை மின்சாரசபை எடுத்த முயற்சி பலிக்கவில்லை. மின் விநியோகத்துக்கு அனுமதி வழங்க கூட்டுப் படைத் தலைமையகம் மறுத்து விட்டது என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிப்பு

✱ இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் குறித்து தமிழக மக்கள் கவலைப்படக் கூடாதெனக் கூற மத்திய அரசுக்கு உரிமை கிடையாது என முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவிப்பு.

14.02.1991

✱ இலங்கைக்கு சீனா ஆயுதங்கள் விற்பது குறித்து சீனாவுக்கான இந்தியத் தூதுவர் சீன அரசு அதிகாரிகளிடம் ஆட்சேபனை தெரிவித்தபோதிலும் சீன அரசு அதனை நிராகரித்து விட்டதாகத் தெரிவிப்பு.

✱ ஈராக் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் பொது மக்கள் பாதுகாப்பாகத் தஞ்சமடைந்திருந்த பாதாள அறையொன்றின் வாசலால் உட்புகுந்த இரண்டு ஏவுகணைகள் வெடித்ததில் ஆயிரம் பேர்வரை உடல் கருகிப் பலியானதாக பி.பி.ஸி செய்தி நிறுவனம் தெரிவிப்பு.

15.02.1991

✱ வடக்கு, கிழக்கில் புனரமைப்பு வேலைகளுக்கான உதவி வழங்கும் நாடுகள் ஒதுக்கிய நிதியில் பெரும்பகுதி உபயோகப்படுத்தப்படாததால் தாம் ஒதுக்கிய நிதியைத் திரும்பப் பெறுவதென உதவி வழங்கும் நாடுகள் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

# கொழும்பு நீதிமன்றில் பொன்சேகாவை எதிர்வரும் 12ஆம் திகதி ஆஜராக உத்தரவு

கொழும்பு,மே7

இராணுவத்துக்கு எதிராகச் செயற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை எதிர்வரும் 12 ஆம் திகதி மன்றில் ஆஜராக்கவேண்டும் என்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு உத்தரவிட்டது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யவேண்டி இருப்பதால் அவரைக் குறித்த தினத்தில் ஆஜராக்கவேண்டும் என கொழும்பு பிரதான நீதிவான் சம்பா ஜானகி ராஜரட்ண உத்தரவு பிறப்பித்தார்.

'சண்டே லீடர்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றின் மூலமாக பொன்சேகா இராணுவத்துக்கு எதிராகச் செயற்பட்டார் எனத் தெரிவித்து குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இந்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் எடுக்கப்பட்டபோது அவருடைய வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று பொலிஸார் மன்றில் கோரினர். அக்கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

சரணடையவரும் புலி முக்கியஸ்தர்களைச் சுட்டுக் கொல்லவேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இராணுவ அதிகாரி ஒருவருக்கு உத்தரவிட்டிருந்தார் எனக்கூறி பொன்சேகா பிரத்தியேகப் பேட்டி வழங்கினாரென 'சண்டே லீடர்' பத்திரிகை கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் செய்தியொன்றைப் பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக ஆஸி. செல்லும் இலங்கையர் எண்ணிக்கை குறைவு

கொழும்பு,மே7

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் சட்டவிரோத படகுப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இந்த மக்கள் தொகை குறைவடைந்து வந்துள்ளது என ஆஸ்திரேலியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியா தமது நாட்டிற்குள் பிரவேசிக்கும் சட்ட விரோத குடியேறிகளின் விடயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிப்பதன் பின்னரே இந்த நிலையேற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 60 படகுகளில் 2 ஆயிரத்து 726 அகதிகளும் 141 படகோட்டிகளும் ஆஸ்திரேலிய கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதேநேரம் இந்த வருடத்திற்குள் 50 படகுகளில் 2 ஆயிரத்து 304 அகதிகளும் 37 படகோட்டிகளும் ஆஸ்திரேலிய கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

(சி)

# 'டெய்லி மிரர்' பத்திரிகையாளர் படையினரால் தாக்கப்பட்டார்

## ஜனாதிபதி கலந்துகொண்ட நிகழ்வில் சம்பவம்

கொழும்பு,மே7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில் செய்தி சேகரிக்கச் சென்ற 'டெய்லி மிரர்' பத்திரிகையாளர் சந்துன் ஜயசேகர இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உத்தியோகபூர்வ ஊடக அழைப்பிதழுடன் குறிப்பிட்ட நிகழ்வுக்குச் சென்ற ஜயசேகரவை இராணுவத்தினர் உள்ளே அனுமதிக்க மறுத்தனர் என்றும் -

ஜயசேகர தனது ஊடகவியலாளர் அடையாள அட்டையைக் காண்பித்த போதிலும் உள்ளே செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்றும் -

எனினும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் அவரை இனங்கண்டு, உள்ளே அழைத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நிகழ்வு முடிந்து ஜயசேகர அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்த சமயமே தாக்குதலுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்துன் ஜயசேகர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

# பிரபாகரனுக்கு வழங்கிய தண்டனையையே கே.பிக்குக் கொடுக்கக் கோருகிறது ஐ.தே.க.

## லக்ஷ்மன் செனிவிரட்ண நாடாளுமன்றில் வலியுறுத்து

கொழும்பு,மே6

புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்குச் சமனான தண்டனை புலிகளின் முக்கியஸ்தர் கே.பிக்கும் வழங்கப்படவேண்டும் என்று ஐ.தே.கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் செனிவிரட்ண நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்றைய அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் மற்றுமொரு தலைவரான கே.பி. கைதுசெய்யப்பட்டார். ஆனால், அவர் இருக்கிறாரா, இல்லையா என்று எமக்குத் தெரியாது. அவருக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும்.

கே.பி. கைதுசெய்யப்படும்போது அவரிடம் நூற்றுக்கணக்கான வங்கிக் கணக்குகள் இருந்தன. அந்தக் கணக்குகளுக்கு என்ன நடந்தது? கே.பிக்கு என்ன நடந்தது? அவர் உள்ளாரா அல்லது காணாமற் போய்விட்டாரா?

கே.பி. தண்டிக்கப்படவேண்டும் என்பதில் எம்மிடம் மாற்றுக் கருத்துகள் இல்லை. பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்குச் சமனான தண்டனை கே.பிக்கு வழங்கப்படவேண்டும்.

இருப்பினும், அவருக்கு என்ன நடந்தது என்று நாம் அறியவேண்டும். அதற்கான உரிமை எமக்குண்டு. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இதற்கு உடனடியாகப் பதிலளிக்கவேண்டும்.

இத்தேர்தலில் அரசுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி தற்காலிகமானது. அது நிரந்தரம் என நினைத்து அரசு தலைக்கனம் பிடித்து ஆடக்கூடாது. மக்களின் ஆணையைக்கொண்டு அரசு நல்லாட்சி ஒன்றை நடத்தவேண்டும் - என்றார்.

(அ-சி)

# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக அமுனுகம

கொழும்பு,மே7


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகராக கலாநிதி சரத் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதிச் செயலகம் அறிவித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பஷில் ராஜபக்ஷவின் வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி திருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், பல்கலைக்கழக பட்டதாரியாவார். [illegible]ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்த இவர் பின்னர், அரசியலில் இணைந்து பல முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் பெருந்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் சுவாமி திருவீதி உலா வருவதையும், இரவு உற்சவத்தில் முத்துச்சப்பரத்தில் சுவாமி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம்.(படங்கள் : தர்ஷிகா)




நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழாவில் விநாயகர் தேருக்கு எழுந்தருளுவதையும் பக்தர்களுக்கு அருள்பாலித்துத் தேரில் வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்

(படங்கள்: லக்ஸ்மன்)


## “மக்களின் சேவகனுக்கு மகத்தான வரவேற்பு”



மக்கள் சேவையை முன்னெடுக்க
யாழ்ப்பாணம் வரும் கௌரவ அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில்,
சிறுகைத்தொழில் அமைச்சர்)
அவர்களை அன்புடன் வரவேற்று
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: வசந்தபுரம் வாழ்மக்கள்,
(97847) யாழ்ப்பாணம்.


# ஆன்மீகச் சஞ்சிகைகள் வெளிவந்தன

யாழ்ப்பாணம்,மே 7

சைவ பரிபாலன சபையின் வெளியீடான 'இந்து சாதனம்' நூல் வெளிவந்துள்ளது.

வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயிலடி) ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தையும், அதன் வரலாற்றுச் சிறப்புக்களுடனும், சைவசமய வழிபாட்டு முறைகளையும், சைவசித்தாந்தக் கருத்துக்களும் மேலும் பல சமயம் சார் விடயங்களையும் தாங்கி 'இந்து சாதனம்' வெளிவந்துள்ளது.
(50-9)

* * *

யாழ்ப்பாணம்,மே7

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் வெளியீடான 'அருள் ஒளி' சமய சஞ்சிகை வெளிவந்துள்ளது.

சைவ சமயம் சார்ந்த கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் படங்களையும் தாங்கி 'அருள் ஒளி' வெளிவந்துள்ளது.
(50-9)

* * *

யாழ்ப்பாணம்,மே 7

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான 'ஞானச்சுடர்' சித்திரை மாத இதழ் வெளிவந்துள்ளது.

புதிய வானில் உதயமாகியிருக்கும் 'விகிர்தி' வருடத்தின் சிறப்புக் கட்டுரையும் மற்றும் பல்வேறு சமயம்சார் கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி இம்முறை 'ஞானச்சுடர்' வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(50-9)

## சவாரி ரசிகர்களை சலிக்க வைத்த மழை

நாவற்குழி,மே 7

அண்மைய நாள்களாக யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலும் பெய்துவரும் மழை மாட்டு வண்டிச் சவாரி ரசிகர்களுக்குச் சலிப்பைத் தந்துள்ளது.

பேர்போன சவாரித்திடல்களான நீர்வேலி, கந்தரோடை, வட்டுக்கோட்டை ஆகியவற்றில் சவாரிப் போட்டிகளை நடத்தப் பல கழகங்களும் முன் ஆயத்தம் செய்து வந்தன.

வழமையாகவே இக்காலப் பகுதியில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் நடத்தப்படுகிறது.

இயல்பு நிலை திரும்பிவிட்ட இக் காலப் பகுதியில் ரசிகர்கள் ஆவலுடன் சவாரியைக் கண்டுகளிக்கத் தயாராயிருந்த போது சவாரித்திடல்கள் நனைந்து ஈரலிப்பாக உள்ளதால் போட்டிகளை நடத்த முடியாதுள்ளது.

திடல்கள்காய்ந்து இறுகு மட்டும் பொறுக்க வேண்டியுள்ளதேயெனச் சவாரி ரசிகர்கள் அங்கலாய்ப்பதைக் காண முடிகிறது.(50-121)

## பகல் பராமரிப்பு நிலையம் மீண்டும் ஆரம்பம்

தென்மராட்சிகிழக்கு, மே 7

தென்னிந்தியத் திருச்சபையின்வரணி மிஷனால் நடத்தப்படும்பகல்பராமரிப்பு நிலையம் மீண்டும் அதே இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வைத் தொடர்ந்து பராமரிப்பு நிலையம் இதுவரை இயங்கவில்லை. தற்போது இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதை அடுத்து பராமரிப்பு நிலையம் இயங்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(50-201-120)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2118 திகதி 05-05-2010

ஆங்கில எழுத்திற்கும் E

வெற்றி எண்கள் 13 24 27 46 போனஸ் இல: 19

ஜக்பொட் பரிசு ரூ. 17,623,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 175083 | 20/- | 3,501,660/- |
| 2 இல | 12511 | 100/- | 1,251,100/- |
| 3 இல | 264 | 1,000/- | 264,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6961 | 40/- | 278,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 497 | 1,000/- | 497,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,623,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 8334 | 100/- | 833,400/- |
| 2 இல + போனஸ் இல | 382 | 500/- | 191,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 332 | 200/- | 66,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,427,500/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 204413 | | 9,027,500/- |

ஆலிந்தயே வாசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்
K.M. திலகரத்ன - மகியங்கனை.
M. சுனில் பத்மசிறி - மீரிகம.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 201864143-0-29 |
| மாத்தளை | 201853931-8-06 |
| காலி | 201856034-6-07 |
| கொழும்பு | 201867997-8-45 |
| யாழ்ப்பாணம் | 201856508-9-13 |
| புத்தளம் | 201865537-3-42 |
| கண்டி | 201855398-7-15 |
| நுவரெலியா | 201861010-8-18 |
| பதுளை | 201862905-7-22 |
| கம்பஹா | 201854423-8-36 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 18,101,125/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 மே 08 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை



# STUDY IN INDIA

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து
பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

Garden City College Affiliated to Bangalore University
SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Maths + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Biology + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : :A/L Passes in any TWO Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில்..........
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
Scholars Information Center (SIC)
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் தலைவனுக்கு மகத்தான வரவேற்பு



தரணி எங்கும் இடர்பட்டிருக்கும் மக்களின் துயர் துடைக்க மூன்றாவது முறையும் அமைச்சராகப் பொறுப்பேற்று குடாநாட்டிற்கு வருகைதரும் வெற்றி நாயகன் மக்களின் மனதில் குடி கொண்டு, மாவட்டத்தில் அதிகப்படியான விருப்பு வாக்கின் மூலம் மக்களின் எழுச்சியில் வெளிப்பட்ட பெருந்தலைவன். பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களே "வருக வருக" என அன்புடன் வரவேற்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அங்கத்துவச் சங்கங்களும்.

(சி/562304)


# எஸ்.பி., ஆறுமுகன் உட்பட நால்வர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்

## ஊடகத்துறை கெஹலியவுக்கு

கொழும்பு, மே 7

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கண்டி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல, எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோருமே நேற்று அமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். இதனடிப்படையில் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெலவும், உயர்கல்வி அமைச்சராக எஸ்.பி.திஸாநாயக்கவும், விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சராக பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். ஆறுமுகன் தொண்டமான் கால்நடை, சமூக அபிவிருத்தி, இளைஞர் வலுவூட்டல் மற்றும் கிராமி யத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். நேற்று முன்தினமே ஆறுமுகன் தொண்டமான் தனது அமைச்சுப் பொறுப்புகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை, மகிந்தானந்த அளுத்கமகே இளைஞர் வலுவூட்டல் பிரதி அமைச்சராகவும், பைசர் முஸ்தபா சுற்றாடல் வளத்துறை பிரதி அமைச்சராகவும், கலாநிதி சரத் அமுனுகம பிரதிநிதி அமைச்சராகவும் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர். அத்துடன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன மற்றும் ஜகத் பால சூரிய ஆகியோரும் பிரதி அமைச்சர்களாக ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ஒ-சி)

## பரீட்சை மண்டப பெயர் திருத்தம்

யாழ்ப்பாணம், மே7

அரச முகாமைத்துவ உதவியாளர் தெரிவுப்போட்டிப் பரீட்சைக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பரீட்சை மண்டபங்களில் ஒன்று மானிப்பாய் சென்றல் கல்லூரி எனத் தவறுதலாக அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்திகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு பரீட்சை இணைப்பு நிலைய அலுவலர் கேட்டுள்ளார் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (201)

## சபையில் தனித்து இயங்க ஸ்ரீரங்கா எம்.பி. முடிவு

கொழும்பு, மே7

நாடாளுமன்றத்தில் தனித்துச் செயற்படப் போகிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட எம்.பி. ஜே.ஸ்ரீரங்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்."ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்கு சார்பானவர்களுக்கு ஆதரவாகவும், ஏனையவர்களுக்கு எதிராகவும் வாக்களிக்கின்றனர். எம்மால் அப்படிச் செய்யமுடியாது" என்று அவர் சொன்னார்.

"சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நான் ஐக்கிய தேசியக் கட்சியில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டேன். இனிமேல் அக்கட்சிக்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை அக்கட்சியின் கொள்கை வேறு, எனது கொள்கை வேறு" - என்றும் அவர் கூறினார். (ஒ-சி)


## மக்களின் சேவையாளனுக்கு மகத்தான வரவேற்பு



மக்கள் சேவையைத் தொடர மீண்டும் யாழ்.மண்ணை முத்தமிடும் எமது மாண்புமிகு கௌரவ அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

(பாரம்பரியகைத்தொழில், சிறுகைத்தொழில் அமைச்சு)

அவர்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வேலணை.

(சி/567446)



The Chartered Institute of Marketing



**GET QUALIFIED IN MARKETING WHILE YOU ARE WORKING**

நீங்கள் Marketing துறையில் உள்ளவரா? அல்லது ஆர்வலரா?உங்கள் திறமையைய் தகுதியையும் உயர்த்திக்கொள்ள இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

The Only CIM Accredited Institute in Jaffna

SUCCESS THROUGH KNOWLEDGE

IIS CITY CAMPUS

The Chartered Institute of Marketing (UK) is committed to assist you throughout your marketting career

CIM

**Introductory Certificate in Marketing**

**New Batch Starts on 15.05.2010**

#200,Sivan Pannai Road,Jaffna. Tel:021 222 8060 Fax:021 222 6933

Email:iiscc@sltnet.lk Web: www.iis.edu.lk


## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 18
திகதி - 05.05.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **U** — அதிர்ஷ்ட இலக்கம் **10** — வெற்றி இலக்கம் **1 7 6 5 8**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 10 | 1 | 7 | 6 | 5 | 8 | ரூ. 22,964,585.00 | பரிசு - |
| 1 பரிசு | | 10 | 1 | 7 | 6 | 5 | 8 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 1 | 7 | 6 | 5 | 8 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 7 | 6 | 5 | 8 | ரூ. 10,000.00 | பரிசு 24 |
| 4 பரிசு | | | | | 6 | 5 | 8 | ரூ. 1,000.00 | பரிசு 255 |
| 5 பரிசு | | | | | | 5 | 8 | ரூ. 50.00 | பரிசு 2513 |
| 6 பரிசு | | | | | | | 8 | ரூ. 20.00 | பரிசு 24224 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | |
| 7 பரிசு | | | 1 | 7 | 6 | 5 | | ரூ. 1,000.00 | பரிசு 25 |
| 8 பரிசு | | | 1 | 7 | 6 | | | ரூ. 100.00 | பரிசு 255 |
| 9 பரிசு | | | 1 | 7 | | | | ரூ. 50.00 | பரிசு 2549 |
| 10 பரிசு | U | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10003 |
| 11 பரிசு | U | 10 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1141 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. **1,897,240.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.23,402,861.00


## 13ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சபாரத்தினம் கனகசபாபதி

தாய் மடியில்
13★10★1946

ஆண்டவன் மடியில்
01★05★1997

மண்ணில் நல்ல வண்ணம் வாழ
எண்ணில் சிறப்புகள் எய்திட எமதருகிருந்து
என்றும் உறுதுணையாய் வழியிட்ட தலைவா!
இன்றும் - இனியும் உம் நினைவுகள் மறவோமோ!

இணுவில் தெற்கு,
இணுவில். (சி/567444)

க.சௌபாக்கியலட்சுமி
(மனைவி).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும்
# புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலயம்
# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 07.05.2010



## ஆலய வரலாறு

திருமூலர் ஈழத்தை சிவபூமி என்பார். இராவணன் காலம் தொட்டே ஈழத்தில் அருவுருவமான சிவலிங்க வழிபாடு இருந்துள்ளது. வடபால் இலங்கையில் உள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் புங்குடுதீவில் பண்டைக்காலத்தில் இருந்தே ஐந்திணை நில அமைவுடைய பாணாவிடை என்னும் நிலப்பரப்பில் இத்தான்தோன்றியான லிங்கம் பாணாவிடை சிவன் என்ற பெயரில் வழிபாடு இயற்றப்பட்டு வந்துள்ளது. மாவிலங்கை இன தல விருட்சத்தின் கீழ் கருங்கல் சுயம்பு லிங்கமாகக் காட்சிதரும் நீள்சதுர வடிவிலான இச்சிவலிங்கம் தம் மேனி மீது கிரந்த எழுத்துக்களை கொண்டு விளங்குவதுடன், நில மட்டத்திலிருந்து 3 1/2 அடி வரையிலான உயரத்தைக் கொண்டு பக்தர்களுக்கு காட்சி தருகின்றது. இது முன்பு இருந்ததை விட தினமும் வளர்ச்சிபெற்று வருவதாக அறியப்படுகின்றது. இதன் நிலக்கீழ்பகுதி இரு கவர்களைக் கொண்டு வேர் போன்று நிலத்தை ஊடறுத்துச் செல்வதை 1948 ஆம் ஆண்டு முதல் குடமுழுக்குச் செய்த சிவதொண்டன் அவதானித்துள்ளார்.

பாணாவிடை அப்பனின் வழிபாடு 1910ஆம் ஆண்டு தென்னிந்திய இராமேஸ்வர திருத்தலத்தில் அடைக்கலம் கிடந்த யாழ்ப்பாணம் தட்டா தெருவைச் சேர்ந்த மருதப்பு என்ற அருளாளருக்கு ஒரு நாள் இரவு கனவிலே திருத்தலக் காட்சியும் அங்கு போய் என்னை ஆதரியடா என்ற செய்தியும் இராமலிங்கேஸ்வரர் வழங்கியிருந்தார். அதனை சிரமேற்கொண்டு தம் மூதாதையரின் பூர்வீக கிராமமான புங்குடுதீவில் அமைந்திருந்த தான்தோன்றி ஈஸ்வரரை மருதப்பர் கண்டார். கண்ணப்பர் போன்று கண்ட இடத்திலேயே நின்றார். சரியை வழிபாட்டின் ஊடாக இறைவனை எட்டநினைத்த மருதப்பு, திருநாவுக்கரசு சுவாமிகளின் பாதையை தம் வழிபாட்டு நெறியாகக் கொண்டார். இராமேஸ்வர் பெருமானின் உத்தரவுப்படி வந்த மருதப்பு இங்குள்ள லிங்கத்தின் பெயரை யும் பர்வவர்த்தினி சமேத இராமலிங்கேஸ்வரர் எனப் பெயரிட்டார். 1911இல் திருநாவுக்கரசர் அப்பூதி அடிகள் தொடர்புபோன்று பூர்வ புண்ணிய பலனால் இளமையிலேயே அப்பனுக்கு அடிமை பூண்டிருந்த அப்பூதி அடிகள் நெறிநின்ற சிவத்தொண்டர் மாணிக்கத்தையும் கண்டார். மாணிக்கத்தை நடுநிசி என்று முடியுடை மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும் சிவசின்னமும் அனிதா சிவப்பிராமண வடிவு டைய சிவன் அவரது சகோதரியின் படலையைத் தட்டி மாணிக்கத்திற்கு தரிசனம் கொடுத்ததுடன் அவரை நெடுந்தூரம் அழைத்துச் சென்று ஒரு வயல் நிலத்தைக் காட்டி இதில் குடியமர்ந்து என்னைக் கவனி என்று கூறி மறைந்தார்.

இந்நிகழ்வு 1980ஆம் ஆண்டு நடைபெற்றது. 1911ஆம் ஆண்டு முன்பே பக்குவப்படுத்தப்பட்டிருந்த மாணிக்கத்தை மருதப்பு அவர்கள் சந்தித்தார். நிகழ்வு நாவுக்கரசரை அப்பூதி அடிகள் சந்தித்தது போல் நிகழ்ந்தது. அந்த ஆண்டே (1911). மருதப்பு சுவாமிகள் ஆலயத்தில் நாவுக்கரசர் குருபூசையை ஆரம்பித்தார். திருவீழி மிழலை அன்னதானம் போன்று சிவத்தொண்டன் மாணிக்கமும் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப்பந்தல் அமைத்தார். என்னே அற்புதம்! சுவாமிகள் சில படி அரிசிகொண்டு சமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட அன்னதானமானது அன்று மதியம் தொடக்கம் மறுநாள் காலை வரை வந்த பக்தர்களுக்கு வழங்கக்கூடியதாக 'அள்ள அள்ளக் குறையாத அப்பர் சோறு போன்று கடைசி நிமிடம் வரை ஆவி பறந்து கொண்டிருந்த அற்புத நிகழ்வு இடம்பெற்றது. இந்த பக்திபூர்வ நிகழ்வு நூற்றாண்டுகளை எட்டியது.

வானவர் நாடுற வாழவேண்டின் பக்தகோடிகளே தேரில் வடம்பிடிக்க வாரீர் வாரீர்

வைத்திய கலாநிதி ஆ.பேரின்பநாதன்(ஆலய முன்னாள் தலைவர்)

## நல்லைக் குருமுதல்வரின் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் வளரும் புங்குடுதீவுப் பதியில் வீற்றிருக்கும் பாணாவிடை சிவன் இன்று தேரில் வலம் வந்து அருள்காட்சி அளிப்பார். இக் காட்சியைக் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவர்.

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் இந்த ஆலயத்தின் பழமையும் புதுமையும் கொண்ட கருமங்கள் சீராக பக்தர்களுக்கு கிடைக்க ஆசீர்வதிக்கிறேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சார்ய சுவாமிகள்
நல்லை ஆதீன குரு முதல்வர்

## சகல மக்களும் சீரும் சிறப்பும் பெற மகோற்சவ குருவின் வாழ்த்து



அவன் அருளாலே அவன் தாள் வணங்கி. புங்குடுதீவு பாணாவிடை சேஷ்திரத்திலே மந்திர சிம்மாசனத்தில் எழுத்தருளி அருள்பாலிக்கும் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கப் பெருமான் ஆலய விகிர்த்தி வருட மஹோற்சவத்தின் ரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. இந்த ரதோற்சவத்தைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். அவ்வளவு பக்தி பூர்வமாக நடைபெறுகின்ற தேர்த் திருவிழாவைக் காண்கின்ற அடி யார்களின் மாணவர்கள் மனன, தாடன பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெறவும், கன்னிகைகள் உசித காலத்தில் திருமாங்கல்ய பேற்றைப் பெறவும், சுமங்கலிப் பெண்கள் தீர்க்க சுமங்கலியாக வழவும், உத்தியோகத்தர்கள் தத்தமது துறைகளிலே சிறந்த விளங்கி மேலும் உயர் பதவி களைப் பெறவும், விவசாயிகள் தமது விளைச்சலைப் பெருக்கி சிறந்த விவசாயப் பலனைப் பெறவும், வர்த்தகப் பெருமக்கள் தத்தமது வியாபாரத்திலே பல கோடிகளை லாபகரமாக ஈட்டவும் கலைஞர் பெரு மக்களின் புகழ் வளர்ந்து அவர்கள் சீரும் சிறப்புமாக வாழவும் ஆலய அறங்காவலர் ஆலயத்தைச் சீரும் சிறப்புமாக வழிநடத்தவும் அரசியல் வாதிகள் சிறப் பாக நாட்டை ஆளவும் சகல மக்களும் சீரும் சிறப்பு மாக வாழவும் அண்ட கோடிகளை ஆட்டிப்படை கின்ற பாணாவிடை சிவபெருமானை வேண்டி ரதோற் சவம் சிறப்பாக அமைய ஆசி கூறி அமைகின்றேன்.

*லோகா சமஷ்தா சுகினோபவந்து*

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம்,
புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலயம்,
பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ வை.மு.ப.முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்,
சிவஸ்ரீ மு.ப.மு.பாலகுமாரசுவாமிக்குருக்கள்,
வட கோவையாதீனம்/நயினை ஆதீனம்.

## இராமர் அணைக்கு உதவிய அணில் போல் மகிழ்கிறேன்



இம்மலருக்கு ஆசியுரை வழங்கக் கிடைத்த வாய்ப்புக்கு இறைவனுக்கு நன்றி உடையேன். இராமர் அணைக்கு உதவிய அணில் போன்று முன்னாள் ஆலயத் தலைவர் வைத்தியகலாநிதி நிறைவுசெய்யத 16 ஆலய அபிவிருத்திப் பணிகளுக்கும் தேர்திருப்பணிகளுக்கும் யானும் என்னுடன் சுவிஸ் நாட்டில் வாழும் எமது கிராம மக்களும் இயன்ற பங்களிப்பினை வழங்கக் கிடைத்த வாய்புக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இதனை வாழ்வில் கிடைத்த பாக்கிய மாகவே கருதுகின்றேன். பாணாவிடை அப்பனின் ஆலய முன்றிலிலில் கல்விக் கூடச் சூழலில் குடியிருந்த எனது பேரனார் அமரர் செல்லப்பா அவர்களும் அவரது தாயாரும் அப்பனை அனுதினமும் ஆராதித்து அவனருட் கடாட்சம் பெற்றிருந்த என் முன்னவர் பாக்கியத்தாலும் எனது பெற்றோர் மணி அடித்தவுடனேயே ஆலயம் சென்று பூசை முடியும் வரை உதவவேண்டும் என்ற கண்டிப்பான புறச் சூழலும் கல்விக் கூட அமைவும் என்னை அதன் பணிக்கு ஆளாக்கியும் உலக சமூகத்தின் முன் மானிட நேயப் பணியாளனாக என்னை அறிமுகமாக உதவிய என்றால் மிகையாகாது. ஆலயப் பணிகள் மேலும் சிறப்படையும் ஆதரவின்றி வாழும் என் கிராம மக்களின் நல்வாழ்விற்காயும் என் எஞ்சிய வாழ்நாளில் உழைக்க இறையருள் அமைவதாக. நல்லாசிகள்

சு.நா.ஜெயக்குமார்(பாபு)
சுவிஸ் தலைமைக் கிளையின் தலைவர்

(சி/567451)


## மக்கள் சேவையாளனுக்கு மகத்தான வரவேற்பு...!



தமிழர் தரணியில் இடர்பட்ட மக்களின்
துயர் போக்க, விருப்புவாக்கில்
முன்னிலை பெற்று, மீனவத்
தொழிலாளர்களுக்கு தொடர்ந்தும்
பணியை மேற்கொள்ள
யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரும்
பாரம்பரிய கைத்தொழில்,
சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்
''மக்கள் சேவையாளன்''
டக்ளஸ் தேவானந்தா
அவர்களை வருக வருக என அன்புடன் வரவேற்பதில்
மீனவ சமூகம் பெரும் மகிழ்ச்சியடைகிறது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்
கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.
பருத்தித்துறை.

(97908)


## நியமனக் கடிதங்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,மே7

யாழ். மாவட்டங்களில் இருந்து புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட அனைவரும் பணியில் இணைந்து கொண்டுள்ளனர்.

யாழ். பிரதம தபாலகத்திற்கு இந்த நியமனக் கடிதங்கள் தபாலில் வந்து சேர்ந்ததும், இவற்றைப் பெறுவதற்குப் பலர் காலை முதல் காத்துநின்றனர். பின்னர் இக் கடிதங்கள் உடனடியாகவே அங்கு வைத்து உரியவர்களிடம் கையளிக்கப்பட்டதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)


## மக்கள் சேவைக்கு மகத்தான வரவேற்பு



மக்கள் சேவகனே.!
மகத்தான எம் தலைவா,
மக்கள் சேவைக்கென
மாண்புறு அமைச்சு பதவி ஏற்று
நின் மலர் பாதங்களை
யாழ்.மண்ணில் பதிக்க வரும்
டக்ளஸ் தேவானந்தா
அவர்களே உனை வருக
வருக என வரவேற்கின்றோம்.

வலிகாமம் கடற்றொழிலாளர் கூட்டுறவு
சங்கங்களின் சமாசம், திக்கம், அல்வாய்.

(97905)

## "மக்கள் சேவையாளனுக்கு மகத்தான வரவேற்பு"



பாரம்பரிய மற்றும்
சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்
நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர்
உயர்திரு முருகேசு சந்திரகுமார்
அவர்களையும்
நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு
சில்வேஸ்திரி அலன்டின்யூட்
அவர்களையும் பாராட்டி வரவேற்கின்றோம்.
மேலும் இவர்களின் மக்கள் நலன்சார்ந்த பணிகள் தொடரவும் எல்லாம் வல்ல இறைவன் ஆசிபுரிய வேண்டுகின்றோம். நாளை (08.05.2010) சனிக்கிழமை வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணியும், அங்கத்துவ சங்கங்களும்.

## எங்களின் தோழரே வருக! வருக!!



அல்லும் பகலும் நின்பிணி பாராது
எம் மக்கள் துயர் துடைக்கும்
எங்களின் தோழரே வருக! வருக!!
கடந்த பாராளுமன்றத்
தேர்தலில்
யாழ்.மாவட்டத்தில்
அதிகூடிய மக்கள்
மனங்களை வென்று
நாடாளுமன்றம் சென்று
பாரம்பரிய கைத்தொழில்,
சிறுகைத்தொழில் அபிவிருத்தி
அமைச்சராக இன்று
யாழ்.வரும் எங்கள்
மாண்புமிகு தோழர்
''சேவையின் சிகரம்''
டக்ளஸ் தேவானந்தா
அவர்களை வருக வருக
என வரவேற்பதோடு
பல்லாண்டு காலம் நோய்
நொடி இன்றி மக்கள்
சேவையைத் தொடர்ந்து ஆற்ற மனமார வாழ்த்துகிறோம்

சிவசக்தி மோட்டோர்ஸ்
பிரதான வீதி, பருத்தித்துறை

(97903)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அறுபது ஆண்டு காலப் பிரச்சினைகளுக்கு நியாயமான, நிதானமான தீர்வு தேவை

## நாடாளுமன்றில் சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 7

கடந்த 60 ஆண்டுகளாக நிலவிவருகின்ற பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான - நிதானமான - நடைமுறைப்படுத்தக் கூடிய - ஒரு நீதியான தீர்வைக்காண்பதற்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிவைப்பது எனது கடமை என நான் கருதுகிறேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதிய சபாநாயகரை வரவேற்றுக் கடந்த 22ஆம் திகதி உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் தெரிவித்தவை வருமாறு :-

இந்த நாடாளுமன்றத்தின் சபாநாயகராக நீங்கள் இன்று ஏகமனதாகத் தெரிவு செய்யபப்பட்டிருக்கின்றீர்கள். என் சார்பிலும் எனது கட்சியாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் உங்களுக்கு எமது பாராட்டுதல்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வது எனது கடமையென நான் கருதுகின்றேன். இந்தத் தெரிவு நடைபெற்றபொழுது, சென்ற நாடாளுமன்றம் முதன்முறை ஆரம்பமான வேளையில் சபாநாயகர் தெரிவு எந்தவிதமாக நடை பெற்றதென்பது எனது ஞாபகத்துக்கு வந்தது.

அப்பொழுது ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் போட்டி நடைபெற்றது. அந்த வாக்கெடுப்பு ஏறத்தாழ முழுநாளும் இடம்பெற்றது. இறுதியில் லொகுபண்டார எதிர்க்கட்சியினுடைய வேட்பாளர் - ஒரு வாக்கால் வெற்றி பெற்றார். அவருடைய வெற்றிக்கு எமது கட்சியும் 22 வாக்குகளைக் கொடுத்து ஒரு பாரிய பங்களிப்பைச் செய்திருந்தது. ஆனால், இம்முறை நீங்கள் ஏகமன தாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றீர்கள். அது இந்தச் சபை உங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை எடுத்துக்காட்டும் ஒரு விடயமாக அமையுமென நான் கருதுகின்றேன்.

எம்மைப்பொறுத் தவரையில் உங்களுடைய தெரிவை நாங்கள் மனப்பூர்வமாக வர வேற்கின்றோம். நாடாளுமன்ற நடவடிக்கைகளில் எமது முழு மையான ஒத்துழைப்பு உங்களுக்குத் தரப்படும் என்ற வாக்குறுதியையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிவைப்பது பொருத்தமாக இருக்குமென நான் நினைக்கின்றேன்.

பிரதமர் பேசுகின்றபொழுது, ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட்டார். அதாவது, முப்பது வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் தற்போது இந்த நாட்டில் முடிவுக்கு வந்திருப்பதாகவும், அந்தச் சூழ்நிலையில்தான் இந்த நாடாளுமன்றம் இன்று கூடுவதாகவும் கூறினார். அது மிகவும் முக்கியமானதும் பொருத்தமானதுமான ஒரு கருத்தென நான் கருதுகின்றேன். யுத்தம் முடிவுக்கு வந்திருப்பது உண்மை. பொதுவாக இந்த நாட்டு மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தத்தின் காரணமாக இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். அதை எவரும் மறுக்க முடியாது. அந்த வகையில், இந்த யுத்தம் முடிவுக்கு வந்திருப்பதை நாங்கள் எல்லோரும் வரவேற்கின்ற அதே சமயத்தில், யுத்தம் முடிவுக்கு வந்த காரணத்தின் நிமித்தம் நாட்டில் சமாதானம் ஏற்பட்டு விட்டது; இன்று இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனை வரும் நீதியும் நியாயமும் பெறக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என நாங்கள் கருத முடியாது - நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. இந்த நாட்டில் வாழ்கின்ற சகல மக்களுக்கும் நீதியும் - நியாயமும் - சமத்துவமும் கிடைப்பதற்கு இந்த நாடாளுமன்றம் பாரிய பணியை ஆற்றவேண்டியிருக்கிறது என்று நான் கருதுகின்றேன். துரதிருஷ்டவசமாக இதற்கு முன்னைய காலங்களில் இந்த நாட்டில் இயங்கிய நாடாளுமன்றங்கள் அந்தப் பணியை முறை யாக ஆற்றக்கூடிய நிலைமை இருக்கவில்லை. ஆனால், இந்த நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலமாக, இந்த நாடு சுதந்திரமடைந்த காலந் தொடக்கம் கடந்த முப்பது ஆண்டுகளாக அல்ல, கடந்த அறுபது ஆண்டுகளாக நிலவிவருகின்ற பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிதானமான, நடைமுறைப் படுத்தக் கூடிய, ஒரு நீதியான தீர்வைக் காண்பதற்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைப்பது எனது கடமை என நான் கருதுகின்றேன்.

இந்நாடாளுமன்றம் அந்தப் பணியை ஆற்றுகின்றபோது உங்களுடைய பரிபூரணமான ஒத்துழைப்பை நல்குவீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதுமாத்திரமல்ல, இந்நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவியை ஏற்றிருக்கின்ற நீங்கள், அரசியல் சாசனம் மற்றும் நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் உட்பட இங்குள்ள பல மரபுகள், நிலைப்பாடுகள் -(Conventions) என்பவற்றையும் பின்பற்ற வேண்டியிருக்கின்றது. இந்த நாடாளுமன்றத்தின் கௌரவம் முழுமையாக உங்களிலே தங்கியிருக்கின்றது. உங்களுடைய கௌரவம் இந்த நாடாளுமன்றத்தின் கௌரவத்திலே பிரதிபலிக்கும். இரண்டையும் பிரிக்க முடியாது. அதனால் எதிர்காலத்தில் உங்களுடைய தலைமையின் கீழ் இந்த நாடாளுமன்றம் மிகவும் கௌரவமாகச் செயற்படும் என்ற நம்பிக்கையுடன், அதற்கு நாங்கள் எங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பை நல்குவோம் என்று கூறி, மீண்டும் உங்களுக்கு எனது பாராட்டைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன் - என்றுள்ளது. (அ-சி)

# யாழ்.சிறையில் இருந்த அரசியல் கைதிகள் எவரும் தாக்கப்படவில்லை என்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 7

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள எண்மர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி த.கனகராஜ் நேற்று ஆஸ்பத்திரிக்குச் சென்று அவர்களின் வாக்குமூலங்களைத் தனித்தனியே பதிவு செய்தார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதே வேளை-

**அரசியல் கைதிகள் எவரும் தாக்கப்படவில்லை**

யாழ்.சிறைச்சாலையில் தடுத்த வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் எவரும் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை என்றும் களவு, கற்பழிப்பு, சிறுவர் கடத்தப்பட்டமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் சிறைச்சாலையில் இருந்து தப்பமுயன்றபோதே சிறைச்சாலை அதிகாரிகளால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது என்றும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-1)

# குடாநாட்டில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற உயர்மட்ட மாநாட்டில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேல்நீதிமன்ற நீதிபதி மாநாட்டில் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கடந்த 30 வருடங்களின் பின்னர் குடாநாட்டு மண்ணில் சட்டமும் ஒழுங்கும் வெகுவாகச் சீர்குலைந்துள்ளன; ஜனநாயக விழுமியங்கள் செயலிழந்துள்ளன. எவரும் அச்சமோ பயமோ இன்றி தமது நிலையை எடுத்துக்கூறும் நிலைமை இன்று இந்த மன்றில் உருவாகியுள்ளது.

ஏனெனில், கடந்த 30 வருடங்களில் 13 வருடம் சேவையாற்றியதன் பேரில் இன்றுதான் சட்டதரணிகளின் ஆதங்கத்தையும் நீதிவான்களின் ஆதங்கத்தையும் கேட்க முடிகிறது. சட்டத்தின் பிரகாரம், நீதிமன்றம் ஏன் விரைவாகச் செயற்படவில்லை என்று சுதந்திரமாக வலியுறுத்தும் சூழலைக் காண்கிறேன்.

இச்சூழலை உருவாக்கியவர்களின் ஆதங்கத்தை மறுக்கமுடியாது. எனவே எம்முன் உள்ள விடயம், நீதிவானுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுப்பது மட்டுமல்ல, ஜனநாயகக் காற்று வீசிய காலத்தில் இடம்பெற்ற கடத்தல், காணாமற்போதல் உட்பட்ட பல்வேறு சட்டமுரணான செயற்பாடுகளுக்குப் பதில் கிடைக்க வேண்டும் என்பதே பலரின் ஆதங்கமாக இருக்கிறது.

**சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு**

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கே உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்தவகையான நிகழ்வுகளை வேரோடு பிடுங்க கோத்தபாய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார். சட்டம், ஒழுங்குக்குப் பொறுப்பான பொலிஸாரை உள்வாங்கியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மிகவிரைவில் சட்டவிரோத நடவடிக்கைகள் யாவும் களையப்படும் என்று என்னிடம் உறுதி கூறியுள்ளார். அதைச் சகலதரப்பினருக்கும் தெரியப்படுத்தும்படி என்னிடம் கேட்டுள்ளார்.

அதேவேளை - குடாநாட்டில் பணிபுரியும் பொலிஸாருக்கும் அறிவுரை ஒன்றைக் கூறவிரும்புகிறேன்.

சட்டத்தின் தேவைக்கு ஏற்ப பணிபுரிய வேண்டும். மேலதிகாரிகள் விடுக்கும் உத்தரவுக்குப் பணிந்து, கவனத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும். பாதுகாப்பை உறுதிசெய்ய விடுக்கும் பணிப்புரைகளை உதாசீனம் செய்யக் கூடாது. இன்று சட்டத்தரணிகள் பொலிஸாரின் செயற்பாட்டை மிகவும் விமர்சித்தார்கள்.

**உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்**

எதிர்காலத்தில் மேலதிகாரிகள் விடுக்கும் பணிப்புரைகளை மதித்துச் செயற்படாத பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை உருவாகும்.

சட்டத்தை, ஒழுங்கைப் பேண நீதிமன்றங்களும் சட்டத்தரணிகளும் சட்டத்தின் பிரகாரம், நீதிவானுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பான விரைவான விசாரணைக்குப் பூரண ஒத்துழைப்புத் தருவார்கள். எதிர்காலத்தில் இத்தகைய கூட்டங்களைக் கூட்டவேண்டிய தேவை எழாது எனக்கருதுகிறேன்.

**சட்டத்தரணிகளுக்கும் கணிசமான பங்கு உண்டு**

சட்டத்தரணிகளில் ஒருசாரார் இன்று சமுகமளிக்கவில்லை. தனிப்பட்ட காரணங்களால் சமுகமளிக்கவில்லை என அறிவித்துள்ளனர்.

சட்டத்தரணிகளுக்கு ஒரு விடயத்தைக் கூறவிரும்புகிறேன். சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும் விடயத்தில் சட்டத்தரணி களின் பங்கும் கணிசமான அளவு உள்ளது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

குடாநாட்டில் ஜனநாயகக் காற்றைப் பூரணமாகச் சுவாசிக்க ஏதுவாக, சட்டம், ஒழுங்கைப் பேண பாதுகாப்பு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகளுக்குச் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பை கைவிட்டுப் பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நீதிமன்றத்தின் ஓர் அங்கமான சட்டத்தரணிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு என்பதை அவர்கள் உணரவேண்டும் - என்றார் மேல்நீதி மன்ற நீதிபதி. (அ-1-9)

# குடாநாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில் தேர்தல் நடத்த ஏற்பாடு

## கூட்டுறவு அமைச்சர் சரவணபவனிடம் தெரிவிப்பு

கொழும்பு,மே 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படும் என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அமைச்சரைச் சந்தித்து யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி குறித்துப் பேசினார்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளும் மக்களுக்குரிய சேவைகளும் திருப்பதிகரமாக இல்லை என்று பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்தனர் என்று அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

பல கிளைக் குழுக்களிலும் அரசியல் பாரபட்ச நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக எடுத்துக்கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே குடாநாட்டில் நிர்வாகச் சீரின்மை நிலவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிதாக தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் ஜோன்ஸ்ரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு உறுதியளித்தார். (அ)

# பொலிஸாரின் ஒழுங்கீனத்தாலேயே யாழில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு!

## குடாநாட்டுச் சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 07

பொலிஸார் ஒழுங்காகச் செயற்படாமையாலேயே யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு ஆகியன பெரிதும் சீர்குலைந்து விட்டன என்று யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் சட்டத்தரணிகள் காட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். யாழ்.குடாநாட்டின் தற்போதைய சட்டம், ஒழுங்கு நிலைமை கள் குறித்து ஆராயும் உயர்மட்ட மாநாடு ஒன்று யாழ். மேல்நீதிமன்ற கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இம்மாநாட்டுக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தலைமை வகித்தார். ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் வசந்தசேனன், பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் திருமதி எம்.மகா தேவா, சட்டத்தரணிகள், வடமாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ். குடா நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், படை உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் யாழ்.குடாநாட்டின் சட்ட ஒழுங்கு நிலைமைகளைச் சீர்செய்கின்றமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அப்போதுதான் யாழ்ப்பாணத்தில் சட்டம், ஒழுங்கு மிகவும் சீர்குலைந்து காணப்படுகின்றமைக்குப் பொலிஸார் ஒழுங்காகச் செயற்படாமையே காரணம் என்று மாநாட்டில் கலந்துகொண்ட சட்டத் தரணிகள் வலியுறுத்திக் கூறினார்கள்.

சாவகச்சேரி நீதிவானுக்கு படுகொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு ஒருவாரம் கடந்துவிட்ட போதிலும் கூட பொலிஸார் இன்னமும் அச்சுறுத்தல் காரர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கைகளை எடுக்கவே இல்லை என்றும் சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டினர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை கள் நடைபெற்று வருகின்றன. இது வரையும் எவரையும் கைது செய்ய வில்லை. இச்சம்பவம் தொடர்பாக நடத் தப்பட்ட விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கை நாளை (வெள்ளி) யாழ்.நீதிவானிடம் சமர்ப்பிப்போம். அவரின் உத்தர வுக்கு ஏற்ப நடவடிக்கையை எடுப்போம் என்று பொலிஸார் தரப்பில் சமுகமளித்த அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-1)

# ஊடகவியலாளர் ருவானுக்குப் பிணை

அரசைக் கவிழ்ப்பதற்கு சரத் பொன்சேகாவுடன் சேர்ந்து சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதப் புலனாய்வுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் ருவான் வீரக்கோனுக்கு உயர்நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது. இதனையடுத்து கொழும்பு பிரதான நீதிமன்றம் அவரைப் பிணையில் விடுவித்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகரட்ண தலைமையில் சக நீதியரசர்களான கே.ஸ்ரீபவன், எஸ்.ஐ.இமாம் ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழு குறித்த ஊடகவியலாளரின் அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த பின்னரே இவ்வனுமதியை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தலைவனுக்கு மகத்தான வரவேற்பு



பாரம்பரிய கைத்தொழில்
மற்றும்
சிறுதொழில் முயற்சி
அபிவிருத்தி அமைச்சராக
பதவி ஏற்றிருக்கும்
கௌரவ அமைச்சர்

**டக்ளஸ் தேவானந்தா**
அவர்களை

## வருக வருக என வரவேற்கின்றோம்

அழிந்த எமது தேசத்தையும், வாழ்வையும் மீண்டும் தொழில் துறையால், கட்டியெழுப்பி எமது மக்களின் கௌரவமான வாழ்வுக்கு தன்னை அர்ப்பணித்துச் சேவை செய்யும் மக்கள் சேவையின் திரு உருவமான தலைவனை வருக வருகவென வரவேற்கின்றோம்.

மே 7ம் திகதி மாலை 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து ஆரம்பமாகும் வரவேற்பு வைபவத்தில் அன்பர்கள் ஆதரவாளர்களையும் இணைந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்
யாழ்ப்பாணம் மாநகரசபை






# T 20
## உலகக் கிண்ணப் பரிசுப் போட்டி

உலகக் கிண்ணத்தை முன்னிட்டு 'உதயன்' தனது விளம்பரதாரரின் அனுசரணையுடன் தனது வாசகர்களுக்கிடையே நடத்தும் மாபெரும் பரிசுப்போட்டி.



**விதிகள்:**
1. நாளாந்தம் ஒரு வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவர்.
2. ஒவ்வொரு வெற்றியாளருக்கும் உரிய பரிசுப் பொதி 1500/- இற்கு மேற்பட்டதாக இருக்கும்.
3. ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
4. மேலும் இவற்றுடன் அனைத்துப் போட்டியாளர்களில் இருந்து மூன்று மேலதிக வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். இவர்களுக்கான பரிசு விபரம்:

★முதலாம் பரிசு 5000/- ★இரண்டாம் பரிசு 3000/-
★மூன்றாம் பரிசு 2000/-

★'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனில் மட்டுமே விடைகள் அனுப்பப்படவேண்டும்.
★ஒரு போட்டி தொடர்பாக ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.
★அனைத்துப் போட்டிகளுக்குமான முடிவு திகதி 20.05.2010
★வெற்றிபெற்றவர்களின் விவரம்: தபால் மூலமும் பத்திரிகை வாயிலாகவும் அறிவிக்கப்படும்.
★இப்போட்டி தொடர்பாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.



## மகத்தான தலைவனுக்கு மகத்தான வரவேற்பு



யாழ்.குடாநாட்டு மக்களின் மனங்களை வென்று அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்ற, எமது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர்

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை மன மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது சேவை யாழ். மக்களுக்கு மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்



## மகத்தான தலைவனுக்கு மகத்தான வரவேற்பு



யாழ்.குடாநாட்டு மக்களின் மனங்களை வென்று அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்ற, எமது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர்

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை மன மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது சேவை யாழ். மக்களுக்கு மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
வலி.கிழக்கு வட பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி



## மங்கள இசைப்பிரியர்களின் ஓர் நற்செய்தி

உங்கள் திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், புதுமனை புகுவிழாக்கள், கோயில் உற்சவ விழாக்கள் மற்றும் மங்களகரமான விழாக்களை சிறப்பிக்க வட்டூர் தவில் வித்துவான், தவில் அரசு திரு.N.ராமநாதன் அவர்களின் புதல்வர்களான

**N.R.தர்ஷன், N.R. தர்ஷணன், N.R.தர்ஷிலன், N.R.தர்ஷராகவன்**

ஆகியோரின் தவில், நாதஸ்வர கச்சேரிக் குழுவை அழைத்து மகிழுங்கள். அத்துடன் 10 வயது சிறுவன் தவில் வித்துவான் லயஞான இளவரசன் **சிவசாயிதியானின்** சிறப்பு தனித் தவில் கச்சேரியையும் கேட்டு மகிழுங்கள்.

தவில் வித்துவான் N.ராமநாதன் (97850)
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.


## கல்விமாணி விரிவுரைகள்

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பட்ட நெறி முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என தேசியக் கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (1)

## மரதன் ஓட்டம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியின் முன்னோடி நிகழ்வாக இடம்பெறும் வீதியோட்டம் இன்று காலை இடம்பெற வுள்ளது. இந்நிகழ்வில் 350 இற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் பங்கேற்பார்கள். (1)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (6-23)

## புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் அமுலாக்கப்படும் ஆறு பரீட்சைகள் அடங்கிய புலமைப்பரிசில் மாதிரி பரீட்சைத் தொடர் 2010 இன் முதலாவது பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் நடைபெறும்.

அதிபர்கள் பரீட்சை வினாத்தாள்களை கோட்டக் கல்வி அலுவலகத்தில் இன்று பி.ப. 12.30 மணிக்கு பெற்றுக்கொள்வதுடன் பரீட்சையினை உரிய முறையில் நடத்திப் புள்ளிப் பகுப்பாய்வுப் படிவங்களை அடுத்த மூன்று தினங்களினுள் கல்வி வலய ஆரம்பப் பிரிவில் ஒப்படைத்தல்வேண்டுமென்று பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)


SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
O/L REPEAT
(மீண்டும்

PERSONAL CLASS
364, Stanly Rd. Jaffna (Near DMI)
GAQ/ BA-I/ BA Final
யாழ். - பேரானை
★ பொருளியல்
By: N.தயாபரன்
★ அரசியல்
By: M.புவனதாஸ்
Sat/Sun 9am - 4pm



## மக்களின் சேவையாளனுக்கு மகத்தான வரவேற்பு...!



வடபுல மண்ணில் இடர்பட்டிருக்கும் மக்களின் துயர் துடைக்க மூன்றாவது முறையாக அமைச்சராக பொறுப்பேற்று குடாநாட்டிற்கு வருகை தரும் "கருணையின் சிகரம், கொடைவள்ளல் மற்றும் மக்கள் நாயகன்" பாரம்பரிய கைத்தொழில், சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

கலைவாணி சனசமூக நிலையம், வத்தனை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது தேவஸ்தானத்திற்கு நிதியுதவி அளித்த மாண்புமிகு அமைச்சர்

**டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இன்று குடாநாட்டிற்கு வருகைதரும் அமைச்சர் மக்கள் சேவையைத் தொடர எம் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆலய அறங்காவலர் சபையினர்,
திருப்பணி சபையினர், இந்து இளைஞர் சபையினர்,
அன்னதான சபையினர்,
(97904) ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் நாச்சிமார்கோயிலடி,
நாவலர் வடக்கு, வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

# கிரிக்கெட் கோலாகலம்

30.04.2010 – 16.05.2010

## பீற்றர்சனின் அதிரடியால் பாகிஸ்தானை வென்று முதல் வெற்றியை பெற்றது இங்கிலாந்து!

பார்படோஸ், மே 7

பீற்றர்சனின் அதிரடி ஆட்டத்தினால் சுப்பர் - 8 சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணியிடம் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் வீழ்ந்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியின் சுப்பர் - 8 சுற்றின் முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரராக கம்ரன் அக்மலும் அவருக்குத் துணையாக சல்மான்பட்டும் களமிறங்கினர். அக்மல் 18 பந்துகளில் 2 பௌண்டறிகள்,ஒரு சிக்ஸருடன் 15 ஓட்டங்களையும் பட் 26 பந்துகளில் 3 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன் 34 ஓட்டங்களையும் பெற்று ஆட்டம் இழந்தனர்.

முஹமட் ஹபீஸ் 14பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்று யாடியின் பந்தில் பிரோட்டிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார். உமர் அக்மல் 25 பந்துகளில் 2 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களைப் பெற்று சைட்பொத்தமின் பந்தில் பிரஸ்னனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் சயீட் அப்ரிடி கிஸ்வெற்றரினால் 'ரன் அவுட்' செய்யப்பட்டு ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் வெளியேற்றப்பட்டார்.

அடுத்துவந்த மிஸ்பா - உல்ஹக் 13 அப்துல் ரஸாக் 10, ஆலம் 1, ஆமெர் 3 என ஆட்டமிழக்க, அஜ்மல், ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களுடனும் முஹமட் ஆசிப் ஓட்டம் எதனையும் பெறாமல் களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து சார்பாகப் பந்து வீசிய சைட்பொத்தம், பிரோட், யார்டி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், பிரஸ்னன், ஸ்வான் ஆகியோரி தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

148 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து அணி. ஆரம்ப வீரர்களாக லும்ப்-கிஸ்வெற்றர் ஜோடி களமிறங்கியது. லும்ப் 13 பந்துகளில் 3 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 25 ஓட்டங்களைப் பெற்றபோது அக்மலினால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

கிஸ்வெற்றருடன் ஜோடி சேர்ந்தார் பீற்றர்சன். பீற்றர்சன் அதிரடியாக ஆட கிஸ்வெற்றர் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பீற்றர்சனுடன் ஜோடி சேர்ந்த கொலிங்வூட்டை (16) சயிட் அப்ரிடி பிரித்து பெவிலியன் அனுப்பினார். மோர்கன் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அதிரடியாக ஆடிய பீற்றர்சன் 52 பந்துகளில் 8 பௌண்டறிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 73 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

இங்கிலாந்து அணி 19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

பாகிஸ்தானின் அஜ்மல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இங்கிலாந்தின் கெவின் பீற்றர்சன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(6)

**போட்டி இல.06**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

- அனுப்புபவர் பெயர் :........................................
- முகவரி :........................................
- தொ.பே.இல. :........................................

**கேள்வி:**

1. ருவென்ரி - 20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட சிறியரகத் துடுப்பு மட்டையின் பெயர் என்ன?

   ........................................

2. ருவென்ரி - 20 போட்டிகளுக்கான டக்வேர்த் - லூயிஸ் முறையில் மாற்றம் தேவை எனக் கூறியுள்ள கிரிக்கெட் வீரர் யார்?

   ........................................

3. உலகப் பிரபலங்கள் அதிகம் பயன்படுத்தும் 'ட்விட்டர்' இணையத்தளத்தில் 05.05.2010 இல் இணைந்த கிரிக்கெட் வீரர் யார்?

   ........................................

போட்டி இலக்கம் 06 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு Harini Internet cafe நிறுவனத்தினால் ரூபா 1700/= பெறுமதியான பரிசு வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

தரமான சைவ, அசைவ உணவு வகைகளிற்கு

**சினேகா றெஸ்ரோரன்ட்**




இல.117, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தட்ஷா அழகுக்கலையகமும் பயிற்சி நிலையமும்**

மணப்பெண் அலங்காரம்
மணப் பெண்களுக்கான பூச்செண்டுகள்
அனைத்து வகையான நவீன முறையிலான முக ஒப்பனைகள்
மகளிருக்கான ஹெயர்கட்ஸ் & ஒயில் மசாஜ்
மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nailar)
றீ பொண்டிங் (Re Bonding) & கலரிங் (Colouring)
ஸ்ரக்ஷர் கேக் ( Structure cakes) ,
றிச் கேக் (Rich Cake) பிறந்தநாள் கேக்
சிற்றுண்டி வகைகள் அனைத்தும் ஓடருக்கு செய்து தரப்படும்.

லேசர் கதிர்கள் மூலம் விசேட பேஷியல்கள்

★ கேக் அழகுக்கலை வகுப்புகள் நடைபெறும்

இல.84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9713
0774030909,0773383643

84, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் தட்ஷா அழகு நிலைய பெயர்ப்பலகையில் காணப்படும் பெண்களின் எண்ணிக்கை எத்தனை? 7 பெண்கள்
1500 ரூபா பெறுமதியான பரிசு வழங்கப்படும்.

## யுத்தக் குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எந்தத் தடை வந்தாலும் எமது கட்சியின் கொள்கையைப் பாதுகாக்க மிகவும் தைரியத்துடன் பாடுபடுவோம். எந்த மிரட்டல்களுக்கும் நாம் அஞ்சமாட்டோம்.

எமது கட்சி குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டுள்ள போதிலும் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட கட்சியை விடவும் அதிக பொறுப்புக்களை நாம் நிறை வேற்றுகின்றோம்.

புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளவிடாமல் என்னைத் தடுத்தமையானது ஒரு சட்டவிரோத செயற்பாடாகும். அன்றைய தினம் கூட்டப்பட்ட இராணுவ நீதிமன்றில் ஆஜராக நான் மறுத்து உண்ணாவிரதம் இருந்தேன். இறுதியில் எனது சட்டத்தரணிகளின் ஆலோசனைப் படி மாலையில் நீதிமன்றில் ஆஜரானேன்.

**எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது**

நாடாளுமன்றம் கூடும் நாள்களில் இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டக்கூடாது என்ற வேண்டுகோளை நான் அங்கு முன் வைத்தேன். அவ்வாறு கூட்டுவதில்லை என்று எனக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்துக்கு வரும்போதும், அங்கிருந்து போகும்போதும் அவரைக் கைது செய்ய முடியாது. அவ்வாறு செய்வது சிறப்புரிமை மீறலாகும். என்னை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள விடாமல் தடுத்தமை மூலம் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை நான் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை முன்வைப்பேன் - என்றார்.

(அ-சி)

## நாடு கடந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றன என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் எதுவித உண்மையுமில்லை. எமக்கு முழுமையான ய வழங்கப்போவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளிண்ரன் தெரிவித்துள்ளார்.

அவசரகால ஒழுங்கு விதிகள் சில நீக்கப்பட்டிருப்பதால் மேற்குலக நாடுகள் பல எமக்குத் தொடர்ச்சியாக வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணம் உள்ளன.

பூட்டானில் இடம்பெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற எமது ஜனாதிபதி அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும், தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவப்போவதாக இந்தியப் பிரதமர் எமது ஜனாதிபதியிடம் கூறினார்.

அதேபோல், ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் எமக்கு உதவ முன்வந்துள்ளன. அடுத்த வாரம் எமது ஜனாதிபதி ஈரான் செல்கிறார். அங்கு பல நாடுகளின் தலைவர்களை ஜனாதிபதி சந்தித்துப் பேசுவார்.

அண்மையில் எமது ஜனாதிபதி ரஷ்யா சென்று அங்கு பல முக்கிய சந்திப்புகளை நிகழ்த்தினார். இதன் பயனாக அங்குள்ள பல நிறுவனங்கள் எமது நாட்டுப் பொருளாதாரத்துக்கு உதவ முன்வந்துள்ளன.

இவ்வாறு பல நாடுகள் பல வழிகளில் எமக்கு உதவி வருகின்றன. வெளிநாடுகளில் உள்ள புலிகள் அங்கு நாடு கடந்த அரசொன்றை அமைப்பதற்கு முயற்சி செய்து வருகின்றனர். அந்த முயற்சியை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் வெளிநாடுகளில் உள்ள எமது நாட்டுத் தூதரகங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம் - என்றார். (அ-சி)

## கசாப்புக்கு தூக்குத் தண்டனை!

மும்பை, மே 07

166 பேரைப் பலிகொண்ட மும்பைத் தாக்குதல் வழக்கில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப்புக்கு மும்பை தனி நீதிமன்றம் நேற்று தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

இந்தியாவின் பொருளாதார தலைநகரான மும்பையில் 2008நவம்பர் மாதம் பாகிஸ்தானைச் சேர்ந்த 10 தீவிரவாதிகள் கடல் மார்க்கமாக ஊடுருவித் தாக்குதல் நடத்தினர்.

மும்பையில் உள்ள தாஜ் ஹோட்டல், நாணிமன் இல்லம் ஆகியவற்றை முற்றுகையிட்டு அவர்கள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 166 பேர் பலியாகினர். 25 வெளிநாட்டினரும் இவர்களில் அடங்குவர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளில் 9 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற தீவிரவாதி மட்டும் உயிரோடு பிடிபட்டார். கசாப்புக்கு உதவியாக செயற்பட்ட இந்தியாவைச் சேர்ந்த அன்சாரி மற்றும் சபாஉதீன் அகமது ஆகியோரும் பிடிபட்டனர்.



இந்தத் தாக்குதலுக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் இ தொய்பா இயக்கம் மூளையாகச் செயற்பட்டதும் கண்டு பிடிக்கப்பட்டது. அஜ்மல் கசாப் உள்ளிட்ட 35 பேர் மீது மும்பை பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். லஷ்கர் இயக்கத் தலைவர் உள்ளிட்டோர் பாகிஸ்தானில் தலைமறைவாக இருப்பதால் கசாப் மற்றும் 2 இந்தியர்கள் மீது மட்டும் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கை மும்பை தனி நீதிமன்றம் விசாரித்து வந்தது.

கசாப்புக்கு அதிகபட்ச தண்டனையான தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று அரச தரப்பில் வலியுறுத்தப்பட்டது. கசாப் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தூக்குத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

## சட்ட மா அதிபர் திணைக்களம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலா?

### சட்டம், ஒழுங்கு சீர்குலையுமென எச்சரிக்கை

கொழும்பு, மே 7

சட்ட மா அதிபர் திணைக்களம் ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டால், நாட்டின் சட்டம், ஒழுங்கு இன்னும் மோசமாக சீர்குலைந்து விடும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் சட்ட மா அதிபர் திணைக்களம் கொண்டு வரப்பட இருக்கிறது என்று 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகை கடந்த 4 ஆம் திகதி நம்பத்தகுந்த ஆதாரங்களுடன் செய்தியொன்றைப் பிரசுரித்திருந்தது.

இந்நிலையிலேயே பாங்கொக்கைத் தளமாகக்கொண்டு இயங்கும் இந்த ஆணைக்குழு ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் சட்ட மா அதிபர் திணைக்களம் கொண்டுவரப்பட்டால் ஏற்படக் கூடிய பேராபத்துகளை விளங்கப்படுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவ.நீதிபதிக்கு பொலிஸ் பாதுகாப்பு இருந்தும் கூட இராணுவப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய நிலை!

## குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையக் கோருகிறார் "மின்னல்" ரங்கா

கொழும்பு, மே.07

தேர்தல் காலத்தில் இடம் பெற்ற கொலை ஒன்றில் சாள்ஸ் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் தென்மராட்சி ஆயுதக்குழுவுடன் சம்பந்தப் பட்டவர்.

அந்தக் கொலையின் காரணமாக, அந்த உடல் எடுக் கப்பட்டதன் காரணமாக இன்று சாவகச்சேரி நீதிவான் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஜெ. ஸ்ரீரங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றிய தனது கன்னி உரையில் இவ்வாறு தெரிவித்தார். ஸ்ரீரங்கா அங்கு மேலும் கூறியவையாவன :-

**இதுதான் இன்றைய நாட்டு நிலை**

இன்று மின்னல் ஊடாக நாங்கள் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வந்திருக்கிறவேளை, தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதனை இந்த சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகள் ஊடாக பலமுறை நாங்கள் வேண்டுகோளை விடுத்தது மாத்திரமல்லாமல் அதைச் செய்ய வேண்டும் என்ற கருவிலே நாம் அந்த நிகழ்ச்சியை நடத்திவந்தோம்.

இன்று இந்தச் சபையிலே அவசரகாலச் சட்டம் தொடர்பாகப் பேசப்படுகின்றது. அதில் பாரிய மாற்றம் ஒன்றும் ஏற்பட்டுள்ளது. அதாவது இந்த அவசரகாலச்சட்டத்தினால் பல தமிழ் பேசும் மக்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று பலர் பாதிக்கப்பட்டார்கள். அன்று மௌனமாக இருந்து விலகிச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட இன்று தலைவிதியும், வயிற்றுக்குத்தும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பதுபோல் இன்று அதனை எதிர்த்து வாக்களிக்க முன்வந்திருக்கின்றார்கள். தமிழ் பேசும் மக்களுக்குள் குற்றம் செய்யாதவர்கள் இந்த அவசரகாலச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு இன்னும் சிறைக்கைதிகளாக இருக்கும் காலகட்டத்திலே யுத்தம் முடிந்துவிட்டது என அரசு அறிவித்ததனால் இந்த அவசரகாலச் சட்டம் எங்களையும் பாதித்திடுமோ என்று எண்ணியே ஐக்கிய தேசியக் கட்சி இன்று தனக்கு வயிற்றுக்குத்து ஏற்பட்டுவிடுமோ என்ற நிலைக்கு மாற்றம் கண்டுள்ளது.

**சிறைச்சாலைகளில் வாடுகின்றார்கள்**

இன்று என்னை அனுப்பிய நுவரெலியா மக்களைப் பொறுத்தமட்டிலே சுமார் 80 க்கும் மேற்பட்டவர்கள் கைதிகளாகச் சிறைச்சாலையில் வாடிவருகிறார்கள். இந்தச் சபையிலே சிறைச்சாலைகளை உடைத்தவர்கள், ஆயுதம் தூக்கிக் கொலை செய்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொலை செய்தவர்கள் எல்லாம் இந்தச் சபையிலே உறுப்பினர்களாக இருக்கும் போது, இன்னும் அவர்கள் சிறைக் கைதிகளாக இருக்கின்றார்கள்.

வட.கிழக்கில் நடந்த யுத்தத்தின் காரணமாக மலையகத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் இன்னும் கைதிகளாக இருக்கின்றனர். எனக்கு ஊடகவியலாளராகத் தெரிந்த மட்டிலே, சிறைச்சாலைகளை உடைத்து வெளியேறியவர்களைக் கூட எங்களுக்குத் தெரியும். அவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார்கள். ஆனால் சந்தேகத்தின் கண்கொண்டு இன்னும் பலர் விளக்கமறியலில் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று சாவகச்சேரியில் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற கொலையொன்றின் காரணமாக அங்கு சார்ள்ஸ் என்கின்ற தென்மராட்சி ஆயுதக்குழுவுடன் சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலையின் காரணமாக அந்த உடல் எடுக்கப்பட்டதன் காரணமாக நீதிபதி இன்று அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

**ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும்**

இந்த அவசரகாலச் சட்டம் இப்படியான ஆயுதக்குழுக்களுக்கு ஒரு சிம்மசொற்பனமாக இருக்கின்றது. நுவரெலியா மாவட்டத்திலே நான் தேர்தலில் ஈடுபடுகின்ற பொழுது வீரகேசரி முன்பக்கத்திலே கப்பம் கேட்டு இரு இளைஞர்கள் ஹற்றன் நகரிலே பிடிபட்டார்கள் எனச் செய்தி வெளியானது. எனினும் இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது. இதனை நாம் மாற்ற வேண்டும். உண்மையில் இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதென்றால் உண்மையில் இந்த நாட்டில் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றால், ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்.

அவசரகாலச் சட்டம் என்ற போர்வையின் கீழ் ஆயுதக்குழுக்கள் இன்னும் இயங்கிக் கொண்டிருப்பதும், கப்பங்கள் வாங்குவதும் சர்வசாதாரணமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் சாவகச்சேரியில் இருக்கின்ற நீதிபதியவர்களுக்கு இப்பொழுது பொலிஸ் பாதுகாப்பு.

அதாவது (ஜே.எஸ்.டி. செக்குரிட்டி) டிவிஷனில் நீதிபதிகளுக்கான பொலிஸ் பாதுகாப்பு இருந்தும் இராணுவப் பாதுகாப்புக் கொடுக்கின்ற அளவுக்கு ஒரு ஆயதக்குழு மிரட்டி இருக்கின்றதென்றால் அது எவ்வளவு தூரம் இந்த நாடு சட்டத்தைப் பின்பற்றுகிறது என்ற 'கேள்விக்குறி ஏற்பட்டிருக்கிறது. ஒரு நீதிபதிக்குக் கூட நீதியான தீர்ப்பை வழங்க முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

**கோதுமை மாவை மானிய விலையில் வழங்க வேண்டும்.**

இன்று நுவரெலியா போன்ற பிரதேசங்களில் எல்லாம் கேட்கின்றார்கள், மாவின் விலை ஏறிவிட்டது. நாங்கள் ரொட்டியைத் தட்டித்தான் சாப்பிட்டு வருகிறோம். எங்களுக்கு பிக்கட்டிங் செய்ய முடியுமா? பிக்கட்டிங் செய்தால் அவசரகாலச் சட்டத்தின் ஊடாக வேறேதும் பெயரைச் சொல்லிப் பிடித்து விடுவார்கள் என்று கேட்கின்ற அளவுக்கு அவசரகாலச் சட்டத்துக்கு மக்கள் பயன்படுகிறார்கள். ஏன் அங்கு செல்வான், இவ்வளவு காலமும் அவசரகாலச் சட்டம் வாக்கெடுப்பு நடக்கின்ற பொழுது பின்கதவால் ஓடிவிடுகின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று இதற்கு எதிராக வாக்களிப்பதற்கு முன்னேறி இருக்கின்றதென்றால் அதன் தாக்கம் எவ்வளவு என்று இந்தச் சபையில் விளங்கும். ஐக்கிய தேசியக் கட்சி என்ன முடிவு எடுக்கின்றதோ இல்லையோ பிரஜைகள் முன்னணி சார்பில் அதன் செயலாளர் நாயகம் என்ற வகையிலே அவசரகாலச் சட்டத்திற்கு எதிர்த்து வாக்களிக்கத் தீர்மானித்திருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாங்கள் தேர்தலில் தொகுதிவாரியான கூட்டைத்தான் கொண்டிருந்தோமே ஒழிய அவர்களுடைய கொள்கைக்கும் எமது கொள்கைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நாம் எடுத்த தீர்மானத்தின்படி தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இந்த அவசரகாலச் சட்டம் செயற்பட்டு வந்திருக்கிறது. அந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து நாம் வாக்களிப்போம்.

இன்று தேர்தல் காலத்திலே பல விலைவாசிகள் குறைக்கப்பட்டன. பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஒரு தோட்டத் தொழிலாளியின் சம்பளத்தை நாளில் உயர்த்த முடியாது. ஆனால் மாவின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இன்று எமது நுவரெலியா மாவட்டத் திலே ஆளும் கட்சி [illegible]றியைக் கண்டது. ஆனால் அந்த மக்[illegible] ரொட்டியைத் தட்டித் தான் இந்த வெற்றியைப் பெற்றுக்கொடுத் திருக்கிறார்கள். இந்த ரொட்டி தட்டுபவர் ஒரு வர் வீட்டிலே இன்று ஒருவர் பேசும்போது அவர் நான் வாக்களித்த கட்சியில் அதுகுறித்து ஒருவரும் பேசவில்லை என்று கூறினார். எனது இரத்தம் கொதிக்கின்றது. ஆனால் என் னிடம் இரத்தம் இல்லை. மாவை வாங்கி ரொட்டியைத் தட்டிச் சாப்பிட முடியாதுள்ளது என்று அவர் கூறுகிறார். இந்த நிலைமை களில் அரசாங்கம் மலையகமக்களுக்கு குறிப்பாகமானியமுறையில் கோதுமைமாவை வழங்கி உதவி செய்ய வேண்டும்.

நுவரெலியாமாவட்டம் ஹற்றன் போன்ற பகுதிகளிலும் கப்பம் என்ற பெயரிலே முதலாளிமாரிடம் கப்பம் பறிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கப்பம் என்ற பெயரில் பல சிறுமிகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எனினும் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. இந்த அவசரகாலச் சட்டம் உண்மையில் செயற்படுமாக இருந்தால் இந்தக் கப்பம் கேட்கின்றவர்களுக்கு உரிய முறையில் தீர்ப்பை வழங்க வேண்டும். இன்று நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்றவர்கள் தமது பெயர்களைத் தமிழ் பெயராகக் கொண்டதால் பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் பலர் கைது செய்யப்பட்டு இன்னமும் சிறைச்சாலைகளின் இருக்கின்றார்கள். அவர்களுக்கு உரிய முறையில் வழக்குத் தொடர்ந்து அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு இந்தச் சபை உதவி செய்ய வேண்டும். எமது நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற திகாம்பரத்திற்கும் நன்கு தெரியும்.

தேர்தல் காலகட்டத்தில் நுவரெலியா மாவட்டத்திலே ஒரு பொலிஸ் 'என்ரி'கூட போட முடியாது. அந்த 'என்ரி'யில் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் பெயரைச் சொன்னால் அந்தப் பொலிஸ் 'என்ரி'யில் அந்தப் பெயர் வராது. இதுதான் ஜனநாயகம். இதுதான் நாட்டிற்குக் கிடைத்துள்ள சுதந்திரம். திகாம்பரம். அவர்களின் வாகனங்கள் பிரட்டப்பட்டன. ஆனால் பொலிஸ் 'என்ரி'யில் யார் விரட்டினார்கள் என்று குறிப்பிட்டாலும், அது அங்கு இருக்காது. இவை மாற்றப்பட வேண்டும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய உரிமை சமமாக இருக்க வேண்டும். நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமென்றால் இப்படியான நிலைமை மாற்றப்பட வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்திலே நாம் தாக்கப்படுகின்ற பொழுது பொலிஸில் 'என்ரி'யைப் போட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு சென்றால் அவர்கள் அரச தரப்பா? எதிர்த் தரப்பா? என்று கேட்கின்றனர். இதில் மாற்றம் ஏற்பட வேண்டும். நீதி எங்கு பிழைக் கின்றதோ அங்குதான் மக்கள் மத்தியில் போராட் டம் வெடிக்கும்.

**வன்முறை அரசியலை நிறுத்த வேண்டும்**

உண்மையில் இறுதியாக நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இந்த் அவசர காலச் சட்டத்தின் ஊடாகச் சந்தேகத்தின் பேரில் பிடித்தவர்களை விடுதலை செய்ய வேண்டும். இதற்கு அப்பால் நீதியை நிலை நாட்டும் வகையிலே இனி பல உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற இருக்கின்றன. இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி என்று இல்லாமல், வன்முறை அரசியலை நிறுத்தி, ஆயுதக் கலாசாரத்தை நிறுத்தி ஜனநா யக முறையி லான ஆட்சியை ஏற்படுத்த வேண்டும்.அதைவிட ஜனநாயக முறையில் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என் றால் இந்த ஆயுதக் கலாசாரத்தை நிறுத்துங்கள், வன் முறை அரசியலை நிறுத்துங் கள் என்று கேட்பது மாத்திரமல்லாமல் எமது பிரஜைகள் முன் னணி, நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நுவரெலியா மாவட்டத்திலே தேர்தல் கூட்டணியொன்றை ஏற்படுத்தி யிருந்தோம். ஆனால் நாங்கள் எமது நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணை யாமல் தனியாகத் தான் செய்வோம். - என்றார். (அ)



---

### மானிப்பாயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப மாணவி, பாடசாலை நேரம் முடிந்தும் வீடு திரும்பாததை அடுத்து தாயார் தேடிச் சென்றதாகவும் அவ ரைக் காணததையடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் தெரிவிக் கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து பெரும் எண்ணிக்கையான படையினர் மானிப்பாய் பகுதியில் குவிக்கப்பட்டு நேற்றிரவு வரை தேடுதல் இடம்பெற்றது. சிறுமியின் தந்தை வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டுச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறுமியின் குடும்பம் வசதிகள் குறைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-115-86)

---

### யுத்தக் குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக ஜனாதிபதி கருதுகிறார்.

மேலும் குறிப்பிட்ட ஆணைக்குழு மோதலின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறான நஷ்டஈட்டை வழங்குவது என்பது குறித்தும் பரிந்துரை செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

---

### வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு மீண்டும் செல்லும்போது அவர்களுக்குத் தொழில்வாய்ப்புகள் இருப்பது மிக முக்கியமானது.

இதன்மூலமே அவர்கள் தமது காலில் தாங்கள் நிற்கக்கூடிய நிலையை உருவாக்கலாம்.

எனினும், இவர்கள் அநேகமாக வருமானம், உழைப்பதற்கான வாய்ப்புகள் இல்லாத நிலையிலேயே மீளக் குடியேற்றப்படுகின்றனர்.

மீளக் குடியேறும் மக்களுக்கான பொருளாதார அடிப்படையை மீளக் கட்டியெழுப்புவதற்காக சந்தைகள், பாடசாலைகள், சுகாதார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.

எனினும், இதற்கு குறிப்பிடத்தக்க காலமும் எதிர்வரும் வருடங்களில் எமது சக நிறுவனங்களின் தீவிர முயற்சியும் தேவைப்படும்.

துரித புனர்வாழ்வு, மீள் எழுச்சித் திட்டத்தில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது குறித்தும் ஐ.நா. கவனம் செலுத்துகின்றது- என்றார். (அ-சி)


**Spoken English**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 08/06/2010
காலை - 10-11, மாலை - 5-6 (சனி, ஞாயிறு)
திங்கள் - வெள்ளி - 5-6

யோகாசன வகுப்புக்கள் ஆரம்பம்
ஆர்வம் உள்ள அனைவரையும் மற்றும் நீரிழிவு, ஆஸ்த்மா, இதயநோய்கள் உள்ளவர்களும் பங்குபற்றலாம். உடல் உள ஆரோக்கியம் சம்பந்தமான அனைத்து விடயங்களும் கற்றுத்தரப்படும்.
(மூச்சுப்பயிற்சி, தியானம், ஆசனம்)
தினமும் - காலை - 6-8 மணி, மாலை - 5-7 மணி

Sukevi English Language Centre.
பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி. (மேல் மாடியில்)
T.P.: 077-3452-130 / 021-3207-433



**CIMA UK** 100% சித்தி

CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம்
(Listed College), பரீட்சை நிலையம்
MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.
எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்

Job Gurantee Skill Migration, Australia,Canda,UK

* ICDL - International Computer Driving License
* DIE - Diploma in English (Duration 06 Months)
} Free

MCS Supported By UNDP/JRRP
(பதிவுகளுக்கு 07-05-2010 முன் நேரில்)
Call 772395895 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்



மாபெரும் 3 மாத தொடர் கருத்தரங்கும் பரீட்சையும் | கணக்கீடு A/L 2010

ஆரம்பம் 09.05.2010 ஞாயிறு ஒரு மணி - 3 மணி | ஒவ்வொரு சனி ஞாயிறும் 1-3 மணிவரை

கருத்துரை வழங்குபவர்.....
திரு.பாலகஜன் (H.N.Dip - in - Acc)

★ கொழும்பு மாவட்ட வினாத்தாள்களினை உள்ளடக்கியது.
★ முன்னணி பெறுபேற்றினை எடுப்பதற்கான சிறந்த ஒரேயொரு வழி.
★ வெளி மாவட்ட மாணவர்களும், வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
★ அதி உயர் சித்திக்கு உத்தரவாதம்.

அனுமதிகளை BEACON - யாழ்.நகர் [illegible]



ஏசியன் கல்வி நிலையம், மீசாலை
O/L Day Class, பிரிவு II
ஆரம்பம் 10.05.2010
காலை 8.00 - 1.00 மணிவரை



**Royal Veterinary Clinic (Private)**

றோயல் கால்நடை வைத்திய நிலையம் (தனியார்)

பழைய தபால் நிலையம்,
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம், தொ.பே. 0213207561

இந்த நிலையத்தில் கால்நடைகளுக்கான பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.
★ பொது ஆலோசனை (General Consultation)
★ வைத்திய சேவை (Veterinary Care)
★ தடுப்பூசி வழங்கல் (Vaccination)
★ சத்திர சிகிச்சை (Surgery)
★ பண்ணை உருவாக்கல் மற்றும் முகாமைத்துவ ஆலோசனை (Consultation on farm Planning & Management)
★ வீடுகளுக்கான நேரடி வருகை (Home Visit)

இந் நிலையம் சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்களிலும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை திறந்திருக்கும்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org